
இந்த இதழில்
இலக்கிய
மலர்கள்
ஆரம்பம்
கல்கி
KALKI 12.11.1972
45 காசு



'ஆம் ஜானகி, எனக்குத் தெரிந்த ஆரோக்கியமுள்ள குடும்பங்களில் அனைவரும் 'ஹார்லிக்ஸ்' பருகுகின்றனர். ஊட்டத்தின் முக்கிய ஆதாரமே அதுதான்'

என்கிறார் ஜானகியின் டாக்டர்.

அவர் 'ஹார்லிக்ஸ்' தரும் சிறந்த ஊட்டத்தின் குணங்களைப்பற்றி நன்கு அறிந்தவர். ஜீவாதாரமான புரதம் மற்றும் பால், கோதுமை, மால்டெட் பார்லி, இவை தரும் ஊட்டச் சிறப்பும் இயற்கைச் சத்துக்களும் அடங்கியதால் 'ஹார்லிக்ஸ்' நிகரற்று விளங்குகிறது. உதாரணமாக, பாலிலிருக்கும் ஊட்டச் சத்தை இருமடங்காகப் பெருக்குகிறது 'ஹார்லிக்ஸ்'.

குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைப் பொறுத்த வரையில் மிகச் சிறந்ததென கருதப்படுவது 'ஹார்லிக்ஸ்' தான்.

'ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்.



ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்

முழுமையான ஊட்டம் பெற-'ஹார்லிக்ஸ்'



சென்னை வெலிங்டன்
மஹாராணி
மேகலா·நாம்
மற்றும் தென்னகமெங்கும்
தண்டாயுதபாணி பிலிம்ஸ்
தேவரின்
தெய்வம்
கதை·வசனம்·தயாரிப்பு:
சாண்டோ M.M.A.சின்னப்பா தேவர்
M.A.திருமுகம்
தொடர்புகட்கு: R.M. சுப்ரமண்யன் c/o ஸ்ரீ உமையாம்பிகை பிக்சர்ஸ் சென்னை-2 போன் நெ. 85838.
ELEGANT

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்திசஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் II

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
கோவில்பட்டி	12	காலை 9-00 -- 10-00	மணி மெடிகல் மார்ட், மெயின் ரோடு.
திருநெல்வேலி ஜங்ஷன்	12	மாலை 3-00 -- 5-00	பாம்பே ஹோட்டல் லாட்ஜிங் ஹவுஸ், மெயின் ரோடு
அம்பாசமுத்திரம்	13	காலை 8-00 -- 9-30	Dr. மகாதேவ அய்யர் வீடு, மேல ரத வீதி.
தென்காசி	13	மாலை 3-00 -- 5-00	ஷண்முகம் மெடிகல் ஸ்டோர்ஸ், வடக்கு ரத வீதி.
ராஜபாளையம்	14	காலை 9-00 -- 10-00	ஸ்ரீ R. A. முத்துசாமி பிள்ளை மெடிகல் ஸ்டோர்ஸ், பாங்கு ரோடு.
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 -- 11-30	ஸ்ரீ A. L. நாராயணய்யர், ஜவுளிக்கடை, கந்தாடைத் தெரு.
பெரியகுளம்	14	மாலை 3-30 -- 5-00	யூனைடெட் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திண்டுக்கல்	15	காலை 8-00 -- 9-30	K. M. மெடிகல் ஸ்டோர்ஸ், அம்மன் சன்னதி தெரு.
நாமக்கல்	15	மாலை 3-30 -- 4-30	கஸ்தூரிபா மெடிகல் ஸ்டோர்ஸ், பரமத்தி ரோடு.
ராசிபுரம்	15	மாலை 5-30 -- 6-30	ராசிபுரம் மெடிகல் சப்ளைஸ்.
சேலம்	16	காலை 9-11	லக்ஷ்மி ராஜ்பவன், (டவுன் ஸ்டேஷன் எதிர்புறம்)
,,	16	மாலை 3-5	
,, செவ். பேட்டை	16	மாலை 1-30 -- 2-30	பிரபாத் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
தர்மபுரி	17	காலை 10-00 -- 12-00	P. S. வெங்கடேஸ்வரய்யர் வீடு, யூனியன் ஆபீஸ் தெரு
கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 -- 5-00	No. 4, சென்னை ரோடு.
திருப்பத்தூர் N. A.	18	காலை 9-00 -- 11-00	சாரதா மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
வேலூர் N. A.	18	மாலை 3-00 -- 5-00	A. S. A. அண்டு கோ., லாங் பஜார்.
பெரிய காஞ்சிபுரம்	19	காலை 9-00 -- 10-00	H. மாதவன் அண்டு கோ., ராஜ வீதி.
சென்னை	19	மாலை 3-30 -- 5-00	SP. S. S. கெமிஸ்ட்ஸ், பாண்டிபஜார், தி. நகர்.
சென்னை	20	காலை 9-00 -- 11-00	P. L. R. அண்டு கோ., 68, பெரிய தெரு, திருவல்லிக்கேணி.
சென்னை	20	மாலை 3-00 -- 5-00	P. L. R. அண்டு கோ., தெப்பக்குளம், மைலாப்பூர்.
செங்கற்பட்டு	21	காலை 10-00 -- 11 00	அம்பீஸ் ஸ்டோர்ஸ், பெரிய செட்டித் தெரு.
திண்டிவனம்	21	மாலை 3-00 -- 4-00	ஜெயராம் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி (முன்சிப் கோர்ட் எதிர்புறம்)
விழுப்புரம்	21	மாலை 5-00 -- 6-00	மீனாட்சி டொபாக்கோ கம்பெனி, திரு. வி. க. ரோடு.
திருவண்ணாமலை N. A.	22	காலை 8-30 -- 10-00	பாரத் மெடிகல் எம்போரியம், கிழக்கு ரத வீதி.
திருக்கோவிலூர்	22	காலை 11-00 -- 12-00	ஸ்ரீ கிருஷ்ணா மெடிகல் ஹால், சன்னதி தெரு.
கடலூர் N. T.	22	மாலை 4-00 -- 5-30	மணி பார்மஸி, நேபியர் ரோடு, மஞ்சக்குப்பம்.
நெய்வேலி	23	காலை 7-00 -- 11-30	ப்ளாக் 13, வைதிக சமாஜம், தீபாலே.
சிதம்பரம்	23	மாலை 3-00 -- 4-00	பாரதிய ஆயுர்வேத அமிர்த நிலையம், கமலேஸ்வரன் கோயில் தெரு.
விருத்தாசலம்	23	மாலை 5-00 -- 6-00	K. குப்புசாமி நாயுடு வீடு, கடைவீதி.
கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 -- 9-30	தி மெடிகல் சப்ளைஸ், கடை வீதி.
ஆத்தூர்	24	காலை 11-00 -- 12-00	வாஸவி மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
துறையூர்	24	மாலை 3-30 -- 5-00	M. V. மளிகை அண்டு ஷாப், கடை வீதி.
பெங்களூர்-3	26	காலை 9-11	14, V. கிராஸ் ரோடு, மல்லேஸ்வரம்.
		மாலை 3-5	

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 3 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை, B-II, 1வது கிராஸ், தில்லைநகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன்: 87) திருச்சி ஜில்லா



கல்கி

பொருளடக்கம்

பரீதாபி, ஐப்பசி 27 ○ நவம்பர் 12, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.

உ

திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்




இத்திருக்கோவிலில் தங்கரதம் செய்வதற்கு ஏற்பாடாகி வேலையும் நடந்து வருகிறது. அதற்கு நன்கொடையாகத் தங்கமோ, பணமோ, திருக்கோவில் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பிச் செந்திலாண்டவன் கருணைக்குப் பாத்திரமாக வேண்டுகிறோம்.


தவிரவும் இத்திருக்கோவிலில் சுவாமி, அம்பாள் அலங்காரத்திற்கு புஷ்பம் சாத்த வேண்டிய வகைக்கு "புஷ்ப கட்டளை நிதி" என்று ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இது வகைக்கும் பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் கோவில் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டப்படுகிறது.

திருச்செந்தூர்
27-9-72

வி. கே. வேலுசாமி, பி. ஏ.,
நிர்வாக அதிகாரி.



முப்படைகளையும் சேர்ந்த தொண்ணூற்றுமூன்று பேர்களுக்கு ராஷ்டிரபதி வீரசக்கர விருது அளித்தார். — செய்தி



மந்திரிகள் வீடு கட்டிக்கொண்டால் என்ன தவறு? — திருமதி சத்தியவாணிமுத்து

கல்கி

மலர் 32

இதழ் 15

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

மகத்தான தீர்ப்பு

மத்திய அரசாங்கம் பத்திரிகைக் காகித விநியோகத்தில் கட்டுப்பாடு செய்ய உத்தேசித்திருந்தது. இதன் முக்கிய அம்சம், தினசரிகளுக்குப் பத்து பக்க உச்சவரம்பு விதிப்பதும், பத்து பக்க அடிப்படையில் அவற்றுக்குத் தேவைப்படும் காகித அளவை நிர்ணயித்து வழங்குவதும் ஆகும். இவ் விதிகள் மக்களின் ஆதார உரிமைகளாகிய கருத்துச் சுதந்திரத்தையும், பத்திரிகைச் சுதந்திரத்தையும் குறைக்க முற்படுவதால் அரசியல் சாஸனத்துக்கு விரோதமானவை என்றும் எனவே, இவை செல்லாது என்றும், இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இது சுதந்திர அபிமானிகள் வரவேற்கும் மகத்தான தீர்ப்பாகும். அரசியல் சாஸனத்தில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள்தாம் ஜனநாயகத்துக்கே ஆதாரம். உயர்நீதிமன்றம் இவ்விஷயத்தில் கூறியுள்ள விளக்கம் நம்முடைய அடிப்படை உரிமைகளை வலிமையுடன் பாதுகாப்பதாகும்.

இத் தீர்ப்பின் சாராம்சத்தையும் உயர்நீதி மன்றம் அளித்துள்ள விளக்கங்களையும் நம் நாட்டு மக்கள் புரிந்து கொள்வது நன்மை தரும்.

பத்திரிகைச் சுதந்திரம் என்பது உண்மையில் மக்களது பேச்சு உரிமையே. தனக்குத் தோன்றிய எத்தகைய கருத்தையும் எடுத்துச் சொல்ல எந்தப் பிரஜைக்கும் உரிமை உண்டு. கருத்துக்களை விவாதிக்கவும் எல்லோருக்கும் உரிமை உண்டு. தங்கு தடையில்லாத இம்மாதிரி விவாதங்கள் மூலமே ஜனநாயகம் இயங்குகிறது. மக்கள் கருத்துக்களைப் பத்திரிகைகள் தங்கு தடையின்றிப் பிரசுரிக்கத் தாராளமாய் இடமிருக்க வேண்டும். எனவே, இவ்வளவு பக்கங்கள்தாம் ஒரு பத்திரிகை பிரசுரிக்கலாம்; இத்தனை பத்திரிகைகள்தாம் நாட்டில் இருக்க வேண்டும்; புதிய பத்திரிகைகள் துவங்கக் கூடாது என்று நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடையோ தடங்கலோ ஏற்படுத்துவது, பேச்சு உரிமையைப் பாதிப்பதாகும். இது ஜனநாயகத்துக்கு முரணானது. எவ்வளவு பக்கம் வேண்டுமானாலும் பத்திரிகைகள் பிரசுரிப்பதும், எத்தனை வாசகர்களுக்கு வேண்டுமானாலும் அவற்றை விநியோகம் செய்வதும், பேச்சுச் சுதந்திரத்தின் இன்றியமையாத ஓர் அம்சமாகும்.

இவ்விதமாகத் தீர்ப்பு விளக்கம் கூறிப் பேச்சு உரிமையை உயர் நீதி மன்றம் ஸ்தாபித்துக் கொடுத்துள்ளது. நம் நாட்டில் நமக்குத் தேவையான பத்திரிகைக் காகிதம் உற்பத்தியாவதில்லை. இறக்குமதி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. இதற்காக அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. ஆனால் இதைக் காரணமாகக் காட்டிப் பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்துதல் ஜனநாயகத்தில் முறையன்று. ஆட்சி புரிபவர்களிடமுள்ள குறைகளையும், ஊழல்களையும் எடுத்துரைத்து ஜனநாயகத்துக்குப் பத்திரிகைகள் ஆற்றும் நற்பணி இதனால் பாதிக்கப்படும். சுதந்திரம் பெற்று இருபத்தைந்து ஆண்டுகளான பின்னரும்கூட, உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமை படைத்திருந்தும்கூட, ஜனநாயகத்தின் வளர்ச்சிக்குப் பேச்சுச் சுதந்திரமும் பத்திரிகை வளர்ச்சியும் இன்றியமையாதவை என்ற அடிப்படை உண்மையை நீதிமன்றம் அரசுக்கு விளக்கி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது பரிதாபம்.

நீதிமன்றத் தீர்ப்பை எப்படிப் பயனற்றதாகச் செய்யலாம், ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தைப் பத்திரிகைகள் மீது வேறு எந்த முறையில் செலுத்தலாம் என்று அரசாங்கம் மீண்டும் ஆராய்ச்சி செய்யக் கூடும். ஆனால் அவ்வாறு செய்தல் அரசியல் விவேகமின்மையைத்தான் காட்டும். அவ்விதம் செய்வதற்குப் பதிலாக, உருப்படியான முறையில், அரசு செயல்பட வேண்டும். அதிக அளவுக்கு உயர்தரமான பத்திரிகைக் காகிதத்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முயல்வதும், அதன்பின் அயல்நாட்டிலிருந்து இறக்குமதியைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதும் நன்மை அளிக்கும். அவசியமில்லாத பல இனங்களில் விரயமாகும் அந்நியச் செலாவணியில் சிறிது பாகத்தை மிக அவசியமான பத்திரிகைக் காகித இறக்குமதிக்கு அநுமதிப்பதால் நாட்டுப் பொருளாதாரம் சீர்கெட்டு விடாது.

ஆமதாபாத் உப தேர்தல்

புதிய காங்கிரஸை எதிர்த்து ஆமதாபாத் உபதேர்தலில் வெற்றி பெற்று லோக சபைக்குச் சுயேச்சை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு மாவ்லங்கருக்கு நமது வாழ்த்துக்கள் உரித்தாகும்.

ஒரு தேர்தலுக்கும் மறு தேர்தலுக்குமிடையிலுள்ள ஐந்தாண்டு கால இடைவெளியில் ஆட்சி புரியும் கட்சிகளின் குறைகளைச் சுட்டிக் காட்டவும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிக் காட்டவும் உபதேர்தல்கள் சந்தர்ப்பம் அளிக்கின்றன. இவ்விதமாகப் பார்த்தால் ஆமதாபாத் உபதேர்தல் நாட்டில் பரவலாக உள்ள அதிருப்தியையும் வெறுப்பு உணர்ச்சியையும் பிரதிபலிப்பதாகும். அதிருப்தி மக்களிடையே மேலும் மேலும் அதிகமாகப் பரவுவதற்குத் துணையாகத்தான் நாட்டின் இன்றைய நிலைமை இருக்கிறதே தவிர, குறைய மார்க்கம் இருப்பதாகத் தோன்றவில்லை.

வெற்றி பெற்ற திரு புருஷோத்தம் மாவ்லங்கருக்குப் பழைய காங்கிரஸ், சுதந்திரா, ஜனசங்கம், சோஷலிஸ்டு முதலிய எல்லா எதிர்க் கட்சிகளின் ஆதரவும் இருந்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இதனால் வாக்காளர்களின் வோட்டுகள் பல அபேட்சகர்களிடையே சிதறிப் போகாமல், நேருக்கு நேர் போட்டி என்ற முறையில் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. இதிலிருந்து மற்றொரு உண்மை புலனாகும். சக்திவாய்ந்த எதிர்க் கட்சி உருப்பெற வேண்டுமானால், சில்லறைக் கட்சிகள் தங்கள் வேற்றுமைகளை ஒதுக்கி வைத்து, ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும் என்பதே அந்த உண்மை. அப்போதுதான் ஜனநாயகம் செழிக்கும். இந்த உண்மையைத் தலைவர் ராஜாஜி அடிக்கடி வலியுறுத்தி வருகிறார். திரு மாவ்லங்கரின் வெற்றி இதை நிரூபித்துக் காட்டுகிறது.

எழுத்தில் வல்ல நல்லவர் மறைவு

ஆங்கிலப் பத்திரிகை உலகின் ஜாம்பவானாக விளங்கி வந்த போதன் ஜோஸப் அவர்களின் மறைவு குறித்து மிகவும் வருந்துகிறோம். போதன் ஜோஸபும், அவரது சகோதரர் ஜார்ஜ் ஜோஸபும் தங்களது சக்தி வாய்ந்த எழுத்து மூலம் சுதந்திரப் போராட்டத்துக்கு அரிய தொண்டு செய்த தேசபக்த திலகங்களாவர். காஸா சுப்பாராவ் அவர்களின் மறைவுக்குப்பின் 'ஸ்வராஜ்யா' ஆசிரியராகப் பல்லாண்டுகள் நற்பணி புரிந்தார் போதன் ஜோஸப். அவர் கிறிஸ்துவ வேதமாகிய பைபிளில் ஊறித் திளைத்தவர். எவரையும் புண்படுத்தாத அற்புத நகைச்சுவை மிளிர எழுதிய பண்பாளர். நன்றாகக் கற்று, நன்றாக எழுதி, வல்லவராக வாழ்ந்த போதன் ஜோஸப் அவர்களின் பிரிவு குறித்து ராஜாஜி உள்ளம் உருகி எழுதுவதாவது : ''காலமடைந்தவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதென்பது எனக்கு மேன்மேலும் துயரகரமாகி வருகிறது. போதன் ஜோஸபின் மறைவு என்னிடமிருந்து வார்த்தைகளை வரவழைக்கவில்லை; கண்ணீர்த் துளிகளையே வரவழைக்கிறது. இதயத்திலிருந்து கண்ணீரைப் பெருக்குவது தவிர மற்றக் காரியமெல்லாம் குரல் வளையைப் பிடித்தாற்போல் நின்று போகிற துக்கம் உண்டாகிறது.



''சரீரமானது இறுதி நாட்களின் இன்னல்களை அனுபவிக்கிறபோது மரணமே வரவேற்புக்குரிய நண்பனாகிறது. போதன் ஜோஸப் விஷயம் இப்படிப்பட்டதே.

''பத்திரிகை உலகம் தனது தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவரை இழந்து விட்டது. தொடக்கத்திலிருந்து முடிவு வரையில் பத்திரிகையாளராக இருந்தவர் போதன் ஜோஸப். பெரும்பாலான பத்திரிகையாளரைவிட அரசியலில் தேர்ந்த அறிவு பெற்றவர் அவர்.

''என் இதயத்திலிருந்து பெருகும் சகோதர சோகத்தைத் தம்மோடு கொண்டு செல்கிறார் போதன். இத்தனை நாட்கள் இருந்ததைவிட இப்போது உலகம் எனக்கு அதிக வெறுமை கொண்டதாகிவிட்டது. போதன் குடும்பம் என்னிடமிருந்து ஆறுதல் மொழி எதிர்பார்க்கிறது. பகவான்தான் புண்களை ஆற்றுபவன். போதன் குடும்பம் இந்தியாவின் அற்புதக் குடும்பங்களில் ஒன்று. அந்தக் குடும்பத்தில் இன்று போதனை இழந்து நிற்பவர்களுக்குப் பகவானின் அனுக்கிரகத்தைப் பிரார்த்திக்கிறேன். ஜார்ஜ் ஜோஸப், போதன் ஜோஸப் இவ்விருவரும் விட்டுச் சென்ற குடும்ப அங்கத்தினர்களுக்காக நான் எவ்வளவு கண்ணீர் சிந்தினாலும் போதாது.''



இரகசியம்— அமுல் மில்க் பவுடர்!

லஸ்ஸி தயாரிக்கத் தயிர், பச்சடிக்குத் தயிர், தயிர் வடைக்குத் தயிர், இவற்றுக்காகக் கட்டியான ஆடைத் தயிரைப் பெறுவதற்கு, அமுல் மில்க் பவுடரிலிருந்து தயாரித்த பால் எடுத்துக்கொள்ளுங்கள். கொதிநிலைக்கு சூடாக்குங்கள். பின்னர் இளம் சூடாகும் வரைக் குளிர விடுங்கள். அரை அல்லது ஒரு தேக்கரண்டி நல்ல தயிரைத் தோய விடுங்கள். படிய விடுங்கள்.

ஆரோக்கியமான நல்ல பாலைத் தட்டில்லாமல் பெறவும், இனிப்புகள் மற்றும் பழத் தின்பண்டங்கள் தயாரிக்கவும் சிறந்தது, அமுல் மில்க் பவுடர். கறியுடன் இரண்டொரு ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் சேர்த்தால், வளமுடன் சுவை கொழிக்கும். மிகவும் வசதியானது; சிக்கனமானதும் கூட!



அமுல் மில்க் பவுடர்—
ஆரோக்கியமான நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

ASP/AMP-13 TAN

தமிழ் நாட்டிலே... — தீரன்

கைத்தறி விற்பனை ஸ்டண்ட்

கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிவிட்டதால் அரசியல் சந்தடிகளிடையேயும் கைத்தறி நெசவாளருக்கு அமைச்சர்கள் உதவ முன்வந்துள்ளனர். இது பாராட்டுக்குரியது என்றாலும் அதையும் ஒரு 'ஸ்டண்ட்' போல் அவர்கள் சுய விளம்பரமாகச் செய்துவிட்டது பாராட்டுக்கு உரியதில்லை. இதனால் பயன் அடைந்த கைத்தறி நெசவாளர்கள் மேல் நமக்கு முழு அநுதாபமும் ஆதரவும் உண்டு. கண்ணொளி வழங்கல், பட்டா வழங்கல், பிச்சைக்காரர் நிதி போல் இதுவும் ஒரு விளம்பர விழாவாக, ஏதோ ஒரு கட்சிதான் இதைச் செய்ய முடியும் என்பது போல் நடத்தப்பட்டு விட்டிருக்கிறது. தேர்த் திருவிழா ஊர்வலம் வருவது போல் ஒவ்வோர் ஊரிலும் ஓர் அமைச்சர் உலா வந்து



புகைப்படம், திரைப் படம் எல்லாவற்றுக்கும் போஸ் கொடுத்துக் கொண்டே 'இரத கஜ துரக பதாதி'கள் புடைசூழக் கைத்தறித் துணி விற்றிருக்கிறார்கள். தீபாவளி நெருக்கமாக இருக்கும்போது இயல்பாகவே விற்கிற துணிகளைத் தாங்களே விற்று முடித்தது போல் காட்டிக் கொள்ள மிகவும் வசதியா யிருந்தது. அமைச்சர்களுக்குத் தீபாவளி பிடிக்குமோ, பிடிக்காதோ அதற்காகத் துணி விற்பது பிடித்திருக்கிறது.

கன்னியாகுமரியில் சட்ட சபை எதிர்க் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார், சென்னை பார்க் டவுன் பகுதியில் டாக்டர் ஹண்டே என்று இரண்டு மூன்று இடங்களிலாவது வேறு கட்சிக்காரர்களையும் உடன் அழைத்துக் கொண்டு சென்று அவர்களையும் கைத்தறித் துணி விற்கச் செய்து எல்லாக் கட்சிக்காரர்களும் இந்த நல்ல காரியத்தைச் செய்ய விரும்புவதை மக்களுக்குக் காட்டியிருக்கலாம். ஆனால் தி. மு. க. அரசுக்கு ஏது அவ்வளவு பெருந் தன்மை? ஒரே நாளில் பல ஊர்களில் தி. மு. க. அமைச்சர்கள் பவனி. மறு நாள் காலையிலேயே தங்கள் கட்சிப் பத்திரிகைகளில் ''ஒரே நாளில் ஐம்பது லட்ச ரூபாய்க்கு விற்பனை'' என்று செய்தி. 'ஒரு நிமிஷத்துக்கு ஒரு துணி வீதம் விற்றாலும் ஒரே நாளில் ஐம்பது லட்சத்துக்கு விற்க முடியாது' என்று ஒரு துணி விற்பனை நிபுணர் கூறுவதையும் ''ஒரே நாளில் ஐம்பது லட்சத்துக்குக் கைத்தறித் துணி விற்பனை ஆனதாகக் கலைஞர் கூறுகிறார். இதன் இரகசியம் என்ன தெரியுமா? மந்திரிகள் விற்ற ஒரே நாளில்தான் அதிகமாக விற்பனை ஆனதாகக் காட்டுவதற்கென்றே ஒரு வாரமாக விற்ற துணிகளுக்கு பில் போடாமல் இந்தக் குறிப்பிட்ட தினத்திலேயே எல்லாத் துணிகளுக்கும் பில் போடப்பட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்'' என்று எம். ஜி. ஆர். கூறியிருப்பதையும் ஒப்பிட்டு நினைக்கத் தோன்றுகிறது.

செங்கல்பட்டு கலெக்டர் மாற்றம்

தி. மு. க.வில் ஏற்பட்டுள்ள பிளவின் காரணமாக ஒரு பாவமும் அறியாத ஒரு கலெக்டர் திடீரென்று 24 மணி நேரத்தில் மாற்றப்பட்டிருப்பதை முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் கண்டித்திருக்கிறார்.

''செங்கல்பட்டு மாவட்டக் கலெக்டரை உடனே மாற்ற அவர் செய்த தவறு என்ன? மக்களின் நன்மதிப்பையும் அபிமானத்தையும் பெற்ற கலெக்டராக அவர் இருந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எம். ஜி. ஆரின் பொதுக்கூட்டத்துக்குக் காஞ்சீபுரத்தில் லட்சக் கணக்கான மக்கள் கூடினால் அதற்குக் கலெக்டர் என்ன செய்ய முடியும்? கலெக்டர் மாற்றம் வழக்கமாகச் செய்யப்பட்ட மாறுதல் என்று முதல்வர் கூறுவாரானாலும் அது வீண் சமாதானமே. நிர்வாகத்தில் கட்சிக் குறுக்கீடு என்பதற்கு இதைவிட வேறு உதாரணமே தேவை இல்லை'' என்பது முன்னாள் முதல்வரின் அறிக்கை. இந்நாள் முதல்வர் இதுநாள் வரை இதற்குப் பதில் எதுவும் தெளிவாகக் கூறவில்லை. அவருக்கு வேறென்ன கவலையோ? பாவம்!

கண்ணமங்கலம் துப்பாக்கிச் சூடு

வேலூர் அருகே உள்ள கண்ணமங்கலத்தில் அக்டோபர் 29ந் தேதி இரவு தி. மு. க.வினர் ஏதோ கொள்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். பேசிய சிலர் தி. மு. க.விலிருந்து நீக்கப்பட்ட எம். ஜி. ஆரைக் கடுமையாகத் தாக்கிப் பேசவே கூட்டத்தில் எதிர்ப்பு எழுந்து கலகமாக மாறியிருக்கிறது. பேச்சாளர்கள் போலீஸ் ஸ்டேஷனில் தஞ்சம் அடைகிற அளவுக்கு நிலைமை முற்றி, முடிவில் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்து ஒரு பாபமும் அறியாத எட்டாவது வகுப்புப் படிக்கும் மாணவன் ஒருவன் மாண்டிருக்கிறான். ஒரு கட்சியின் உட் பூசல்களினால் மூளும் விரோதங்களைத் தீர்த்துக் கொள்ளத் துப்பாக்கிப் பிரயோகம் அவசியம்தானா? கலைஞர் — எம். ஜி. ஆர். பிளவில் இது மூன்றாவது துப்பாக்கிப் பிரயோகம். ஏற்

லேயே இரண்டு ஊர்களில் இப்படித் துப்பாக்கிச் சூடு நடந்து விட்டது. வன்முறைகளைக் கண்டித்து அடிக்கடி உபதேசம் செய்யும் கலைஞர் மாற்றார் மனம் புண்படக் கொதிக்காதவாறு பேசும் பண்பினைத் தம் ஆட்களுக்கு எப்போதுதான் கற்பித்துத் தரப் போகிறாரோ? தெரியவில்லை. சென்னையிலோ பரீட்சை எழுதிவிட்டு வந்து பச்சையப்பன் கல்லூரி வாசலில் நின்ற சட்டக் கல்லூரி மாணவர் ஒருவர், கண்ணே பறிபோகும்படி தாக்கப் பட்டிருக்கிறார். மதுரையில் காங்கிரஸ் ஊழியர்கள் சிலர், சோடா புட்டி எறிதலுக்கும், கத்திக் குத்துக்கும் ஆளாகியிருக்கிறார்கள். 'கண்ணமங்கலம்' போன்ற நிகழ்ச்சிகள் தொடர்வது கலைஞர் ஆட்சிக்கு நல்லதில்லை. காலம் எச்சரித்திருப்பதை அவர் அறிய வேண்டும்.

மழுப்பலான பதில்

'மந்திரிகளின் சொத்து பற்றி மக்களிடையே நிலவும் சந்தேகங்களைப் போக்க வேண்டிய கடமை தமிழக மந்திரிகளுக்கு இருக்கிறது' என்று மத்திய மந்திரி ஒருவர் கூறியதற்குப் பதிலாக,


''எம். ஜி. ஆரும் அவரது கட்சியில் சேர்ந்துள்ள எம். எல். ஏ.க்களும் முதலில் சொத்துக் கணக்கைக் காண்பித்து முன்னுதாரணமாகலாமே'' என்கிறார் முதல்வர் கருணாநிதி. மந்திரிகளாகவோ, ஆட்சியில் இருப்பவர்களாகவோ இல்லாத எம். ஜி. ஆரும், அவரைச் சேர்ந்தவர்களும் முன்னுதாரணம் ஆவதைவிட, இன்று ஆட்சியில் இருக்கும் மந்திரிகளும் அவரைச் சேர்ந்தவர்களும் அவசரமாக அவசியமாக முன்னுதாரணம் ஆகிவிடுவதே நல்லது. அவர்களே விரும்பும் சுய விளம்பரத்துக்கும் அது சாதகமாக இருக்குமே!


சுயரூபம் இதுவே

'முன்பு தி. மு. க. அரசு நியமித்த மது விலக்குப் பிரசாரக் குழுவின் தலைவரான எம். ஜி. ஆர். இப்போது தி. மு. க.விலிருந்து விலகி, அ. தி. மு. க. வைத் தொடங்கிவிட்டதால் இனி யாரை அப்பிரசாரக் குழுவின் தலைவராக நியமிப்பீர்கள்?' என்று தமிழக முதல்வர் கருணாநிதியிடம் கேட்கப்பட்டபோது, 'எம். ஜி. ஆருக்குப் பதிலாகப் புதுத் தலைவரை நியமிக்கும் பிரச்னை இல்லை' என்று முதல்வர் பதில் கூறிக் கைகழுவி விட்டுவிட்டார். இதிலிருந்து தெரிவது என்ன? எம். ஜி. ஆர். விலகியபின் ஒப்புக்குக் கூட மதுவிலக்குப் பிரசாரம் செய்ய க. தி. மு. க. (கலைஞர் தி. மு. க.) தயாராக இல்லை. எம். ஜி. ஆர். போனதோடு மதுவிலக்குப் பிரசாரமும் தம் கட்சியை விட்டுப் போகட்டும் என்று கலைஞர் அதற்குத் தலை முழுகிவிட்டதையே இந்தப் பதில் நிரூபணம் செய்கிறது.

விபீஷணனும் முருகனும்

தி.மு.க.வில் பிளவு வந்தாலும் வந்தது மார்க்கண்டேயன், முருகன், விபீஷணன் ஆகிய புராண புருஷர்களுக்கும் ஒரு யோகம்





ஸாரிடான உங்களுக்கு நிவாரண
மளித்து, சுறுசுறுப்
புடனும், துடிப்புடனும்
இருக்க உதவுகிறது.

ஸாரிடான்
ட்ரேட் மார்க் 'ரோச்'

அடித்திருக்கிறது. முன்பு மார்க்கண்டேயனோடு ஒப்பிட்டது தவிர, எம். ஜி. ஆரை விபீஷணனோடு ஒப்பிட்டு, இப்போது ஒரு தி. மு. க. அமைச்சர் பேசியுள்ளார். (இராமாயணப்படி விபீஷணன் மிக உயர்ந்த கதா பாத்திரம். அரக்கர்களை அழிக்கத் தெய்வத்துக்குத் துணை வந்த வீரன்.)

''எந்த அமைச்சரும் ஒரு காசு கூட லஞ்சம் வாங்கவில்லை என்பதைத் திருச்செந்தூர் முருகன் கோயிலில் சத்தியம் செய்யத் தயார்'' என்று திடீரென்று அமைச்சர் ஆதித்தன் முருகனைச் சாட்சிக்கு அழைத்துப் பேசியிருக்கிறார். 'ஆதித்தனாரின் முருக பக்தியை முதல்வர் கருணாநிதியின் சுயமரியாதைக் கொள்கைக்குச் சமர்ப்பிக்கிறேன்' என எம். ஜி. ஆர். இதுபற்றி விமர்சனமும் செய்தாயிற்று.

அ. தி. மு. க. வளர்ச்சி

இந்த வாரத்துக்காக இந்தப் பகுதி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போது எம். ஜி. ஆரின் அ. தி. மு. க.வில் மேலும் இரண்டு எம்.எல்.ஏ.க்களும் ஓர் எம்.பி.யும் சேர்ந்திருக்கிறார்கள். ''எம்.ஜி.ஆர். மட்டுமின்றி, அ.தி.மு.க.வில் 40 பேருக்கு மேல் போய்ச் சேர்ந்து விட்டாலும் எனக்குக் கவலை இல்லை'' என்று கருணாநிதி கூறியிருப்பதால் தம்முடைய க.தி.மு.க. (கலைஞர் தி.மு.க.)விலிருந்து 40 பேருக்கு மேல் அ.தி.மு.க.வுக்குப் போனாலும் போகக் கூடும் என்ற சந்தேகம் கலைஞருக்கே இருப்பது தெரிகிறது.

பாலம் சரிவு

கிண்டியில் பொறியியற் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்டு வந்த மேற்கூரை (ரூஃபிங்) சரிந்தது போல் இப்போது கோவை அவிநாசி ரோட்டில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ரயில்வே மேம்பாலம் ஒன்று திடீரென்று சரிந்து 75 வேலையாட்களும் 4 அதிகாரிகளும் படுகாயம் அடைந்துள்ளனர். நல்லவேளையாக உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. பொது உபயோகத்துக்கான ஒரு கட்டிடமோ, மேல் பாலமோ இப்படிக் கட்டும்போதே சரிவதன் காரணம் தீவிரமாக ஆராயவும், கவலைப்படவும் உரியது. பாலங்கள் கட்டும்போதே சரிந்தால் அவை கட்டப்பட்ட பின், அவற்றின் மேல் ரயில்களும், கார்களும், லாரிகளும் நம்பிக்கையோடு எப்படி ஓட முடியும்? இந்தச் சரிவின் மூலகாரணம் எல்லாத் துறைகளிலும் தரம் சரிந்திருப்பதுதானா? அல்லது வேறு ஏதாவதா என்பது தெரிய வேண்டும்.

வசதிக் குறைவு

தமிழ் நாட்டில் மீட்டர்கேஜ் இரயில் பெட்டிகளில் உள்ள திரீ டயர் என்னும் மூன்றடுக்குத் தூங்கும் வசதி, தூங்குகிறவர்களைச் சித்திரவதைக் குள்ளாக்குகிறது. நீள அகலக் குறைவான இந்த 'பெர்த்'களில் படுக்கிறவர் முழங்கால் பகுதிக்கு மேல் அந்தரத்தில் தொங்க விட வேண்டியிருப்பதால் பணத்தையும் கொடுத்துப் பயணச்சீட்டு வாங்கி விட்டுத் தூங்க முடியாமல் போகிறது. உச்சியில் உள்ள மூன்றாவது அடுக்கில் படுப்பவர் மேலே ஏறித் தன் உடம்பை அப்படியே செருகிக்கொள்ள வேண்டியிருக்கிறதே ஒழியத் தன் சுபாவமாக ஏறவோ இறங்கவோ முடிவதில்லை. 'அப்பர் பெர்த்' என்று பெயர் இருப்பதாலோ என்னவோ அப்பர் ஸ்வாமிகள் கைலாய யாத்திரை சென்றது போல் அங்கங்களை யெல்லாம் தேய்த்துக் கொண்டு ஒடுக்கி முடக்கிக் கொண்டுதான் இந்த மூன்றடுக்கு அப்பரில் ஏற முடிகிறது. இந்தப் பயங்கரமான வசதிக் குறைவை இரயில்வே நிர்வாகம் உடன் கவனிக்க வேண்டும். உரிய மாறுதலும் செய்ய வேண்டும்.

விநோதமான போராட்டம்


புதுக்கோட்டையில் ஒரு விநோதமான வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. அங்குள்ள ஒரு ஜவுளி ஆலையின் தொழிலாளர்கள் சிலர் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காகப் பஞ்சாலைக்குள் வேறு ஆடைகள் எதுவும் அணியாமல் வெறும் கோவணம் மட்டுமே அணிந்து வேலைக்கு வந்திருந்தார்கள். காஷுவல் லீவு, போனஸ், அட்வான்ஸ் சம்பந்தமாகத் தங்களுக்குள்ள மனத்தாங்கல்களை நிர்வாகத்துக்கு வற்புறுத்தவே இந்த விநோதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

மானத்தை மறைக்கும் ஆடைகளும், நூலும் உற்பத்தியாகும் இடம் எதுவோ அங்கேயே இந்தப் போராட்டம் நடைபெற்றுள்ளது. போகட்டும்! வேறு எது வளராவிட்டாலும் போராட்டங்களிலாவது இங்கு புதுப் புது உத்திகள் வளரத் தொடங்கியிருக்கின்றனவே!

பாவம், அதிகாரிகள்!

பொதுக் காரியங்களுக்காகவும், தங்களுடைய சொந்தக் கட்சிக் கூட்டங்களுக்காகவும் மந்திரிகள் பல மாவட்டத் தலைநகரங்களுக்கும் வெளியூர்களுக்கும் அடிக்கடி விஜயம் செய்கிறார்கள். அப்போதெல்லாம் மாவட்ட மட்டத்திலான உயர் அதிகாரிகள் பலர் தர்மசங்கடத்துக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. பொதுவாக மந்திரிகளை வரவேற்கவும், அவர்களோடு உடனிருந்து சுற்றவுமே மாவட்டப் பெரிய அதிகாரிகளின் நேரம் முழுவதும் கழிந்து விட்டால் அப்புறம் அவர்கள் எப்போது உத்தியோகம் பார்க்க முடியும்? கட்சி வேலையாக மந்திரி ஓர் ஊருக்கு வரும்போதுகூட அதிகாரிகள் அவரை வரவேற்கக் காத்திருக்க வேண்டும் என்று மந்திரியே எதிர்பார்ப்பதோ, அதிகாரிகளே வலிந்து போய் நிற்பதோ தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏதாவது ஒரு மந்திரி சுற்றுப் பயணம் செய்து கொண்டுதான் இருப்பார். மாற்றி மாற்றி வருகிற மந்திரிகளையே கவனித்தால் சர்க்கார் அதிகாரிகள் வேறு வேலையையே செய்ய முடியாது.

உறுதியான கட்டடங்கள் : கிராமங்களில் - 2



கிராமங்களில் ஒரு புதிய புரட்சி

சங்கர் சிமெண்ட்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில்நுட்ப ஆலோசனைக்கு : சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்' சென்னை -18

தங்கதுரை

தந்தையையும் தாயையும் சிறு வயதிலேயே இழந்து விட்ட சிறுவன் தன் அண்ணியின் அரவணைப்பில் பொறுப்பற்றவனாக வளர்ந்து, பிறகு வீட்டைவிட்டு வெளியேறி ஒரு பொறுப்புள்ள குடிமகனாகத் திரும்புகிறான்.

பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டு ரசிகப் பெருமக்களின் அரிய வரவேற்பைப் பெற்ற ''அண்ணி''யின் புனர்ஜன்மம்தான் நேஷனல் பிக்சர்ஸாரின் ''தங்கதுரை''! ''அண்ணி''க்கு ஆதாரமாயிருந்தது, ''வதினா'' என்ற தெலுங்குப் படம்.

கணவனின் தம்பியிடம், தன் மகனைவிடத் தாய்ப் பாசத்தைக் கொட்டி வளர்க்கும் அண்ணியாக, சௌகார் ஜானகி நடிக்கிறார். அன்பும், வாஞ்சையும் உருவெடுத்தது போன்ற அந்த அருமையான பாத்திரத்துக்குச் சிறந்த நடிகையான சௌகார் ஜானகி தம் நடிப்புத் திறமையினால் மெருகூட்டியிருக்கிறார். படத்தில் நிஜமான ஓர் அண்ணியைப் பார்க்கிறோம்!

அண்ணனாக வரும் ஏவி. எம். ராஜனின் நடிப்பில் சிறிதும் செயற்கைக் கலப்பில்லாத மிகவும் இயல்பான தன்மையைப் பார்க்கும்போது மன நிறைவு ஏற்படுகிறது. அநாவசியமாக, அதிகம் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக நடித்து ராஜன் நல்ல பெயரைத் தட்டிக் கொள்கிறார்.

ஆரம்பத்தில் துரையாக வரும் மாஸ்டர் சேகர் மிக நன்றாய் நடித்திருக்கிறான். ஆத்திரத்தில் அலறும்போதும், கோபத்தில் குமுறும்போதும், சோகத்தில் சோர்ந்து கண்ணீர் வடிக்கும்போதும் அவன் நடிப்பில் நல்ல எதிர்காலத்தைக் காண முடிகிறது.

இது ஒரு வண்ணப் படம். ஒளிப்பதிவு பிரமாதமாயிருக்கிறது. ஏ. காசிலிங்கத்தின் டைரக்ஷன் சிறப்பாயிருக்கிறது. உரையாடல் நன்றாயிருக்கிறது.

சுந்தரிபாய், அண்ணியின் தாயாக வந்து கலகம் மூட்டி, அண்ணன் தம்பியைப் பிரித்து வைத்துத் தங்கதுரை ஓடுவதற்கு உறுதுணையாக இருக்கிறார். கதையின் ஓட்டத்துக்கு இன்றியமையாததாயிருக்கும் பாகப் பிரிவினை, விபரீதக் கற்பனையாயிருக்கிறது. எவ்வளவு துஷ்டத்தனம் செய்தாலும், ஒரு சின்னப் பையனைப் பட்டினி போட்டு வதைத்திருக்க வேண்டாம்.

படத்துக்குச் சிறப்பூட்டும் அம்சங்கள்: ஆட்டுக்கடாச் சண்டை, பையன்கள் போடும் சண்டை, காளிகோயில் ஆரவாரக் காட்சிகள்.

படத்தில் இல்லாத அம்சங்கள்: காதல் காட்சிகள் (மருந்துக்குக் கூடக் கிடையாது!) கனவுக் காட்சி, 'ரோட்' பாட்டு, வில்லனின் சதித் திட்டங்கள்.

நகைச்சுவைக் காட்சி என்று நினைத்துச் சேர்க்கப்பட்டிருக்கும் எம். ஆர். ஆர். வாசு நடிக்கும் காட்சிகளைக் கண்டு நகைக்கவும் முடியவில்லை; சுவைக்கவும் முடியவில்லை. ஒரே காட்டுக் கத்தலாகவும், கேலிக் கூத்தாகவும் இருக்கின்றன. அது இருக்கட்டும். நகைச்சுவை என்றால் அது கௌரவமாயிருக்கக் கூடாதென்று யார் சொன்னது?

படத்தில் பாராட்டுக்குரிய அம்சம்: கடைசிக் காட்சியில், அண்ணனுக்கும், அண்ணிக்கும் ஞாபகமாக முதுமைக் கோலத்தை 'மேக்கப்' செய்திருக்கிறார்களே, அதுதான்!

கௌரவ நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் இடைவேளைக்குப் பிறகு படத்தின் முடிவில் வந்தாலும் அவருக்குத்தான் மாலை மரியாதை, வாத்திய முழக்கத்துடன் கௌரவமான வரவேற்புக் கிடைக்கிறது. அவர்தானே தங்கதுரை! மக்கள் மலர் தூவி வரவேற்பளித்த பிறகு நாம் தனியாகச் சொல்ல என்ன இருக்கிறது?

படத்தின் சற்று மாறுதலான கதைப்போக்கு (ஏற்கனவே வந்ததுதான் என்றாலும்) ரசிகப் பெருமக்களிடையே வரவேற்பைப் பெறலாம்.

— காந்தன்



வைர வேட்டை!

கே. ஆர். என். சுவாமி

ஒரு நகை வியாபாரி மத்திய இந்தியாவில் ஒரு காட்டுப் பிரதேசம் வழியாகப் பயணப் பட நேர்ந்தது. குக்கிராமம் ஒன்றினைக் கடக்கும் போது ஓர் எருமை மாட்டின் கழுத்தில் வெள்ளைக் கல் ஒன்று கட்டித் தொங்குவதைப் பார்த்தான். உடனே அந்த மாட்டை அதன் சொந்தக்காரனிடமிருந்து விலை பேசி வாங்கிக் கொண்டு ஓட்டிப் போனான். கொஞ்ச தூரம் சென்ற பிறகு எருமையின் கழுத்தில் இருந்த கல்லைக் கழற்றிக்கொண்டு எருமையை விரட்டிவிட்டுத் தன் வழி சென்றான்.

ஏன்? அந்தக் கல் பட்டை தீட்டப்படாத வைரம் என்பதை அந்த நகை வியாபாரி புரிந்து கொண்டதால்தான்!

இந்த இருபதாம் நூற்றாண்டிலும்கூட இது போன்ற புதையல்கள் பலருக்கு அகப்படத் தான் செய்கின்றன. உலகின் பல பாகங்களில் வைரங்களை சல்லிக் காசுக்குப் பெற முடியும் — அதிர்ஷ்டம் இருந்தால்.



பிரேஸிலில் வைர வேட்டையாடுவோர் மூன்று லட்சம் பேர் இருப்பதாகச் சில ஆண்டுகளுக்கு முன் கணக்கு எடுத்தார்கள். ஆற்றில் முழங்காலளவு நீரில் காலை முதல் மாலை வரை நிற்க வேண்டும், பெரிய பெரிய சல்லடைகளைப் பிடித்துக் கொண்டு. பெரிய கற்களைப் பெரிய துளைகள் உள்ள சல்லடைகளின் உதவியால் நீக்கிவிட்டு, சிறிய கற்களை ஒன்றன்பின் ஒன்றாய் மூன்று ரக சல்லடைகளில் சலித்து எடுக்க வேண்டும். கடைசியாகக் கிடைக்கும் கற்களைத் தட்டில் வைத்து நீரில் அமிழ்த்தி லாகவமாகச் சுழற்றி எடுக்க வேண்டும். வைரம் இருந்தால் அது மையத்துக்கு வந்திருக்கும்! வைரத்தைக் கண்டுபிடித்ததும் துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட வேண்டும். ஆம், துப்பாக்கி மகிழ்ச்சியைத் தெரிவிக்கப் பயன்படுவதுடன், கண்டுபிடித்த வைரத்தைப் பாதுகாக்கவும் தேவைதான்!

நூறு ஆண்டுகளுக்குமுன் தென் ஆப்பிரிக்காவில் வைரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அன்று முதல் இன்று வரையில் நாற்பது டன்களுக்கும் அதிகமாக வைரங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு: 1,350 மிலியன் டாலர்கள் (ஒரு டாலர்: ரூ. 7.50)



தென் ஆப்பிரிக்காவில் வைரச் சுரங்கங்களுக்கு அனுமதியில்லாமல் யாராவதுபோக முடியுமா? முடியும், அல்சேஷன் நாய்கள், போலீஸ் துப்பாக்கிகள், மின்சாரக் கம்பி வேலிகள் இவற்றை யெல்லாம் கடக்கும் ஆற்றல் இருந்தால். உள்ளே சென்று விட்டால் ஆயிற்றா? திரும்பி வெளியே வரவேண்டுமே!

மத்தியப் பிரதேச அரசிடம் லைசென்சு பெற்று விட்டால் நீங்கள்கூட வைரங்கள் தோண்டி எடுக்க முற்படலாம்! பன்னா மாவட்டத்தில் அறுபது மைல் நீளமும் பத்து மைல் அகலமும் உள்ள ஒரு பகுதியில் மூன்று மிலியன் காரட் எடையுள்ள வைரங்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் நீங்கள் பெற்ற லைசென்ஸை வைத்துக் கொண்டு நினைத்த இடத்திலெல்லாம் தோண்ட முடியாது. இருபத்தைந்து அடி சதுரமுள்ள ஓர் இடத்தை நீங்கள் முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தச் சதுரத்துக்குள்ளேயேதான் தோண்டி வைரம் அகப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். உங்கள் பக்கம் அதிர்ஷ்டம் இருந்து ஒன்றிரண்டு காரட் வைரம் கிடைத்தாலும் விற்பனை விலையில் இருபது சதவிகிதத்தை ராஜ்ய அரசுக்கு ராயல்டி காணிக்கையாகச் செலுத்தி விட வேண்டும்!



கற் குவியல்களிலிருந்து சிறு பெண்கள் வைரங்களைத் தேடி எடுக்கிறார்கள்.

வைர வேட்டையில் அதிர்ஷ்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆந்திராவில் வஜ்ரகரூர் பகுதியில் பல ஆண்டுகளாக வைரம் இருப்பதாகக் கருதப்பட்டுப் பலர் தேடினார்கள், தோண்டினார்கள். பலன் இல்லை. ஒரு நாள் பஸ் பயணி ஒருவர் இப்பகுதியைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் பஸ் நின்றபோது டீ சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று பஸ்ஸை விட்டு இறங்கினார். கல் தடுக்கியது. கோபத்துடன் குனிந்து கல்லை எடுத்தார், வீசி எறிய. சந்தேகம் தட்டியது. பத்திரப் படுத்திக் கொண்டார். பின்னால் சோதித்தபோது அது வைரமாகவே இருந்தது!

பன்னா மாவட்டத்தில் 1960ல் ரகல் மகமத் என்பவர் ஒரே ஒரு வார வேட்டையில் நாற்பத்தெட்டு காரட் எடையுள்ள ஒரு வைரத்தைக் கண்

★ வைரங்களில் கள்ளச் சந்தை ஏன்?

★ கல் தடுக்கியது, வைரம் கிடைத்தது!

★ எருமை மாட்டின் கழுத்தில் வைரம்!

★ உலகிலேயே மிகப் பெரிய வைரம்!

★ நீங்களும் வைர வேட்டை ஆடலாம்!



வைரங்களை எங்கே தேடலாம் என்று வரைபடங்களைப் பரிசீலித்து அறியும் முயற்சியில் மூழ்கியுள்ளனர் இக்கோஷ்டியினர்.

டெடுத்தார். இப்போதுகூட ஆயிரக்கணக்கானவர்கள் லைசென்ஸ் பெற்று வைர வேட்டையாடுகிறார்கள் இங்கு. ஜூலை முதல் ஜனவரி வரை வைரச் சுரங்கப் பருவம்.

வைரத்தின் மதிப்பு நான்கு அம்சங்களைப் பொருத்தது. நிறம், தெளிவு, பட்டை தீட்டியவிதம், காரட் எடை ஆகிய நாலு அம்சங்கள். பூதக் கண்ணாடி வழியாகச் சோதித்து வைரத்தில் குறைபாடுகள் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். ஏதுமில்லையானால் தெளிவான வைரம் என்கிறார்கள். மஞ்சள், பழுப்பு நிறங்கள் வைரத்தில் இலேசாகக்கூட எட்டிப் பார்க்கலாகாது. அப்படி இருந்தால் தரக் குறைவெனக் கருதப்படுகிறது. வைரங்களைப் பட்டை தீட்டுவதென்பது ஓர் அரிய கலை. வைரத்தின் எடை அதிகம் குறைந்துவிடாத விதமாகப் பட்டை தீட்டி ஜொலிக்கச் செய்ய வேண்டும்.


ஒரு காரட் எடை என்பது மிகச் சிறிது. 142 காரட் சேர்ந்தால் ஓர் அவுன்ஸ் எடை ஆகும். உலகிலேயே மிகப் பெரிய வைரம் தென் ஆப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பெயர்: ''குல்லினன்''. எடை: 3,106 காரட்!

இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட வைரங்களுள் ரொம்பப் பிரமாதமானதன் பெயர்: ''விஜயா''. இதன் விலை நாலு லட்சத்துப் பன்னிரண்டாயிரம் ரூபாய்! கண்டுபிடித்தவர் முன்னரே குறிப்பிட்ட ரசுல் மகமத். ஆனால் இவருக்கு மாநில அரசுக்குரிய ராயல்டி, விற்பனை வரி, மத்திய அரசுக்குரிய வருமான வரி எல்லாம் போகக் கிடைத்தது ரூ. 40,000 தான்! அதாவது இவர் கண்டெடுத்த வைரத்தின் அசல் மதிப்பில் பத்து சதவிதத்துக்கும் குறைவு.

வைரங்களில் கள்ளச் சந்தை பெருகுவது ஏன் என்பது இப்போது புரிகிறதா? அபரிமிதமான வரிகளே வைரங்களில் கள்ளச் சந்தை ஏற்படக் காரணம். இந்த வரிகளைக் கட்டிய பிறகு எஞ்சுவது மிகச் சொற்பத் தொகையே என்பதால் விலையுயர்ந்த வைரங்களைக் கண்டு பிடிப்பவர்கள் அதை அமுக்கிவிடுகிறார்கள். வைரத்தை ஒளிப்பதும் ஒப்புநோக்குகையில் எளிதுதானே! பின்னர் அதனை ரகசியமாக விற்கிறார்கள். 1968-ல் 96 காரட் எடையுள்ள வைரம் கண்டு பிடிக்கப்பட்டதாக வதந்தி நிலவியது. ஆந்திராவில் அனந்தபூர் மாவட்டத்தில் அகப்பட்டதாம். கள்ளச் சந்தையில் விற்கப்பட்ட அதனை யார் வாங்கினார்கள் என்பதை இன்றுவரை அரசாங்கத்தால் கண்டுபிடிக்க முடியவில்லை!



பன்னாவில் தனி நபர்கள் பூமியை அகழ்ந்து தங்கள் அதிர்ஷ்டத்தைத் தேட்டை போடுகின்றனர்.


எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்.
விஜிபி
murphy மர்பி
Dunlopillo
டன்லப்பில்லோ
TIMESTAR
FAVRE-LEUBA
Mecom
மெகாம்
Westclox
WEKUP
Jayco
JAI
RIVEX
MASTER
SHIMCO
JOTHI
HOTTA
NAYAK
Godrej
கோத்ரெஜ்
Godrej
ALLWYN
கோத்ரெஜ் ஆல்வின்
FOLDELUXE
எச்.எம்.வி.
Racold
Sumeet
RALLI-MIX
WIECO
RICO
VIP
CHANDRA
Prestige
Rallifan
Vijay
USHA
Orient
GEC
Crompton
டெலிவிஷன்
GEC
Crompton
Hercules
BSA
RALEIGH
ROBIN HOOD
Atlas
USHA
MERRITT
NIPPON
Romo
GOVERNOR
ரோமோ கவர்னர்
வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.
விஜிபி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-15
போன்: 442333
27, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-17 போன்: 440246
27, ரத்தன் பஜார், சென்னை-3 போன்: 33214
VGP

உலகம் பரவிய மதம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

இப்போது ஹிந்து மதம் என்று சொல்லப்படுகிற நமது மதம் ஒன்றே ஆதியில் லோகம் முழுவதும் பரவியிருந்தது; அந்த ஒரே மதம் இருந்ததால்தான் அதற்குத் தனியாகப் பெயர் வைக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை; இதனால்தான் நம் ஆதார நூல்களில் ஹிந்து மதத்துக்குப் பெயரே இல்லை — என்பது என் அபிப்பிராயம்.

மிக மிகப் பழங்காலப் புதைபொருள் ஆராய்ச்சிகளைப் பார்த்தால் அந்நிய தேசங்களில் எல்லாமே நமது வேத சமய சம்பந்தமான அம்சங்களை நிறையக் காண்கிறோம். உதாரணமாக, கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 1300 வருஷங்களுக்கு முன்னால் எகிப்து தேசத்தில் இரண்டு அரசர்கள் செய்துகொண்ட உடன்படிக்கை* சாஸனம் பூமியிலிருந்து கிடைத்திருக்கிறது. அதில் 'மித்ரா — வருண' சாட்சியாக இந்த உடன்படிக்கைசெய்யப்படுவதாகச் சொல்லியிருக்கிறது. மித்ரா — வருணர்கள் நமது வேதத்தில் சொல்லப்பட்ட தேவதைகள். மடகாஸ்கரில் உள்ள ஊர்களில் எழுபத்தைந்து சதவிகிதம் ஸம்ஸ்கிருத மூலத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது. ராமேஸஸ் என்ற ராஜப் பெயருக்கும் நம் ராமனுக்கும் சம்பந்தம் இருக்கிறது.

பூகோளத்தின் கீழ்ப் பாதியிலும் இத்தகைய அடையாளங்கள் உள்ளன. மெக்ஸிகோவில் நமது நவராத்திரிப் பண்டிகையின் போது ஓர் உற்சவம் நடக்கிறது. அதற்கு 'ராம ஸீதா' என்று பெயர். அங்கே பூமியை வெட்டும் இடங்களிலெல்லாம் பிள்ளையார் விக்கிரகம் அகப்படுகிறது.† ஸ்பெயின் தேசத்தார் புகுந்து அந்த நாட்டை வசப்படுத்துமுன் அங்கிருந்த பழங்குடிகள் ஆஸ்டெக்ஸ். (Aztecs) இது 'ஆஸ்திக' என்பதன் திரிபே. பெருவில் சரியாக விஷு புண்ணிய காலத்தில் சூரியாலயத்தில் பூஜை செய்கிறார்கள். இவர்களுக்குப் பெயரே இன்காஸ். 'இனன்' என்பது சூரியனுடைய பெயர். 'இனகுல திலகன்' என்று ராமனைச் சொல்கிறோமே!

ஆஸ்திரேலியப் பழங்குடிகள் திகம்பரமாக ஆடுகிற படங்களை ஒரு புத்தகத்தில் பார்த்தேன். (ஸ்பென்ஸர், கில்லன் என்பவர்கள் எழுதிய Native tribes of Central Australia என்கிற புத்தகத்தில் 128, 129 எண்ணுள்ள படங்கள்.) அதன் கீழ் சிவா டான்ஸ் என்று போட்டிருந்தது. நன்றாகக் கவனித்துப் பார்த்தேன். ஆடுகிற ஒவ்வொருவர் நெற்றியிலும் மூன்றாவது கண் வரைந்திருக்கிறது.

போர்னியோ தீவில் பிரம்ம சிருஷ்டி முதல் யாருமே உள்ளே நுழையாத காடு (Virgin Forest) என்று ஒரு பெரிய காட்டைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதில் உள்ளே புகுந்து ஆராய்ச்சி செய்தபோது, நம் கிரந்த லிபியில் எழுதியது போல் ஒரு சாஸனம் அகப்பட்டது. அதில் இன்ன மகாராஜா இன்ன யக்ஞம் செய்தான், இன்னவிடத்தில் யூபஸ்தம்பம் நட்டான், பிராமணர்களுக்குக் கற்பக விருட்ச தானம் செய்தான் என்று கண்டிருக்கிறது. இதை Yupa Inscription of Mulavarman of Kocti என்கிறார்கள். நம் மதத்தை ரொம்பப் பரிகாசம் செய்த இங்கிலீஷ்காரர்கள்தான் இத்தனை விஷயங்களையும் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இவையெல்லாவற்றையும் விட, எனக்குத் தோன்றுகிற ஒன்று சொல்கிறேன். வேடிக்கையாக இருக்கும். ஸகரர்கள் யாகக் குதிரையைத் தேடிப் பாதாளத்துக்கு வெட்டிக்கொண்டே போனார்கள். அப்போது உண்டான கடலே ஸகரர் பெயரில் 'ஸாகர'மாயிற்று. கடைசியில் மகரிஷி கபிலரின் ஆசிரமத்துக்குப் பக்கத்தில் குதிரையைக் கண்டார்கள். அவரே குதிரையை அபகரித்ததாக எண்ணி அவரை இம்சித்தார்கள். அவர் திருஷ்டியினாலே அவர்களைப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிட்டார். இது ராமாயணக் கதை. நம் தேசத்துக்கு நேர் கீழே உள்ள அமெரிக்கா பாதாளம் என்று வைத்துக் கொண்டால் அங்கே இருந்த கபிலாரண்யம் (மதுரை மருதையாவது போல்) கலிபாரண்யமாக — கலிபோர்னியாவாக — இருக்கலாம். அதற்குப் பக்கத்தில் குதிரைத் தீவு (Horse Island) சாம்பல் தீவு (Ash Island) இவை உள்ளன.

ஸகரர், ஸாகரம் பற்றி இன்னொன்றும் தோன்றுகிறது. ஸஹாரா பாலைவனமும் ஒரு காலத்தில் கடலாக இருந்தது என்கிறார்கள். ஸாகரம்தான் ஸஹாராவாயிற்றோ?

இப்படி உலகம் முழுக்க நம் மதச் சின்னங்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு, 'நம்மவர்களில் சிலர் இங்கேயிருந்து அங்கே போனார்கள், அந்தத் தேசத்தவர்கள் இங்கே வந்தார்கள், பலவித பரிவர்த்தனை ஏற்பட்டது' என்று ஆராய்ச்சியாளர் சொல்கின்றனர். எனக்கோ எல்லாவிடத்திலும் ஒரே தர்மம்தான் இருந்தது; இந்தச் சின்னங்கள் அங்கங்கேயே ஆதியிலிருந்து இருந்தவர்களால் ஏற்பட்டவை என்று தோன்றுகிறது.




* Treaty of Rameses II with the Hittites.

† Baron Humboldt – quoted in Har Bilas Sarada's "Hindu Superiority".



வாய் நாற்றம் உங்களை
விலகி நிற்கச்செய்கிறது
COLGATE
DENTAL CREAM
கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம்
வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்...
நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!
கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. எனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.
அதன் வித்தியாசமான பெப்பர்மின்ட் சுவையினால்— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!
தூய்மையான இனிய மூச்சுடனே,
வெண்மையான பற்களையும் பெற்றிடவே...
உலகிலேயே அதிக மக்கள்
மற்றெந்த பற்பசையையும்விட,
கால்கேட் பற்பசையையே
வாங்குகிறார்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



அலை ஓசை

அமரர் கல்கி

11. ராகவன் மனக்கவலை

ராஜவிப்பூர் மாஜி திவான் ஆதி வராகாச்சாரியார் புது தில்லியில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார். சுதேச சமஸ்தான மன்னர்களுக்குச் சட்ட சம்பந்தமாக யோசனை சொல்லும் உத்தியோகம் அவருக்குக் கிடைத்திருந்தது. இந்த உத்தியோகத்தில் வேலை கொஞ்சம், வருமானமும் செல்வாக்கும் அதிகம். எனினும் அவருடைய புதல்விகள் தாமாவுக்கும் பாமாவுக்கும் மட்டும் இன்னும் கல்யாணம் ஆனபாடில்லை. புதுதில்லி சமூக வாழ்க்கையில் அவர்கள் மிக்க பிரபலம் அடைந்திருந்தார்கள். வைஸ்ராய் மாளிகையிலும் மற்றும் சுதேச மன்னர்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் கொடுக்கும் பார்ட்டிகளிலும் தாமா — பாமா சகோதரிகளைத் தவறாமல் காணலாம்.

இன்றைக்கு அவர்கள் தந்தையுடன் ஒரு பார்ட்டிக்குப் போய்விட்டு இரவு பதினொரு மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். அதே பார்ட்டிக்குச் சென்றிருந்த சௌந்தர ராகவனும் அவர்களுடன் வந்தான். அவர்கள் நாலு பேரும் சீட்டு விளையாடத் தொடங்கினார்கள்.

ஆட்டம் சிறிது நகர்ந்ததும் பாமா, ''மிஸ்டர் ராகவன்! உங்கள் மனைவியை ஏன் பார்ட்டிக்கு அழைத்து வரவில்லை? இன்னும் உடம்பு சரியாகவில்லையா?'' என்று கேட்டாள்.

''உடம்பு ஒரு மாதிரி சரியாகிவிட்டது. ஆனால் சுரம் அடித்துக் கிடந்ததிலிருந்து அவளுடைய மனம் பேதலித்துப் போயிருக்கிறது. வீட்டுக்குப் போனால் ஓயாத புகாரும் ஒழியாத அழுகையுந்தான்!'' என்றான் ராகவன்.

''அவ்வளவு கடுமையாகச் சுரம் அடித்துக் கிடந்தவளுக்கு நீங்கள் கொஞ்ச நாட்கள் இடமாறுதல் கொடுக்க வேண்டும். இங்கேயே வைத்துக் கொண்டிருப்பது தவறு!'' என்றாள் தாமா.

''அது எனக்குத் தெரியாமலா இருக்கிறது? ஆன மட்டும் நான் சொல்லிப் பார்த்தாகி விட்டது. மதராஸுக்குப் போய் என் அம்மாவுடன் சில நாட்கள் இருந்துவிட்டு அவளுடைய பந்துக்களையும் பார்த்துவிட்டு வரும்படி எத்தனையோ தடவை சொல்லியாகிவிட்டது. அவள் சம்மதம் கொடுத்தால் தானே? என் பாடு ரொம்பவும் சங்கடமாக இருக்கிறது. ஆபீஸுக்குப் போனால் அங்கே ஒருவிதக் கஷ்டம்; வீட்டுக்குப் போனால் இன்னொருவிதக் கஷ்டம். என்ன செய்கிறதென்று தெரியவில்லை. ஒரு சமயம் தற்கொலை செய்து கொண்டு செத்துப் போகலாமா என்று தோன்றுகிறது. இங்கே எப்போதாவது வந்து உங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறேனே, இம்மாதிரி சந்தர்ப்பங்களிலே தான் கொஞ்சம் மன நிம்மதி எனக்கு ஏற்படுகிறது.''

''வீட்டிலே உள்ள கஷ்டம் சரி; ஆபீஸில் உங்களுக்கு என்ன கஷ்டம்?'' என்று தாமா கேட்டாள்.

''உங்கள் தகப்பனாரைக் கேட்டுப் பாருங்கள்; சொல்லுவார். திவான் சாகிப்! நான் முஸ்லிம் ஆகிவிடலாம் என்று யோசிக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றான் ராகவன்.

ஆதிவராகாச்சாரியார் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் சீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

''இது என்ன கூத்து? நீர் எதற்காக முஸ்லிம் ஆக வேண்டும்?'' என்று பாமா ஆச்சரியம் ததும்பக் கேட்டாள்.

''இப்போதெல்லாம் முஸ்லிமாயிருந்தால்தான் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் பிரமோஷன் கிடைக்கிறது. எனக்கு நாலு வருஷங்களுக்குப் பிறகு உத்தியோகத்தில் சேர்ந்தவனை எனக்கு மேலே தூக்கிப் போட்டிருக்கிறார்கள். போன வருஷம் எனக்குக் கீழே 'எஸ் ஸார்!' என்று சொல்லிக்

கொண்டிருந்தான். இந்த வருஷத்தில் எனக்கு மேலே போய்விட்டான். நான் இப்போது அவனுக்கு 'எஸ், ஸார்!' சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படி யாவது அவன் மகா மேதாவியா? மூளை உள்ளவனா? ஒன்றும் இல்லை. 'மகா மூடன்' என்ற பட்டத்துக்கு மிகவும் தகுதி உள்ளவன். அவன் கீழே நான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த அவமானத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. திவான் சாகிப்! எனக்கு ஒரு யோசனை சொல்லுங்கள். நான் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துவிடட்டுமா? அல்லது இந்த உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து விடட்டுமா?'' என்று ராகவன் கேட்டான்.

''இரண்டும் வேண்டாம்; கொஞ்ச நாட்கள் பொறுத்துக் கொண்டிரும்!'' என்று ஆதிவராகாச்சாரியார் முதல் முறையாகத் திருவாய் மலர்ந்தார்.

''பொறுத்துக் கொண்டிருந்தால் என்ன ஆகிவிடும்? இந்த நிலைமையில் மாறுதல் ஏதாவது ஏற்படும் என்று நினைக்கிறீர்களா?''

''ஏற்படலாம் என்றுதான் நினைக்கிறேன். இந்தக் காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொஞ்சம் புத்தி வந்தால் நிலைமை கட்டாயம் மாறிவிடும். இதற்கெல்லாம் காரணம் காங்கிரஸ்காரர்களின் தவறுதான். யுத்தத்தில் ஒத்துழைப்பதாகச் சொல்லிக் கொண்டு எல்லா உத்தியோகங்களையும் கைப்பற்ற வேண்டிய சமயத்தில் சிறைக்குள் போய் உட்கார்ந்திருக்கிறார்கள். இந்த யுத்த சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் வைஸராய் நிர்வாக சபையின் பாதிக்கு மேற்பட்ட ஸ்தானங்கள் கிடைத்திருக்கும். காங்கிரஸ்காரர்கள் செய்யும் தவறு முஸ்லிம் லீகர்களுக்குச் சௌகரியமாய்ப் போயிருக்கிறது. முக்கியமான உத்தியோகங்களில் எல்லாம் முஸ்லிம்கள் வந்து நன்றாக உட்கார்ந்து கொள்கிறார்கள்....''

''காங்கிரஸ்காரர்கள் வந்துவிட்டால் தான் என்ன நடந்துவிடும் என்று நினைக்கிறீர்கள், திவான் சாகிப்! அவர்களும் முஸ்லிம்களுக்குத்தான் சலுகை கொடுப்பார்கள். 'சிறுபான்மையோருக்கு நியாயம்' வழங்குவதாகச் சொல்லிக் கொண்டு பெரும்பான்மையோர் தலையில் மண்ணை வாரிப் போடுவார்கள்! எனக்கு என்னமோ ஹிந்து மகாசபையின் கொள்கைதான் பிடித்திருக்கிறது. இங்கிலீஷ்காரர்களோடு சண்டை போடுவதுகூட அவ்வளவு முக்கியமில்லை. முதலில் முஸ்லிம்களை ஒழித்துக் கட்ட வேண்டும். எட்டு கோடி முஸ்லிம்களை இந்தியாவில் வைத்துக் கொண்டு சுயராஜ்யம் வந்துதான் என்ன பிரயோஜனம்?''

''என்ன மிஸ்டர் ராகவன்! சற்று முன்னால் முஸ்லிம் ஆகிவிடப் போவதாகச் சொன்னீர்; இப்போது முஸ்லிம்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்கிறீரே?'' என்று பாமா கேட்டாள்.

''பின்னே என்ன செய்கிறது? ஒன்று முஸ்லிம்களைத் தொலைத்துத் தலைமுழுக வேண்டும்; அது முடியாவிட்டால் எல்லோரும் முஸ்லிம் ஆகிவிடுவதே நல்லது. அப்போது உத்தியோகங்களில் இந்தப் பாரபட்சம் காட்ட முடியாதல்லவா? எங்கேயாவது சுதேச சமஸ்தானத்தில் ஒரு உத்தியோகம் வாங்கிக் கொடுங்கள் என்று உங்கள் தகப்பனாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர் கவனிக்கிற வழியாயில்லை. திவான் சாகிப் சொன்னால் உடனே இந்தத் தரித்திரம் பிடித்த உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்யத் தயாராயிருக்கிறேன்.''

''அப்பா! ராகவனுடைய கோரிக்கையை நீங்கள் கொஞ்சம் கவனிக்கிறதுதானே?'' என்றாள் பாமா.

''எல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் ராகவன் ராஜிநாமாச் செய்துவிடக் கூடாது. ஒரு வேலையில் இருக்கும்போதே இன்னொரு வேலை கிடைத்தால்தான் கிடைத்தது. விட்டுவிட்டால் கிடைக்காது!'' என்றார் மாஜி திவான்.

''இப்படித்தான் வெகு காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும் இன்னும் கொஞ்ச நாட்கள் பார்க்கிறேன்'' என்றான் ராகவன்.

''அது கிடக்கட்டும், ராகவன்! நீர் முஸ்லிம் அல்ல — ஹிந்து என்பது ஒன்றைத் தவிர உத்தியோகத்தில் 'பிரமோஷன்' கிடைக்காததற்கு வேறு காரணம் எதுவும் இல்லையா?'' என்று பாமா கேட்டாள்.

''மதராஸி என்ற காரணமும் இருக்கத்தான் இருக்கிறது. என்னுடைய துரை வரவுசெலவு மந்திரியாயிருந்த காலத்தில் முக்கியமான வேலைகளுக்கெல்லாம் மதராஸியைத் தேடிப் பொறுக்கிப் போடுவார். இப்போது மதராஸி என்றால் புது டில்லியில் வேப்பங் காயாக இருக்கிறது. இவர்களுக்கு முதலாவதாக யாராவது மகம்மதியர் வேண்டும். மகம்மதியர் இல்லாவிட்டால் மதியில்லாத மகாமூடனாயிருக்க வேண்டும். ஆனால் மதராஸி மட்டும் உதவாது. இந்தியாவைத் தற்சமயம் ஆளும் முகம்மது துக்ளக்குகள்,

அறிவுக்கு அமித லாப வரி போட்டாலும் போடுவார்கள் !''

இப்போது ஆதிவராகாச்சாரியார் சம்பாஷணையில் மீண்டும் கலந்து கொண்டு, ''பாமா அதைச் சொல்லவில்லை, ராகவன் ! உம் பேரில் இன்னொரு புகார் இருப்பதாக ஊரெல்லாம் பிரஸ்தாபமாயிருக்கிறதே? உமக்குத் தெரியாதா ?'' என்று கேட்டார்.

''தெரியாதே! அது என்ன புகார்?'' என்றான் சௌந்தரராகவன்.

''புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை ஒரு மாதம் நீர் உம்முடைய வீட்டில் ஒளித்து வைத்திருந்தீராமே ? அது உண்மையா ?''

''தாரிணியைப் பற்றிச் சொல்கிறீர்களாக்கும். அவள் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவள் என்பது கட்டுக்கதை. அவளை நான் என் வீட்டில் ஒளித்து வைத்திருக்கவும் இல்லை. சீதாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாயிருந்தபோது கிட்ட இருந்து பணிவிடை செய்து அவள் உயிரைக் காப்பாற்றினாள். தாரிணி எவ்வளவு சாது ! எவ்வளவு புத்திசாலி என்பதுதான்



உங்கள் புதல்விகளுக்குத் தெரியுமே ?'' என்றான் ராகவன்.

'' சாதுவாயும் புத்திசாலியாயும் இருக்கலாம். அதனால் புரட்சிக்காரியாயிருக்கக் கூடாது என்று ஏற்படாது '' என்றாள் பாமா.

'' அப்படியே வைத்துக் கொண்டாலும் அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளி? அவள் புரட்சிக்காரி என்பது எனக்கு எப்படித் தெரியும்? அது போகட்டும். இந்தப் புதுடில்லியில் அசல் புரட்சி இயக்கத் தலைவர்கள் எவ்வளவு பெரிய உத்தியோகஸ்தர்களின் வீடுகளில் மறைந்திருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா ? கருணாவதி தேவி எங்கே ஒளிந்திருந்தாள்? சந்த்ரகாந்த விள்ளு யார் வீட்டில் மூன்று மாதங்கள் ஒளிந்திருந்தான்? அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்களை என்ன செய்து விட்டார்கள்? என் பேரில் மட்டும் புகார் சொல்லுவானேன்?''

'' அவர்கள் எல்லாரும் ரொம்பப் பெரிய பதவிகளில் உள்ளவர்கள். ஆகையால் யாரும்

புகார் செய்யத் துணிய மாட்டார்கள். உம்முடைய விஷயம் அப்படியில்லையே, ராகவன்! நீர் உத்தியோகத்தில் பிரமோஷனை எதிர்பார்க்கிறவராயிற்றே!''

''அது மட்டுமல்ல, அப்பா! இவர் ஒரு புரட்சிக்காரியை ஒளித்து வைத்திருந்தார் என்று புகார். இவருடைய மனைவி சீதா ஒரு புரட்சிக்காரனுக்கு உதவி செய்வதாகப் புகார். இந்த ஊரிலிருந்து சென்னை மாகாணத்துக்குப் போன ஒரு கடிதத்தில் இவர் மனைவி சீதாவைப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததாம். அந்தக் கடிதம் சூரியா என்பவருக்கு எழுதப்பட்டதாம். நேற்று ஒரு பார்ட்டியில் ஒரு சி. ஐ. டி. உத்தியோகஸ்தர் என்னிடம் சீதாவையும், சூரியாவையும் பற்றி விசாரித்தார். அவர்களுக்கு என்ன உறவு என்று கேட்டார். 'எனக்குத் தெரியாது' என்று பதில் சொன்னேன். மிஸ்டர் ராகவன், உண்மையில் அவர்களுக்குள் ஏதாவது உறவு உண்டா?'' என்று பாமாதேவி கேட்டாள்.

''உறவு உண்டு. அவர்கள் அத்தங்காவும் அம்மாஞ்சியும் ஆக வேண்டும்'' என்றான் ராகவன்.

''அப்படியானால் சரிதான்! அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் கொஞ்சம் விரஸமாகக்கூடப் பேசினார்.....''

''அது என்ன?'' என்று ராகவன் படபடப்புடன் கேட்டான்.

''அவர்கள் இரண்டு பேரும் 'லவர்ஸ்' (காதலர்கள்) என்பதாக ஏதேனும் வதந்தி உண்டா என்று கேட்டார். எனக்குச் சீதாவை நன்றாய்த் தெரியுமாதலால், 'அதெல்லாம் சுத்தப் பொய்; அவதூறு' என்று சொல்லி, அந்த சி. ஐ. டி.காரர் தமது வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி செய்து விட்டேன்.''

''நீங்கள் செய்தது ரொம்ப சரி. ஆனாலும் அந்தச் சூரியா ஒரு காலிப் பயல் என்பது உண்மை. கொஞ்ச நாளைக்கு முன்பு சந்நியாசி வேஷம் போட்டுக் கொண்டு மதராஸில் என் தாயார் வீடு சென்று பார்த்தானாம். என்னென்னவோ அநாவசியமான கேள்விகளெல்லாம் கேட்டானாம். அவன் மறுபடியும் என் கண்ணில் தென்பட்டால் போலீஸாரிடம் ஒப்படைத்து விட்டு மறு காரியம் பார்ப்பேன். அவன் பேரில் ஏதாவது அரெஸ்ட் வாரண்ட் இருக்கிறதா? உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாமல் என்ன? மதராஸ், பம்பாய், மத்திய மாகாணம் ஆக மூன்று மாகாணங்களில் அவன்பேரில் வாரண்ட் இருக்கிறதாம்!''

''நல்ல காரியம்; சூரியாவைப் போன்றவர்களைச் சிறையிலே தள்ளினால் தேசத்துக்கே க்ஷேமம். சுதந்திர இயக்கம் தூய்மை அடையும்!'' என்று ராகவன் சொல்லிக் கொண்டே டெலிபோன் அருகில் சென்றான்.

''இந்த நேரத்தில் யாருடன் டெலிபோன் பேசப் போகிறீர்கள்?'' என்று பாமா கேட்டாள்.

''வீட்டில் என் மனைவி தூங்கிவிட்டாளா? என்று தெரிந்து கொண்டு தான் நான் வீடு செல்வது வழக்கம். அவள் விழித்துக் கொண்டிருக்கும் போது சென்றால் தேள் கொட்டுவது போல் கொட்டிவிடுவாள். இராத்திரியெல்லாம் இரண்டு பேருக்கும் சிவராத்திரிதான்!'' என்றான் ராகவன்.

''ஐயோ! பாவம்! உங்களுடைய நிலைமை பரிதபிக்கத்தக்கதுதான்!'' என்று சொன்னாள் பாமா.

சௌந்தரராகவன் டெலிபோனில் தன்னுடைய வீட்டு நம்பரைக் கூப்பிட்டான். அதற்குப் பதில் உடனே வந்தது. டெலிபோனில் பேசிய குரலைக் கேட்டதும் ராகவனுடைய முகத்தில் ஆச்சரியமும் ஆத்திரமும் பொங்கிக் கோரத் தாண்டவம் புரிந்தன.

12. "சூரியா! போய்விடு!"

டெலிபோனில் ராகவனுடைய குரலைக் கேட்ட அதே சமயத்தில் சீதாவின் முகத்தையும் சூரியா பார்த்தான். ஏதாவது தவறு நேர்ந்துவிட்டதோ என்ற எண்ணத்தினால் அவன் உள்ளம் குழம்பிற்று. ராகவன், ''யார்? சூரியாவா? எப்போது வந்தாய்!'' என்று கேட்டதற்கு, ''இன்றைக்குத்தான்!'' என்று பதில் அளித்தான்.

''ஓகோ! நான் வருகிற வரையில் இருப்பாயல்லவா!'' என்று ராகவன் கேட்டான். ''ஆகா! இருக்கிறேன்!'' என்றான் சூரியா. பிறகு, ''அத்தங்கா! மாப்பிள்ளை பேசுகிறார்!'' என்று சொல்லி டெலிபோன் ரிஸீவரைச் சீதாவின் கையில் கொடுத்தான்.

ரிஸீவரைக் காதில் வைத்துக் கேட்ட போது சீதாவின் முகம் மேலும் பீதியைக் காட்டியது. ராகவன் என்ன கேட்டான் என்பது சூரியாவின் காதில் விழவில்லை. சீதா, ''இல்லையே! இன்றைக்குத் தானே வந்திருக்கிறான்!''

நாங்கள் பேக்கை மாற்றிவிட்டோம்...

சிவப்பும், பொன்னிறமும்
இணைந்த கவர்ச்சிமிகு
பேக்காக...உங்களுக்கு
கூடுதலான செலவின்றி
அதிக கவர்ச்சியான பேக்.



...ஆனால் நாங்கள் ஒருபோதும் பிஸ்கெட்டை மாற்றவே மாட்டோம்



போஷாக்கு மிகுந்த அதி
ருசியுள்ள பிஸ்கட்.
பின்வருவனைபகள் எப்பொழுதும்
அடங்கியது.
வைட்டமின்கள் ஏ..டி..பி1..பி2..
கால்ஷியம், ப்ரோட்டீன், பால்,
கோதுமை, சர்க்கரை, க்ளூகோஸ்.

பார்லே க்ளூகோ

இந்தியாவின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கெட்டுகள்



everest/871 rd/PP TM

சுட்ட புண்கள்! வெட்டுக் காயங்கள்!

விரைவில் இட்டுப் பாருங்கள் பர்னல்

குளுமையுடன் இதமளிக்கும் நிவாரணி





பர்னல் பட்டவுடனே சட்டென ஆற்றும் [illegible]



ஆற்றும் போதே இதம் [illegible]



'கட்டு தண்டனே இன்றியே சட்டெனக் காயமாற்றும்' [illegible]

வீடு என்றால் விபத்துகளும் நேரத்தான் செய்யும். ஆடிக் களிக்கும் குழந்தைக்கு அடிக்கடி அடிபடுவது சகஜம். சமையலறையிலோ சூடாகக் கொதித்திரும் கொதி எண்ணெய் தெறிக்கலாம்; காய்கறி நறுக்கும்போது விரலிலே பட்டு விடலாம். எனவே எப்போதும் கைவசம் இருக்கட்டும் பர்னல்! குளுமையுடன் இதமளிக்கும் பர்னல், தீப்புண், வெட்டு, சிராய்ப்பு, கட்டி மற்றும் காயங்களை ஆற்றும் பயமற்ற நிவாரணி. இட்டவுடன் இதமளித்து ஆறுவது பர்னல்.

பர்னல் 40 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்கற்ற இல்லங்களில் காயமாற்றிவரும் நம்பகமான நிவாரணி



ASP/BIB-15 TM

கல்கி

இரண்டாவது
சிறுகதைச்
சிறப்பிதழ்

நவம்பர் 26

சிறுகதைச் சிறப்பிதழ்

- உலகத்தின் தலைசிறந்த கதைகளுடன்
- தமிழகத்தின் பொன்னேடுகளாகத் திகழும்
- சிறுகதைகளும் இடம் பெறும்

என்று சொன்னபோது அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் துளித்ததைச் சூரியா பார்த்தான். பிறகு, "சரி சரி! இருக்கச் சொல்கிறேன்!" என்று சொல்லிவிட்டு டெலிபோன் ரிஸீவரை வைத்துவிட்டான்.

"அத்தங்கா! மாப்பிள்ளை என்ன சொன்னார்? எதற்காக உன் கண் இப்படிக் கலங்கியிருக்கிறது?" என்று சூரியா கவலையுடன் கேட்டான்.

சீதா சிறிது நேரம் எங்கேயோ பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாள். பிறகு திடீரென்று விம்மிக்கொண்டே, "சூரியா! நீ போய்விடு! உடனே போய் விடு!" என்றாள்.

"அத்தங்கா! இது என்ன? எதற்காக என்னைப் போகச் சொல்கிறாய்? மாப்பிள்ளை இருக்கச் சொல்லியிருக்கிறாரே!" என்றான் சூரியா.

"அதனாலேதான் உன்னைப் போகச் சொல்கிறேன். என்னிடமும் உன்னை இருக்கப்பண்ணும்படிதான் சொன்னார். ஆனால் எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது. சூரியா! நீ இன்றைக்கு இங்கே இருந்தால் ஏதாவது அபாயம் நேரிடும் என்று தோன்றுகிறது. போய்விடு!"

"நான் அவசரப்பட்டுக் கொண்டு போனால்தான் அபாயம் வரும். அவர் இரு என்று சொல்லியிருக்கும்போது நான் போகலாமா? வீண் சந்தேகத்துக்கு இடமாகாதா?"

"சந்தேகம் இனிமேல்தானா வரப் போகிறது? உனக்கு ஒன்றுமே தெரியவில்லை சூரியா! பச்சைக் குழந்தையாய் இருக்கிறாய்! நம் இருவர் பேரிலும் தகாத சந்தேகம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னை அவர் படுத்துவதெல்லாம் அதற்காகத்தான்."

"சுத்த மூடத்தனம்! என் பேரில் மாப்பிள்ளைக்குச் சந்தேகமாவது! அவர் இப்போது வரட்டும்; நேரிலேயே கேட்டு விடுகிறேன். அவருக்கு உன்னைக் கல்யாணம் செய்து வைத்ததே நான் தானே?" என்றான் சூரியா.

"நீதான்! நீ செய்த பெரிய தவறு அதுதான்! நேரில் பார்த்துப் பேசுவதனால் அவருடைய சந்தேகத்தை நீ போக்கிவிட முடியாது. ஏதாவது நீ பதில் சொன்னால் அவருடைய கோபம் அதிகமாகும். நீ இன்றைக்கு இங்கே இருந்தால் நிச்சயமாகக் கொலை விழும்! அந்தப் பாவத்துக்கு என்னை ஆளாக்காதே! தயவுசெய்து போய் விடு! உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன்."

சீதாவின் வெறி நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகி வருவதைச் சூரியா கவனித்தான். ஆனாலும் அவனுக்குப் போக மனம் வரவில்லை. "சீதா! பதற்றம் வேண்டாம். கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பார்! நான் இப்போது போய்விட்டால் அவருடைய சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல் ஆகாதா?" என்றான்.

"உறுதிப்பட்டால் படட்டும். அவரையே தெய்வம் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தும் எப்போது சந்தேகப் படுகிறாரோ அப்போது அவருடைய சந்தேகத்தை உண்மையாக்கி விட்டால் தான் என்ன? அதனாலேயே என்னை எங்கேயாவது அழைத்துக் கொண்டு போகும்படி உன்னைக் கேட்டேன். ஆனால் நீ பயங்கொள்ளி; கோழை. ஸ்திரீகளின் சுதந்திரத்தைப் பற்றி வாய் கிழியப் பேசுவாயே தவிர, அதற்காக ஒரு துரும்பு எடுத்துப் போட மாட்டாய். உன்னை நான் நம்பியிருக்கவும் இல்லை. ஒரு நாளைக்கு இவரை விட்டு விட்டு



''மாப்பிள்ளைக்கு ஸ்கூட்டரும், மோதிரமும் வாங்கிக் கொடுக்கப் போவதில்லை என்று முடிவு செய்துவிட்டதாகச் சொன்னீர்கள். ஆனாலும் அவர் சிரித்த முகத்துடனிருக்கிறாரே, எப்படி ?''

''நான் அந்த முடிவை இன்னும் அவரிடம் சொல்லவில்லையே!'' - கே. வி. எம்.

ஓடவே போகிறேன். உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். என்னை வீண் கஷ்டத்துக்கு ஆளாக்காமல் உடனே போய் விடு. உன்னால் எனக்கு உபகாரம் இல்லாவிட்டாலும் அபகாரமாவது இல்லாமல் இருக்கட்டும்.''

இனிமேல் தான் அங்கு இருந்தால் சீதாவின் இரத்த நரம்புகள் வெடித்து அவள் மூர்ச்சையாகி விடுவாள் என்று சூரியா பயந்தான். போய்விட வேண்டியதுதான். ஆனால் அப்புறம் என்ன? சீதாவின் நிலையைப் பற்றி எப்படித் தெரிந்து கொள்வது? ஆம்; டெலிபோன் ஒன்று இருக்கிறதே! டெலிபோன் மூலம் நாளைக்கு விசாரித்துக் கொள்ளலாம். இன்றைக்கு ஓர் இராத்திரி நடக்கிறது நடக்கட்டும். நாளை தாரிணியுடன் யோசித்துக் கொண்டு சீதா விஷயமாக என்ன செய்கிறது என்று தீர்மானிக்கலாம்.

''சரி! அத்தங்கா! நீ இவ்வளவு வற்புறுத்துகிறபடியால் நான் போகிறேன். அப்புறம் நாம் எப்போது சந்திப்பது? நாளைக்கு டெலிபோன் பண்ணட்டுமா?''

''ஆமாம்; நாளைக்குப் பதினொரு மணிக்கு மேல் டெலிபோனில் பேசு. எல்லாம் சொல்கிறேன்.''

''அத்தங்கா! ஒரே ஒரு விஷயம் ஞாபகம் வைத்துக் கொள். உனக்கு உண்மையில் உதவி தேவையாயிருந்தால் நான் அதற்குப் பின்வாங்கமாட்டேன். உன்னுடைய மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சொல்லு. என்ன சொல்கிறாயோ, அந்தப்படி செய்யத் தயாராயிருக்கிறேன். உன்னுடைய க்ஷேமம்தான் எனக்குப் பெரிது; தேச விடுதலைகூட அப்புறம்தான்!'' என்றான் சூரியா.

இப்படி சூரியா சொன்னபோது அவனுடைய மனத்தில் உண்மையாக எண்ணியதையே சொன்னதாகக் கூற முடியாது. அவசரப்பட்டுச் சீதா ஏதாவது செய்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தினால் அவளைத் தைரியப்படுத்துவதற்காகவே சொன்னான்.

ஆனால் சீதா, சூரியா சொன்னதை நூற்றுக்கு நூறு பங்கு உண்மையாகவே எடுத்துக் கொண்டு, ''ரொம்ப வந்தனம் அம்மாஞ்சி! அபாய காலத்தில் உன்னுடைய உதவியைக் கோரும்படி, அம்மா எனக்குச் சொல்லி யிருந்தாள். அவளுடைய வாக்கு வீண் போகவில்லை. நாளைக்கு மத்தியானத்துக்கு மேலே டெலிபோனில் பேசு. நானும் அதற்குள் நன்றாக யோசித்து வைக்கிறேன். அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்தோம் என்ற பெயர் வேண்டாம். இல்லாவிட்டால் இப்போதே என்னை அழைத்துக் கொண்டு போகும்படி சொல்லி யிருப்பேன்!'' என்றாள்.

சூரியா புறப்பட எழுந்தான். சீதாவிடமிருந்து எடுத்துக் கொண்ட கைத்துப்பாக்கியை முன்னமே கால் சட்டையின் பைக்குள் போட்டுக் கொண்டிருந்தான். 'இந்தப் பித்துக்குளிகளின் வீட்டில் துப்பாக்கி இருப்பது ஆபத்து. நம்மிடம் இருந்தால் ஒரு சமயம் பயன்படும்!' என்று முடிவு செய்திருந்தான். அதன்படி கைத்துப்பாக்கியுடன் கிளம்பிச் செல்ல ஆயத்தமானான்.

அப்போது வாசலில் 'பாம் பாம்' என்ற சத்தம் கேட்டது. மோட்டார் கார் 'விர்' என்று வேகமாக வந்து வீட்டு வாசலில் நின்றது. சீதாவும் சூரியாவும் திகைத்து நின்றார்கள்.

ராகவன் வண்டியை வீட்டு முகப்பில் நிறுத்திவிட்டு இறங்கி 'விடுவிடு' என்று உள்ளே வந்தான்.

சூரியாவையும் சீதாவையும் மாற்றி மாற்றி வெறித்துப் பார்த்தான். அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த குரோதம் அவனுடைய பார்வையில் ஒருவாறு தெரிந்தது. ஆனால் வாய் வார்த்தையில் குரோதத்தைக் காட்டிக் கொள்ளாமல், ''என்ன சூரியா? புறப்படத் தயாராய் நிற்கிறாய் போலிருக்கிறதே!'' என்றான்.

''ஆமாம், மாப்பிள்ளை! போகவேண்டும். மணி பன்னிரண்டரை ஆகிவிட்டதல்லவா? நீங்கள் வந்ததும் புறப்படலாம் என்று காத்துக் கொண்டிருந்தேன்'' என்றான் சூரியா.

உங்கள் குழந்தைக்கு 3 மாதம் ஆயிற்று...
சீக்கிரம்...பாரெக்ஸ்® புத்தகம்* பெறுவீர்

இலவசம்



இது புதிய தாய்மார்களுக்கு அவசியம்!

*குழந்தையின் சீரான உடல் வளர்ச்சிக்கு உதவும் முதல் திட உணவு பற்றிய எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். அதுதான் பாரெக்ஸ்...குழந்தையின் மென்மையான ஜீரண சக்திக்கு ஏற்ற சரியான புரதச் சத்து அடங்கியது.

இந்தக் கூப்பனுடன் 25 பைசா தபால் தலை இணைத்து, டிபார்ட்மெண்ட் K-I-B, த.பெ. 16558, பம்பாய் 18 (WB). என்னும் முகவரிக்கு இன்றே அனுப்புக. (எந்த மொழியில் வேண்டுமென்று தெரிவிக்கவும்).

உங்கள் பெயர் ______________________

(கொட்டை எழுத்துக்களில்)

முகவரி ______________________

(கொட்டை எழுத்துக்களில்)

____

குழந்தையின் வயது ____________ மொழி ____________

CMGF-248-202 Tam



லின்டாஸ்.V-34-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

''அதென்ன? இத்தனை நேரம் கழித்து எங்கே போவாய்? பெரிய 'நைட் பர்ட்' (இராத்திரி சஞ்சாரப் பறவை) ஆகி விட்டாய் போலிருக்கிறதே!''

''நீங்களும் என் தோழனாகத் தான் இருக்கிறீர்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் வீட்டுக்கு வந்திருக்கிறீர்களே?'' என்று சூரியா கொஞ்சம் துடுக்காகப் பதில் சொல்லி ராகவனுடைய கோபத்தைக் கிளறி விட்டான்.

''நான் ஓரிடத்துக்கு முக்கியமான வேலையாகப் போகவேண்டி யிருந்தது.''

''நானும் முக்கிய வேலையாகத்தான் போக வேண்டி யிருக்கிறது. இன்று இராத்திரி சில சிநேகிதர்களைச் சந்திப்பதாகச் சொல்லி யிருக்கிறேன்.''

''அழகுதான்! இத்தனை நேரம் கழித்துச் சிநேகிதர்களைச் சந்திக்கவாவது? சந்தித்து என்ன செய்வீர்கள்? எங்கேயாவது கொள்ளை யடிக்கப் போகிறீர்களா என்ன?''

''கொள்ளையடிக்கப் போகிறவர்கள் இராத்திரியில் போவார்கள், அவர்களைப் பிடிக்கப் போகிறவர்களும் இராத்திரியிலேதானே போய் ஆக வேண்டும்? இந்தியா தேசத்தைக் கவர்ந்த கொள்ளைக்காரர்களைத் துரத்தியடிக்கும் கைங்கரியத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரியாதா, மாப்பிள்ளை?''

''எனக்கு எப்படித் தெரியும்? உன் அத்தங்காளுக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம். அவளை நீ அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போகிறாய் அல்லவா....!''

''அடிக்கடி நான் வந்து பார்ப்பதில்லையே? மூன்று மாதங்களுக்கு முன்னால் ஒரு தடவை வந்திருந்தேன். அப்போது நீங்கள் வெளியூருக்குப் போயிருந்தீர்கள், உங்கள் தாயார் இருந்தார். அவரைத் தரிசித்துவிட்டுப் போனேன்.''

''அது கிடக்கட்டும் அப்பா! இப்போது நீ எங்கேயோ போய்விட்டு வந்தாயாம். மதராஸுக்குக் கூடப் போயிருந்தாயாம். அவ்விடத்து விஷயங்கள் எல்லாம் உன்னிடம் தெரிந்து கொள்ளலாம் என்றல்லவா இவ்வளவு அவசரமாக ஓடி வந்தேன்? நீ போக வேண்டும் என்கிறாயே? இராத்திரி இங்கேயே தங்கி யிருந்து விட்டுக் காலையில் போகக் கூடாதா?''

''இல்லை, ஸார்! நான் இப்போதே அவசியம் போக வேண்டும். மதராஸில் உங்கள் தாயாரையும் குழந்தையையும் பார்த்தேன். குழந்தை இங்கே வர வேண்டும் என்று ஆசைப் பட்டாள்.



கஞ்சரும் குசேலருமான குடும்பஸ்தரின் தீபாவளிக் குரல்: ''பேங் பசங்களா! சீக்கிரமாக அந்த எண்ணெய்க் கிண்ணத்தையும், 'இங்க் ஃபில்லர்' ரையும் கொண்டு வாங்க!'' - கே. வி. முரளி.

ஆனால் வழியில் எனக்குப் பல ஜோலிகள் இருந்தபடியால் அவளை நான் அழைத்து வரவில்லை. மற்ற விவரங்கள் எல்லாம் இன்னொரு நாள் சாவகாசமாக உங்களுக்குச் சொல்கிறேன்.''

''இன்னொரு நாள் என்றால் என்றைக்கு?'' என்று ராகவன் கேட்டான்.

''சௌகரியப்பட்டால் நாளைக்கே வருகிறேன். இல்லாவிட்டால் மறுநாள் வருகிறேன். என்னுடைய பிரயாண விவரங்கள், அனுபவங்கள் எல்லாம் சொல்கிறேன்.''

''சரி; அப்படியானால் போய் வா! நாளைக்கு வருவதாக இருந்தாலும் இரவிலேதான் வருவாயாக்கும்!''

''ஆமாம்; போலீஸ்காரர் கண்ணுக்குப் படாமல் வருவதா யிருந்தால் இராத்திரியில்தானே வரவேண்டி யிருக்கிறது? என்னுடைய காரியங்கள் சம்பந்தமாக உங்களுக்குத் தொந்தரவு ஏதும் விளைவதை நான் விரும்பவில்லை. சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கிறீர்கள் அல்லவா? அதுவும் சாமானிய உத்தியோகமா?''

''ஓஹோ! அவ்வளவு தயவு என் பேரில் வைத்திருக்கிறாயா? போகட்டும். ராஜம்பேட்டை கிட்டாவய்யர் குமாரன் தலையில் இப்படியா எழுதியிருக்க வேண்டும்?''

''என் தலையில் எப்படி எழுதியிருக்கிறது? எதைப் பற்றிச் சொல்கிறீர்கள்?''

''இப்படிப் போலீஸ்காரர்களுக்குப் பயந்து திருடனைப் போல் இராத்திரியில் ஒளிந்து திரிய வேண்டி யிருப்பதைப் பற்றித்தான். இருக்கட்டும். சூரியா! உன்னுடைய சிநேகிதி தாரிணி எங்கே இருக்கிறாள்? அவளை நீ பார்ப்பது உண்டா?''

சூரியா சீதாவின் முகத்தைப் பார்த்தான். அவளுடைய முகம் கொடூரமாவதைக் கவனித்தான்.

''தாரிணி இந்த ஊரிலேதான் இருக்கிறள் என்று நினைக்கிறேன். ஒருவேளை பார்த்தாலும் பார்ப்பேன். ஆனால் நிச்சயம் சொல்வதற்கில்லை.''

''பார்த்தால் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது என்றும், அவளை நான் சந்திக்க விரும்புவதாகவும் சொல்லு. அவளுடைய இருப்பிடம் உனக்குத் தெரியுமா?''

''பழைய இருப்பிடம் தெரியும். ஆனால் இப்போது தாரிணி அங்கே இல்லை. வேறு ஜாகைக்கு மாற்றிக் கொண்டு போயிருக்கிறளாம்.''

''பழைய ஜாகை எனக்கும் தெரியும். புது இடம் தெரியாது. ஒரு நாள் பழைய டில்லியில் ஜும்மா மசூதிப் பக்கம் நான் போய்க் கொண்டிருந்த போது தாரிணி மாதிரி ஒருத்தி போவது தெரிந்தது. அவளேதான் என்று நினைத்துப் பார்த்துப் பேசுவதற்காகப் போனேன். திடீரென்று அவள் குறுகலான சந்து ஒன்றில் நுழைந்து அவசரமாகச் சென்று அங்கே ஒரு வீட்டுக்குள் புகுந்து சென்றாள். எப்படியும் அவளைப் பார்த்து விடுவது என்று வீட்டுக் கதவை இடித்தேன். அந்த வீதி துருக்க வீதி போலிருக்கிறது. நூறு முஸ்லிம்கள் வந்து என்னைச் சூழ்ந்துகொண்டு சண்டைக்கு வந்து விட்டார்கள். அவர்களிடமிருந்து தப்பி வருவது பெரும்பாடாகி விட்டது. சூரியா! முதலில் நீங்கள் இந்த நாட்டிலிருந்து துருக்கர்களை ஒழித்துக்கட்ட வேண்டும். இல்லாவிட்டால், நம் இந்தியா தேசம் உருப்படப் போவதில்லை.''

''நாங்கள் அப்படி நினைக்கவில்லை. முஸ்லிம்கள் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள்; நம் சகோதரர்கள்.. அவர்களை எப்படி ஒழித்துக் கட்ட முடியும்? வெள்ளைக்காரர்களை அடித்து விரட்டி விட்டால் அப்புறம்...''

''அப்புறம் நீங்கள் வைத்ததுதான் சட்டமாயிருக்கும். அரசாங்கமே உங்கள் கையில் வந்து விடும்.''

''அது எனக்குத் தெரியாது, மாப்பிள்ளை! சுதந்திரப் போரில் நாங்கள் எல்லாம் உயிர் துறக்க நேரிட்டாலும் நேரிடலாம். ஆனால் ஒன்று நிச்சயம். இந்த நாட்டு ஜனங்களின் பிரதிநிதிகள் இந்தியாவைக் கூடிய சீக்கிரம் ஆளப் போகிறார்கள். நேரமாகி விட்டது; நான் போய் வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சூரியா புறப்பட்டுச் சென்றான்.

அவன் போவதைப் பொருட்படுத்தாமல் ராகவன் சோபாவில் உட்கார்ந்தபடி இருந்தான். ஆனால் சீதா சூரியாவின் பின்னோடு வாசல் வரையில் போனாள். வாசற்படிக்கு அருகில் வந்ததும், ''சூரியா! என் தலைமேல் ஆணை! நாளைக்குக் கட்டாயம் எனக்கு டெலிபோன் பண்ணு!'' என்று மெதுவான குரலில் கூறினாள்.

''சரி, அத்தங்கா!'' என்றான் சூரியா.

(தொடரும்)

புத்தக வெளியீட்டு விழா



தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள், பிரசுரகர்த்தர்கள் சங்கத்தின் ஆதரவில் ராஜா அண்ணாமலைபுரம் சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரத்தில் அக்டோபர் 26-ந் தேதி 'டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார்' என்ற நூலைத் தமிழக கவர்னர் கே. கே. ஷா வெளியிட்டார். இந்த நூல் வெளியீட்டு விழாவில் திருவாளர்கள் என். டி. சுந்தரவடிவேலு, ம. பொ. சி., எஸ். பி. ஆதிநாராயணன், டாக்டர் பாலசுப்பிரமணியம் முதலிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். தமிழக கவர்னர் கே. கே. ஷாவிடமிருந்து முதல் பிரதியை [illegible] இயக்குநர் திரு பலராமன் பெற்றுக் கொண்டார்.



புதிய 'ஈக்விட்டி' ஷேர்கள் வெளியீடுபற்றி 'பிலிப்ஸ்' விரைவில் அறிவிப்பார்கள்.



அன்பு அனாதையல்ல!

''மை டியர் ராஜி! நான் சொல்வதை நீ நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.'' பாசு மீண்டும் சொல்கிறான்.

''நீங்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு அது எப்படி இருந்தாலும், நான் பெண்ணாகப் பிறந்தவள்.''

''நீ ஓர் இரட்டைப் பட்டதாரி. ஹோம் ஸயன்ஸ் — சோஷியாலஜி இரண்டிலுமே!'' — இடையே கூறுகிறான் பாசு.

''படிப்புக்கும், தாய்மைக்கும் தடுப்புச் சுவர் இருக்க முடியுமா, என்ன? இன்னும் சொல்லப் போனால் இந்தப் படிப்பில்தான் எல்லாம் அதிகரிக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஹோம் ஸயன்ஸில் குடும்ப நிர்வாகம் கற்றுக் கொடுப்பதால் விவாகம் முடிந்ததும் குடும்ப நிர்வாகத்தில் ஆசை பிறக்கிறது.''

''அப்புறம் நர்ஸிங் கற்றுக் கொடுத்ததால் இப்போது குழந்தைக்கான ஏக்கமும் இருக்கிறது. அப்படித்தானே....?'' சிரித்தபடி கூறுகிறான்.

'' எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்.'' ராஜி தொடராமல் நிறுத்துகிறாள். கொக்கி போட்டுச் சங்கிலியை இழுத்து நிறுத்திவிட்டது போன்ற உணர்ச்சி. ஐம்புலனுக்கும் அப்பாற்பட்ட தொன்றைப் பக்தன் தேடுவதான பார்வை.

பாசு தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்துவிட்டான். ''வரயா ராஜி, கடற்கரை வரையில் போகலாம்.''

''இல்லே, தலையை வலிக்கிறது.''

பாசு சிரிக்கிறான். தலைவலியா இது? சுற்றிலும் பார்க்கக் கூச்சப்படும் அச்சம், அதோடு கலந்த ஆற்றாமை. பெற்றோர்களின் கைவிரலைப் பிடித்துக் கொண்டு, ''அ...ம்மா... அப்பா!'' எனக் கூவும் குழந்தைகளின் மணியோசை கேட்கும்போது தன் நெஞ்சுக்குள் நெருடுவதான உணர்வு. பார்த்த மாத்திரத்தில் ஒட்டிக் கொள்ளும் குழந்தைகளை ஆசையோடு தூக்கிக் கொள்ளும்போது திமிறிக் கொண்டு, ''அம்மா....விட்டே.... அம்ம.... ம்மா....'' எனக் கூச்சலிடும் ஓசையில் உலகமே தன்னை ஒதுக்கிவிட்டு வெறுப்பும் ஏளனமுமாகப் பாவிப்பதாக எண்ணம்.

''சரி, சினிமாவுக்குப் போகலாம். வா!''



எஸ். ரங்கநாயகி

சினிமாவுக்குப் போனதும் படத்தை அமைதியாகப் பார்க்க விடாமல் இப்படி நேரிடக்கூடும் என்று பாசு எதிர்பார்த்திருக்கவில்லை.

தியேட்டருக்குள் நுழையும் நேரம். ''ஓ, ராஜீ.....'' தோளின் மீது கைகளைப் போட்டு நிறுத்திவிட்டவள் பானு. அவள் அருகில் எட்டு வயது மகன், நான்கு வயது மகள்.

''பானு, நீயா? எப்போடீ வந்தே? அயல்நாட்டு வேலை முடிஞ்சு போச்சா? அவரும் வந்திருக்கிறாரா?'' ராஜியும் உற்சாகமாகத்தான் பேச்சை ஆரம்பித்தாள்.

''இங்கேயே வந்துட்டோம்டி... இனிமேல் அடிக்கடி சந்திக்கலாம்.''

''உன் கணவர் வரச் சம்மதிச்சுட்டாரா?''

''வரப் பிரியமில்லேதான். என்ன பண்ணிக்கிறது? இந்தப் பிள்ளைக்கும் பொண்ணுக்கும் நம் நாட்டுப் படிப்பு இருக்கணும்னு எங்க மாமனாரோட வாதம். குழந்தைகளுக்காக இங்கே வந்துட்டோம். இவை பெரிசானதும் திரும்பிப் போனால் போச்சு. என்னதான் சொல்லு, நம்ம குழந்தைகளை நம்ப பார்வையிலேயே வெச்சுக்கறதுதான் நல்லது. மகிழ்ச்சியும்கூட. 'அம்மா', 'அப்பா' என்று அவர்கள் கூப்பாடு காதில் விழுந்துண்டிருந்தா நல்லது.''

பாசு உடனே ராஜியை நோக்கினான். ''ராஜீ, வாயேன், உள்ளே போகலாம்.''

மனைவியின் மனத்துக்குள் போராட்டத்தை மீண்டும் எழுப்புவதைத் தடுத்து விட வேண்டும். பானுவின் சொற்கள் காலியான பாத்திரத்தில் மீண்டும் மண்ணை வாரிக் கொட்டுவதாகக் கண்டிப்பாக இருந்துவிடும்.

''ஏ ராஜீ, எங்கே, உன்னுடைய குழந்தைகள்? விட்டுட்டு வந்தாயா?'' பானு மீண்டும் ஆரம்பிக்கிறாள்.

''வா ராஜீ, மணி அடித்துவிட்டார்கள்.'' பாசு அவளை இழுத்துக் கொண்டு உள்ளே ஓடிவிட்டான்.

பானுவுக்கு, பாசுவின் செய்கை அநாகரிகமாகப்படும். படட்டுமே, அதுக்காக ராஜியைத் தவிக்க விடுவதா?

அவன் முன்ஜாக்கிரதையாக நடந்து கொண்டும் பலன் இல்லை. ராஜி கலகலப்பை இழந்துவிட்டாள். பால்கனியில் அமர்ந்திருந்தாலும் சுற்றிலுமுள்ள குழந்தைகளின் மீதுதான் அவள் மனம் பதிந்திருந்தது. குழந்தைகளுக்காக மேனாட்டுத் தொழிலை விட்டுவிட்டு வந்துவிட்ட பானு தம்பதியைப் போல, இங்கும் பலர் குழந்தைகளுக்காகவே சினிமாப் பார்க்க வந்திருப்பார்கள். அவளோ யாருக்காக, எதற்காக, எதைச் செய்யப் போகிறாள்?

படம் பாதி ஓடிக் கொண்டிருக்கும்போதே, ''வீட்டுக்குப் போகலாமா?'' என்ற ராஜியின் குரல் வருகிறது அவன் காதருகில்.

''வேண்டாம். படத்தில் கவனம் செலுத்து. எவ்வளவு நன்றாக இருக்கிறது!'' அவன் கொஞ்சம் இரைந்தே கூறினான்.

படம் முடிவதற்குள் பாசு எழுந்துவிட்டான். ராஜியுடன் பானுவின் சந்திப்பை மீண்டும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பது தான் அதற்குக் காரணம்.

வீடு திரும்பிச் சாப்பாடு முடிந்ததுமே, ராஜி படுத்துத் தூங்கிவிட்டாள். பாசுவுக்குத் தான் தூக்கமில்லை. ராஜியின்மீது அவனுக்கு இரக்கமாகத்தான் இருந்தது.

நாலைந்து நாட்களாக மீண்டும் மீண்டும் அவள் கூறியதை ஏற்கத்தான் அவன் சட்டென முன்வரவில்லை.

''ஒரு குழந்தையை எடுத்து வளர்த்தால், என்ன?'' அவள் அடிபோட்டது இப்படித்தான்.

''வேண்டாம் ராஜீ, எல்லாம் கடைசியில் நல்லபடியாக முடியும் என்று சொல்லிவிட முடியாது.''

''இதில் நல்லது கெட்டது என்பதெல்லாம் என்ன இருக்கிறது? நம்ம வீட்டில் குழந்தை இல்லை. ஒரு குழந்தைக்கு நம் வீட்டில் இடம் தருகிறோம். அவ்வளவுதானே! நாம் நன்றாக வளர்க்க மாட்டோமா?''

''பேஷாக வளர்ப்பாய். இந்தத் தத்து சமாசாரமெல்லாம் செயற்கைதானே! பெரியவனாகும் போது குழந்தை ஒட்டுவது மட்டுமல்ல, தாயாக நீ ஒட்ட முடியுமா?''

''என்னது, என்ன சொன்னீர்கள்? நான் ஒட்டமாட்டேனா? 'அம்மா' என்ற ஒரு சொல்லுக்கு நான் எப்படித் தவிக்கிறேன், தெரியுமா? அறியாப் பருவத்திலேயே குழந்தை நம்மிடம் வந்துவிட்டால் நம்மைத் தான் பெற்றோர்களாக நினைக்கும். 'அம்மா' எனக் கூப்பிடும். 'அப்பா' என்று கூப்பிடும்

போது நீங்களும் உள்ளம் மகிழ்ந்து போவீர்கள்.'' கொஞ்சம் சினம் பொங்கவே அவள் பேசிவிட்டாள்.

''குழந்தையின் பெற்றோர்கள் தந்து கொடுக்கச் சம்மதம் தரமாட்டார்கள். தந்தாலும் கடைசியில் தங்கள் பிள்ளையாகத் தான் சொந்தம் கொண்டாடுவார்கள்.''— மீண்டும் அலசி எடுத்து ஒரு பொத்தலைக் காட்டினான்.

''அந்தக் கவலையே வேண்டாம். என் சிநேகிதி ஸ்டெல்லா பிரசவ ஆஸ்பத்திரியில் நர்சாக இருக்கிறாள். அவள் சொல்லுகிறாள்: பல குழந்தைகள் பிறந்த உடனேயே அநாதையாக நின்று விடும். சிலர் இதுபோல் எடுத்து வளர்க்கப் பெற்றுக் கொள்கிறார்கள். ஒருத்தரும் எடுத்து வளர்க்க முன்வராவிடில் அநாதை இல்லங்களில் அக்குழந்தைகளைச் சேர்த்து விடுவார்கள். இதுபோன்ற குழந்தைகளை வளர்ப்பதால் ஒரு வம்பும் இருக்காது. அக்குழந்தைகளும் நம்மைத்தான் பெற்றோர் என நினைத்து வளரும். இது போன்ற குழந்தை ஒன்றைத் தருவதாக ஸ்டெல்லா சொன்னாள்.''

''ஓ, இவ்வளவு தூரம் ஏற்பாடாகிவிட்டதா ?''

''வெளிநாட்டிலிருந்தெல்லாம் இங்குவந்து அநாதைக் குழந்தைகளை எடுத்துப் போய் வளர்க்கிறார்கள். நம் நாட்டில் இருந்து கொண்டே நாம் வளர்க்கக் கூடாதா?''

''உன்னைப் படித்த பெண் என்றே என்னால் நம்ப முடியவில்லை!'' விரக்தியுடன் மீண்டும் அவன் இதையே கூறினான்.

ஒரு மாதம் கழிந்தது. பாக காரியாலயத்திலிருந்து திரும்பி வந்தான். வீட்டில் ராஜி இல்லை. அவனுக்கு இந்த அனுபவம் அடிக்கடி நேரிடாவிடினும் எப்போதேனும் நேர்வது உண்டு. முக்கியமான ஒரு பணி இருந்தாலல்லாது ராஜி இதுபோல் அவனைக் காக்க வைத்துவிட்டுச் செல்வதில்லை. அவன் எப்போதுமே தன் பர்ஸில் வீட்டுப் பூட்டின் மறு சாவி ஒன்றை வைத்திருப்பான். கதவைத் திறந்து உள்ளே சென்ற போது மேஜையின்மீது ஒரு குறிப்பு இருந்தது.

'அவசரப் பணி. சந்தோஷச் செய்தி — ராஜி.'

எட்டத்தில் நின்று கொண்டு அவனையே பார்த்துச் சிரிப்பதான ஒரு தோற்றம் அவனுக்கு முன்னே நிற்கிறது. 'சந்தோஷச் செய்தி!' ராஜி சம்பந்தப்பட்ட அந்த மகிழ்ச்சிச் செய்தி அவனுக்குப் புரிவதாகத்தான் இருந்தது. அவன் அவளுடைய கணவன். அதனால் வீட்டிலேயே ஆண்டவன் பணித்துவிட்ட மகிழ்ச்சிச் செய்தி இல்லை என்பது அவனுக்குத் தெரியும். ராஜியின் சிநேகிதி ஸ்டெல்லாதான் அவளுக்கு போன் செய்திருப்பாள்.

உள்ளக் குதூகலத்துடன் உள்ளே நுழைந்தாள் ராஜி. அவள் கூறப் போவது திரை விலகின வெளிச்சமாக அவனுக்கு நன்றாகத் தெரிந்தது.

''நல்ல செய்தி... சந்தோஷச் செய்தி...!'' என்று கூவிக்கொண்டே அவன் அருகில் வந்துவிட்டாள் அவள். ''என்னமாக இருக்கிறது! பிறக்கும் போதே ஏழரை பவுண்டாம்! நல்ல வெளுப்பு, சுருள் சுருளாக அடர்ந்த மயிர். விழியும் அதுவும்..... அப்பப்பா, அப்படியே தூக்கி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.''

''அது சரி, ராஜி.....''

''முழுதும் கேளுங்கள். அப்பா யாரென்று தெரியவில்லை. ஏதோ ரெஜிஸ்டராகாத காதல் போலிருக்கிறது. குழந்தைப் பிரசவத்தில் தாய் இறந்துவிட்டாள். அவள் கொடுத்திருந்த விலாசமே பொய். இக்குழந்தையை அநாதை விடுதியில் சேர்க்க ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. ஸ்டெல்லாதான் பொரிசு செய்து எனக்காக வைத்திருக்கிறாள். நீங்களும் நானும் சம்மதக் கையெழுத்துப் போட்டுவிட்டால் குழந்தை நம்முடையதாகிவிடும். பிறவியிலேயே தாய் தந்தையை இழந்துவிட்ட குழந்தை நம்மைத்தான் பெற்றோர்களாகப் பாவித்து 'அம்மா' என்று கொஞ்சும் மொழியில் கூப்பிடப் போகிறது.....'' குதிப்பும் மகிழ்ச்சியுமாக அவள் கூறினாள்.

பாக பதில் கூறாவிடினும் சிரித்தபடி உட்கார்ந்திருந்தான். விநாடிக்கு விநாடி அவன் சம்மதத்தை எதிர்நோக்கிய அவள் அந்தச் சிரிப்பில் கவர்ச்சியைக் காண முடியவில்லை.

''எதற்குச் சிரிக்கிறீர்கள்? ஏளனமும் பரிகாசமும் என் நெஞ்சுக்குள் எந்தச் சலனத்தை ஏற்படுத்தும் என்பது உங்களுக்குக் கண்டிப்பாகப் புரிந்திருக்கும். உங்களுக்குச் சம்மதம் இல்லாவிடில்....'' அவளால் வார்த்தையை முடிக்கக்கூட முடியவில்லை.

''நோ, நோ, ராஜி, நான் என்றைக்குமே உன் மனசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்ததில்லை என்று உனக்குத் தெரியும். இந்த உன் ஏற்பாட்டில்.....'' முழுதும் முடிக்காமலே தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்து அவள் தோள்களைப் பற்றினான். ''என்னுடைய ஒரு குணத்தை நீ இன்னும் புரிந்துகொள்ளவில்லை. நான் எப்பொழுதும் உண்மையையும் இயல்பானதையும் மட்டுமே நினைக்கிறவன். புரிகிறதா? எனக்கு இயற்கையாக ஏற்படும் பொருள்களில்தான் நம்பிக்கையும் ஆனந்தமும் உண்டு.''

''இயற்கை, இயற்கை என்று ஏன் அடித்துக் கொள்கிறீர்கள்? நமக்கு இயற்கையாகக் கிட்டாததை இன்னொருவரிடமிருந்து பெற்றுக்கொண்டால் என்ன?''

''பட்டுப் புடவை அணிய முடியாவிடில் சின்னாளப்பட்டு உடுத்துவதைப் போல் என்கிறாயாக்கும்!'' என்று அவன் கூறி விட்டுச் சிரித்தான்.

ராஜி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு உள்ளே சென்று டிரேயில் இரு கோப்பைகளில் காப்பியும் பிஸ்கட்டும் எடுத்து வந்தாள். அவனிடம் கொடுத்துவிட்டுத் தானும் சாப்பிட்டாள். பாக அன்று தன் காரியாலயத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றைக் கூறினான். அதை அவள் ரசித்துக் கேட்காமல் மனத்தை வேறு திசையில் ஈடுபடுத்தியிருந்ததை அவன் உணர்ந்தான். அவள் மனத்துள் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

'' என் அம்மா வீட்டுக்குப் போய் வரலாமா ?'' டிரேயை உள்ளே கொண்டு போய் வைத்துவிட்டு அவள் கேட்டாள்.

அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்


ஆரோக்கியமும் மகிழ்ச்சியுமூட்டுவது

அஜீரணம், வாயு, தூக்க மின்மை, வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற குழந்தையின் உடல் கோளாறுகளை விரைவில் குணப்படுத்து. கிறது.

பசியைத் தூண்டி, ஜீரணசக்தியைச் சீராக்கி, குழந்தையை ஆரோக்கியத்துடன் கொழுகொழுவென்று வளரச் செய்கிறது.



அமிர்தாஞ்சன் லிமிடெட்



PDSAG-1640 TM

சாதாரண சரும நோய்களுக்கு நிவாரணம்

CIBA

வயோஃபார்ம்

க்ரீம்

CIBA/VIO-89 TM

நாகரீகத்தின் வரலாறு



ஆதி மனிதன், குகைகளில் வசித்து வந்தான்; அங்கு, தான் வாழ்ந்ததை உலகுக்குப் புலப்படுத்த, ஓவியங்களை தன் போக்கில் கிறுக்கிவைத்தான். பின்னர், கட்டிடம் கட்டக் கற்றுக்கொண்ட அவன், சாலச் சிறந்த கட்டிடப் பொருளைத் தேடிக் கண்டறியும் ஆராய்ச்சியில் இறங்கினான்; நூற்றாண்டு காலமாய், களிமண், வைக்கோல், கல், மூங்கில் போன்றவற்றைப் பயன்படுத்தினான்; இன்னமும் மேலான பொருள்களையே தேடி ஆராய்ந்து, இறுதியில் அதைக் கண்டறியவும் செய்தான். நிரந்தரமாக நீடித்திருக்கும், உறுதி வாய்ந்த ராக்ஃபோர்ட் ப்ராண்ட் டால்மியா சிமெண்டைப் பயன்படுத்தி, இன்று அவன் கட்டிடம் எழுப்புகிறான்.

ராக்ஃபோர்ட்

ப்ராண்ட்

டால்மியா சிமெண்ட்

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்,
பதிவு அலுவலகம் மற்றும் தொழிற்சாலை:
டால்மியாபுரம், தமிழ்நாடு.
தலைமையகம் 4, சிந்தியா ஹவுஸ், புதுதில்லி-1

GOYAN

மனப் போராட்டத்துக்கு ஒரு நடுநிலைமையாளரைத் தேட அவள் விழைகிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

மறுப்புக் கூறாமல் அவன் கிளம்பிவிட்டான். அங்கு சென்றதும் அவன் எதிரிலேயே தான் எல்லோரும் பேசிக் கொண்டனர். அவன் மட்டும் மைத்துனனின் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

திரும்பும்போது ராஜி மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். அந்த மகிழ்ச்சிக்கான காரணம் அவனுக்குப் புரிந்திருந்தும் அவன் அதைத் தான் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

''நாளைக் காலையே நாம் இருவரும் போய்க் கையெழுத்துப் போட்டுவிட்டுப் பிரசவ ஆஸ்பத்திரியிலிருந்து குழந்தையை எடுத்துவந்து விடலாம். நாளைக்கு நாள் நன்றாக இருப்பதாக அம்மா சொன்னாள். அம்மாவே வருவதாகச் சொன்னாள். ஆனால் உங்கள் கையெழுத்துக் கேட்பார்களோ என்பதற்காகத்தான் உங்களை அழைத்துப் போகிறேன். நாளை அரை மணி நேரம் தள்ளிக் காரியாலயம் போகலாமல்லவா?'' ராஜி கேட்கிறாள்.

''ஓ. போகலாமே!'' அவனுடைய அமைதியான சம்மதக் குரல் அவளுக்கு வியப்பை அளித்ததற்கு மாறாக, கணவருக்கு விருப்பமில்லாத தொன்றில் நுழைகிறோம் என்ற அச்சுறுத்தல் மனத்தோடு எழத்தான் செய்தது.



மறுநாள் அவர்கள் வீட்டில் ஒரு குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. அந்த அழுகைக் குரலைக் கேட்டு ராஜி பூரித்துப் போனாள். பிறந்த வீட்டார் குழுமியிருந்தனர். வீட்டில் வடை, பாயசமும், ஸ்வீட்டுமாக விருந்து தயாராகிக் கொண்டிருந்தது.

''ஓ! அழகாக இருக்கிறது. இந்தக் குழந்தை. தேடிப் பிடித்தாலும் நல்ல பொருளாகத்தான் பிடித்திருக்கிறாய்.''

அனைவரும் கூறும்போது ராஜியின் உள்ளம் பூரித்துப் போயிற்று. தொட்டிலிட்டு, 'வ்ரஜ கோபன்' என்று பெயர் சூட்டினாள். இன்னும் சில மாதங்களில் 'அம்மா' என்ற பேரின்பம் தரும் மழலை மொழி அவள் காதில் விழப் போகிறது. அவள் கழுத்தைக் கைகள் அணைக்கத் தாமரை முகம், அவளுடைய இரு கன்னங்களிலும் எச்சில் சொட்டச் சொட்ட முத்தம் தரப் போகிறது. பிஞ்சு விரல்கள் அவள் கையைப் பிடித்துக்கொள்ளக் குழந்தை குதிநடை போடப்போகிறது. ''அம்மா, அம்மா'' எனக் கூப்பிட்டுக் கூப்பிட்டு அவளோடு பேசப்போகிறது.

நாட்கள் சென்றன. ராஜி கணவனிடம் சொன்னாள்: ''நம்ப வ்ரஜூவுடன் என் நேரமெல்லாம் சரியாகப் போய்விடுகிறது. அதனால் வீட்டோடு சமையலுக்கும், நான் இல்லாத போது குழந்தையைப் பார்த்துக் கொள்ளவும் ஒரு பொறுப்பான அம்மாளைப் போட்டுக் கொள்ளலாமா?''

கணவன் சம்மதம் கிடைத்துவிட்டது. மீனாட்சி அவர்கள் வீட்டு வேலைக்கு அமர்ந்துவிட்டாள். ராஜிக்கு அதிக நேரம் குழந்தையுடன் கழிக்க முடிந்தது.

வ்ரஜூ என்னமாக விளையாடுகிறான். அவனைப் பார்க்கும்போதெல்லாம் கன்னம் குழியச் சிரிக்கிறான். நீந்திக் காட்டிய பிறகு தவழ்ந்து விளையாட முயல்கிறான். பொக்கை வாயைத் திறந்து அவன் சிரிக்கும்போது ராஜியின் உள்ளம் பொங்கிப் போயிற்று. கணவனுடன் பேசும்போதெல்லாம் வ்ரஜூவைப் பற்றிய பேச்சுக்கள்தாம். பாசுவும் குழந்தையோடு ஒட்டிக் கொண்டான்.

அன்று மீனாட்சி வேலைக்கு வரவில்லை. சொல்லிவிட்டுத்தான் நின்று விட்டிருந்தாள். ராஜி பாசுவிடம் குறைப்பட்டுக் கொண்டாள். ''வேலை நன்றாகச் செய்கிறாள். வ்ரஜூவிடமும் ஆசையாகத்தான் இருக்கிறாள். ஆனால் பாதி நாட்கள் லீவு போட்டுவிடுகிறாள். இவளுடைய பெரிய பிள்ளை ஒருத்தன் தஞ்சாவூரில் பெரிய வேலையில் நன்றாகச் சம்பாதிக்கிறானாம். இவளுடைய சின்னப் பிள்ளைக்குப் பிறவியிலேயே கால் ஊனமாம். இந்தப் பிள்ளையை வைத்துக் கொண்டு பெரியவனுடைய குடும்பத்தோடு இருந்தால், இவனை இளப்பமாக நடத்துவார்கள் என்பதற்காக இவனைக் காப்பாற்றும் பொருட்டுப் பெரிய பிள்ளையிடம் போய்ச் சுகமாக இல்லாமல் அவனுடைய பணத்துக்குக்கூட ஏங்காமல் இங்கு உழைக்கிறாள். இந்தப் பையனுக்குத் தலைவலி என்றால்கூடத் தவித்துப் போய் லீவு போட்டு விடுகிறாள். எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''

''ஒரு தாயின் இயற்கைக் குணத்தை நாம் மாற்ற முடியாது. மாற்றவும் கூடாது. ராஜி.'' — பாசு அமைதியாகக் கூறினான்.

* * *

காரியாலயத்திலிருந்து திரும்பும்போதே, ''ராஜி! என்னைக் கல்கத்தாவுக்கு மாற்றிவிட்டார்கள்'' எனப் பாசு கூறியபோது ராஜி சங்கடப்பட்டு விட்டாள். ஆனால் மனத்தோடு ஓர் ஆறுதல். கல்கத்தாவுக்குப் போய் விட்டால் வ்ரஜூவைத் தன் சொந்தக் குழந்தை என்றே பறைசாற்றிக்கொள்ளலாம்.

மீனாட்சிக்கு மட்டும் குறை. ராஜி அவளிடம் அன்பாக நடந்து கொண்டதோடு வ்ரஜூவும் அவளிடம் ஒட்டியிருந்தான்.

''சின்னப் பிள்ளையைப் பெரியவனிடம் விட்டு விட்டு நீங்களும் எங்களுடன் வந்து விடுங்களேன்.'' — ராஜி கேட்கிறாள்.

''ஆண்டவன் கொடுத்த ஊனம். அந்தக் குழந்தையை மனிதன் பழிக்கும்படி விடக் கூடாது. இவனுக்காகத்தானே நான் தனி



''செக்ரடரி! சினிமாச் செய்தி நிருபர்களையெல்லாம் காமிராவுடன் வரச் சொல்லுங்கள்! எனக்குத் தயிர்வடை செய்யத் தெரிந்துவிட்டது!''

யாக இருக்கிறேன். இவன் என் மூச்சு உள்ள வரை என் பொறுப்பில்தான் இருக்க வேண்டும் அம்மா!'' மீனாட்சி கூறிவிட்டாள்.

கல்கத்தாவுக்குச் சென்றதும் ராஜிக்குக் குதூகலம். வ்ரஜுவிடம் அனைவரும் ஒட்டிக் கொண்டு அவனுடைய அழகில் மூழ்கிப் போயினர்.

''மிஸஸ். பாக! நீங்கள் ரொம்ப அதிர்ஷ்டசாலி. அருமையான குழந்தை. உங்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் எப்படித் தன் போக்கில் விளையாடுகிறான்? கூப்பிட்டால்கூட இலட்சியம் செய்யாமல் விளையாட்டில் அவ்வளவு ஈடுபாடு. பெரியவனாகும் போது மெச்சத் தகுந்த பணிகளைச் செய்து உங்களுக்குப் புகழ் தேடித் தரப் போகிறானாக்கும்.''

ராஜி மகிழ்ந்து போனாள். பாகவுக்கும் எல்லோருடைய சொற்களும் காதில் விழத்தான் செய்தன.

ஒரு மாதம் கழிந்தது.

''ராஜி! வ்ரஜுவை இன்று ஒரு ஸ்பெஷலிஸ்ட் டாக்டரிடம் அழைத்துப் போகலாம் என்றிருக்கிறேன்'' என்று ஒரு நாள் பாக கூறியபோது ராஜிக்கு ஒன்றுமே புரியவில்லை.

'' ஸ்பெஷலிஸ்டா, எந்த டாக்டர், எதற்கு?''

பாக பதில் கூறவில்லை. காரின் கதவைத் திறந்துவிட்டு உள்ளே வ்ரஜுவை உட்கார வைத்தான். ''கிளம்பு ராஜி.''

டாக்டர் வீட்டை அடைந்தபோது 'ஈ.என்.டி.' என்ற எழுத்துக்களைப் பார்த்தபோதே ராஜிக்குத் தூக்கி வாரிப் போட்டது. திடீரென்று ஏதோ ஒன்று அவள் சிந்தனையைத் தூண்டி விட்டு எதையோ அவளுக்கு உணர்த்த வருவது போல் இருந்தது.

''வ்ரஜு...'' என அவள் கூப்பிட்ட போது அவன் பாகவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

டாக்டரிடம் பாக கூறியதை அவள் கேட்டுக்கொண்டிருந்தாள். ''கூப்பிட்டால் திரும்பிப் பார்ப்பதில்லை. ஆனால் நன்றாக விளையாடுகிறான். விளையாட்டுப் போக்கில் கூப்பிடுவதைக் கவனிப்பதில்லையா, அல்லது...அவன் குரலிலும் எனக்கு அச்சம் தட்டுகிறது...''

டாக்டர் வ்ரஜுவைப் பரிசோதித்துக் கொண்டே பாக கூறியதைக் காதில் வாங்கிக் கொண்டார். பரிசோதனை முடிந்த பிறகு கேட்டார். ''உங்கள் வம்சத்தில் நெருங்கியவர் எவரேனும் ஊமையாக இருக்கிறார்களா?''

ராஜிக்குத் தூக்கி வாரிப் போட்டது. பாக ராஜியை நோக்கினான். அவளும் அவனை நோக்கினாள். பாகவே பேசிவிட்டான். ''இல்லை டாக்டர்! இவன் எங்களுக்குப் பிறந்தவன் இல்லை. அனாதை ஈன்ற குழந்தை. பிறவியிலேயே இவன் அநாதை. நாங்கள் எடுத்து வளர்க்கிறோம்.''

''வம்சத்தில் வரும் ஊனம் சில முறை தொடராமல் நின்றுவிடும். வம்சத்திலேயே இல்லாத ஊனம் சிலமுறை ஏற்படுவதும் உண்டு... ஐ பிடி யூ பாக... இக் குழந்தையைப் பிரசவித்த தாயின் பிரசவ சார்ட்டை நீங்கள் வாங்கிப் பார்ப்பது நல்லது.''

அண்ட சராசரங்களும் தன்னைத் தாக்குவது போல் ராஜிக்கு உடலெல்லாம் நடுங்கியது. வீடு திரும்பியதும் படுக்கையில் விழுந்து விசித்து அழுதாள். ராஜிக்கு இந்த மாதிரி ஆகும் என்று பாகவுக்குத் தெரியும்.

அன்றைய தினம் முழுதும் ராஜி தன் படுக்கையை விட்டு எழுந்திருக்கவேயில்லை. பாக லீவு போட்டுவிட்டு ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்தான்.

என்றுமே வ்ரஜு அதிகம் படுத்தியதில்லை. இன்றும் ராஜி படுத்திருப்பதைப் பார்த்ததும் பாகவிடம் ஒட்டிக் கொண்டான். ஃபீடரில் பாக நிரப்பித் தந்த பாலைக் குடித்தான். விளையாடினான், தூங்கினான்.

ஒரு வார காலமாக வீட்டில் ஏற்படும் மாறுதலைப் பாகவால் நன்கு உணர முடிந்தது. ராஜியினால் முன்போல் மகிழ்ச்சியும் குதூகலமுமாகக் குழந்தையைக் கொஞ்ச முடியவில்லை. அவனை முழுவதும் புறக்கணிக்கவும் இல்லை. ஆகாரம் தந்தாள், விளையாட்டுச் சாமான்கள் தந்தாள். ஆனால் அவனோடு பேசவில்லை, விளையாடவில்லை. வீட்டுக்கு யாரேனும் வந்தால் குழந்தையைப் பற்றின புகழுரை இல்லை.

சமுத்திரத்தின் அலைகளை எட்ட நின்று கவனிக்கும் வழிப்போக்கனாகப் பாக எல்லாவற்றையும் கவனித்து வந்தான். அவன் எழுதிய கடிதம் ஒன்றுக்குச் சென்னையிலிருந்து நண்பர் அன்று பதில் எழுதியிருந்தார். வ்ரஜுவை அவர்கள் வளர்ப்புக்குச் சிபார்சு செய்த ஸ்டெல்லா நர்ஸ் பணியை விட்டு விட்டுக் கேரளத்துக்குப் போய்விட்டாளாம். ஆஸ்பத்திரி சார்ட்டின்படி குழந்தையின் அம்மா ஊமைதானாம்.

''என்னை ஏமாற்றிவிட்ட ஸ்டெல்லா நன்றாக வாழ மாட்டாள்.'' ராஜி கடுகடுப்புடன் சொல்லிக் கொண்டாள்.

பாக வ்ரஜுவைக் கவனித்துக் கொள்ள ஆயாவை அமர்த்தி விட்டான். ராஜி பல சங்கங்கள், கிளப் முதலியவற்றில் அங்கத்தினளாகிவிட்டாள்.

நீடித்து உழைக்கும் துணிகள் எவை?

டுவின் டஸ்கர்

டிரில் • பாப்ளின் • காபர்டைன் • டஸூர்
முதலியன

மதுரை மில்ஸ் மதுரை, தென் இந்தியா

Bensons 1848 B/I TAM



ஏன்
இந்த
கடிகாரம்
மற்றதை
தவிர?
ஏன் எனில் இது ஒரு
காமி வாட்ச்!

CAMY
GENÈVE

Ratan Batra/CW/TAM/13-A

நானும் ஒரு வேளை...!



''டாக்டர் போன மாதம் என் மனைவிக்குத் தலைவலி வந்தபோது எனக்கும் வந்தது. இந்த மாதம் அவளுக்கு வாயும் பிடிப்பு ஏற்பட்டபோது எனக்கும் ஏற்பட்டது. போன வாரம் அவளுக்குக் கழுத்துச் சுளுக்கு ஏற்பட்டபோது எனக்கும் ஏற்பட்டது.''

''அதற்கு இப்போது என்ன?''

''அவளுக்கு இது மூன்றாவது மாதமாம்; எனக்கு ஒரே பயமா யிருக்கிறது!''

-- கோட்டாமோகன்

பாகவுக்குக் காரியாலய வேலையாக ஒரு மாத காலம் பம்பாய்க்குப் போக நேர்ந்தது.

மீண்டும் அவன் திரும்பியபோது வீட்டில்...

''ஸ்ரஜு எங்கே ராஜி? நீ அவனைப் பற்றி உன் கடிதங்களில் எழுதவில்லையே?''

ராஜி அவனை ஏறிட்டு நோக்கிவிட்டுக் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''எங்கே ஸ்ரஜு, சொல்லு ராஜி.''

''என் நெருங்கியின் ஆலோசனை, பொரிசின் பேரில் அவனை அநாதை அங்கஹீனக் குழந்தைகளின் விடுதியில் சேர்த்து விட்டேன்.''

கணவனின் சினச் சொற்களை எதிர்பார்த்து ராஜி நடுக்கத்துடன் இதைக் கூறினாள்.

கணவனின் உதட்டில் சினத்துக்கு மாறாக வேதனைக் கலப்போடு ஒரு வறண்ட சிரிப்பு. ''இப்படித்தான் முடிவு இருக்கும் என டாக்டரிடம் போய் வந்ததிலிருந்து நான் எதிர்பார்த்திருந்தேன்.''

ராஜிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? ஸ்ரஜு நம் வளர்ப்பு மகன்தானே? ஊமைக் குழந்தையை அநாதை விடுதியில் விடுவதில் என்ன தவறு? நாம் வளர்க்க எடுத்திருக்காவிடில் அங்கு இருக்க வேண்டியவன்தானே?'' வார்த்தைகள் எரிச்சலும் சினமும் கலந்து ஒலித்தன.

''ஆம் ராஜி! நீ சொல்வது புரிகிறது. நான் சொன்னதை நீ புரிந்து கொள்ளவில்லை. நீ அவனைப் பெற்ற தாயாக இல்லாததால் நீ இயற்கையை அனுபவிக்க முடியவில்லை. ஒரு குழந்தையைத் தத்து எடுக்க முற்பட்டுச் செயற்கையாகத் தாயாக முயன்றாய். ஊனமுள்ள ஒரு மகனை ஒரு தாய் இயற்கையாகப் பிரசவித்துப் பெற்றிருந்தால், மீனாட்சியைப் போல் தன் சுக சௌகரியங்களைத் தியாகம் செய்து விட்டு அந்த ஊனக் குழந்தைக்காகத்தான் வாழ்வாள். அவனை மற்றவர் துச்சப்படுத்துவதை எதிர்ப்பாள். அனாதையாக நினையாமல் அரசனாக நினைப்பாள். ஆனால் வளர்ப்புத் தாய் அந்த நெஞ்சைப் பெறுவது கஷ்டம். நல்லதைத்தான் நாடுவாள். குறைபாட்டை வெறுப்பாள். அதனால் தான் இந்த விவகாரமே வேண்டாம் என ஆரம்பத்தில் சொன்னேன்.''

அவன் முடிப்பதற்குள்ளேயே 'ஐயோ' என்று கூவி அவன் மடிமீது சாய்ந்துவிட்டாள் ராஜி. எத்தனை விளக்கமாகச் சொல்லிவிட்டான். மீனாட்சிமீது ஒரு கணம் மனம் செல்லுகிறது. ஊனமுள்ள குழந்தைக்காக வாழ்பவள்.... தன்னுடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். அவள் கர்ப்பம் தரித்துப் பிரசவித்த ஸ்ரஜுவாக இருந்தால் அநாதை விடுதியில் அவனை நுழைய விட்டிருப்பாளா? அவன் விளையாட்டில் அவனிடமுள்ள குறையை மறந்திருப்பாள். அவன் அறிவில் அவன் ஊனத்தை மறந்திருப்பாள்.

விசித்து அழும் ராஜியைப் பாக தன் கைகளினால் தடவிக் கொடுத்தான். அவள் தலையைக் கோதிவிட்டான். ''அழாதே ராஜி! இப்போதும் நீ ஒன்றையும் இழந்து விடவில்லை. இயற்கையாகத் தாய்மையைச் சிலர் எய்த முடிவதில்லை. ஆனால் ஆண்டவன் அளித்த இயற்கையான குணங்கள் ஒரு பெண்ணுக்கு இல்லாமல் போகாது. என்றுமே அந்த நெஞ்சக்குள் கருணை, அன்பு, அரவணைக்கும் தன்மை ஆகியவை வஞ்சனை இல்லாமல் நிரம்பிக் கிடக்கின்றன. இத்தனை குணங்களும் ஒரு தாயின் உரு. ஒரு தாய் தனக்கே சொந்தமான குழந்தைக்கு மட்டும் இத்தனையும் தர முடிந்தால் தாய்மைப் பேற்றை அடைய முடியாதவள் இத்தனை குணங்களையும் எத்தனை குழந்தைகளுக்கு வாரி வாரி வழங்க முடியும்? அங்கு தன்னலம் அழிந்து போகிறது. அன்புக்கு ஏங்கும் பல அநாதைக் குழந்தைகள் தாயைக் காண்கிறார்கள். உள்ளம் உருக, நெஞ்சு மகிழ அந்தத் தாயும் அந்தச் சேய்களும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறார்கள். புரிகிறதா?''

ராஜி அவன் நெஞ்சோடு பிணைந்துபோய்க் கண்களை மூடிக் கொண்டு விட்டாள். ஸ்ரஜுவைப் போன்று எத்தனையோ குழந்தைகள் ''அம்மா'' என்ற சொல்லுக்குப் பொருள் காட்டி அவளை அழைப்பதுபோல் உணர்ந்தாள். எப்படி? ஓசையோடு வராத 'அம்மா' என்ற சொல்லை அவள் அவர்களது பார்வையிலிருந்து ஏற்று மனம் மகிழ்ந்து போனாள். பல குழந்தைகளுக்குத் தாய் என்ற பெருமையை அடைந்தாள். மீண்டும் அவள் கண்களைத் திறந்தபோது பாக அவளை நோக்கிப் புன்னகை புரிந்தான்.

அநாதை விடுதிக்குப் பாதுகாப்பாளராக ராஜி தன் பெரும் பொழுதை அங்கு கழிக்கும் போது, பாகவும் சிலமுறை அங்கு தன் நேரத்தைச் செலவிட்டான். உள்ளங்கள் நிறைவு கண்டன.

ராஜாஜியின் ஜெயில் டைரி

ஹரி ராசிங்கிடம் ஐந்து லட்சம் பணம் இருந்ததாம். அவர் மிக்க விசனத்துடன் கூறினார்:, ''என்னிடமிருந்து சர்க்கார் இரண்டு லட்சத்துக்கு அதிகமாக எடுத்துக் கொண்டு விட்டார்கள். மீதிப் பணம் எல்லாம் நான் கொடுத்து வைத்த சினேர்களிடமும் பிறரிடமும் இருக்கிறது. சிறையே என்னுடைய வீடாக ஆகிவிட்டது. இனிமேல் இந்தியா சுதந்திரம் பெற்றால் என்னுடைய ஊருக்குப் போவேன். ஆனால் இந்தியா சுதந்திரம் அடைவது என்பது கஷ்டமான காரியம். ஜனங்கள் சர்க்காருக்கு விரோதமாகக் கிளம்ப வேண்டுமானால் இரண்டு வருஷ காலமாவது செல்லும்.''

இந்தக் கதையை அவர் கூறி முடித்த பின்னர் நாங்கள் எல்லோரும் அவரவர் இஷ்ட தேவதைக்கு வழக்கமாகச் செய்யும் பிரார்த்தனையைச் செய்து விட்டு உறங்கப் போனோம்.

இன்று காலை நல்ல வெளிச்சமாக இருக்கிறது. வைத்தியசாலையைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். கைதிச் சிப்பந்திகள் வழக்கம் போல் சுருசுருப்பாய் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லாம் வழக்கம் போல் நடைபெறுகின்றன. செய்திகள் எதுவும் வரவில்லை. டாக்டரும் தலைமை அதிகாரியும் வந்து எங்கள் ஆரோக்கியத்தைப் பற்றி விசாரிப்பார்கள். கடவுளே! எங்கள் மக்களுக்குச் சுதந்திர தாகம் உண்டாகுமாறு எப்போது அருள்வீர்? மனிதனுடைய ஆன்மா அளவற்ற ஆற்றலுடையது. கடவுள் மட்டும் மனம் வைத்து விட்டால் போதும்; கனவிலும் கூடத் தோன்றாத அளவு நம்முடைய மக்களிடம் ஊக்கமும் உற்சாகமும் உண்டாகிவிடும். அப்படி உண்டாகும்படி அருள வேண்டும் என்று கடவுளிடம் பிரார்த்தனை செய்வதைத் தவிர சிறையில் உள்ள' நாங்கள் வேறு என்ன செய்ய முடியும்?

1922 ஜனவரி, 6உ

ரங்கம் செட்டி நேற்று வைத்திய சாலைக்கு வந்திருந்தார். நான் அவர் இருக்கும் பகுதியிலிருந்து வைத்திய சாலைக்கு வந்த பின்னர் சிறை அதிகாரிகள் செய்யும் அட்டகாசங்களைப் பற்றி வெகுநேரம் கூறிக் கொண்டிருந்தார்.

''உதவி அதிகாரியும் தலைமைக் காவற்காரரும் என்னுடைய விளக்குக்கு எண்ணெய் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். எனக்கு வயிற்றுக் கோளாறு. அதனால் இரவில் விளக்கு இன்றியமையாத தேவை என்று கூறியும் அவர்கள் எண்ணெய் தர மறுத்துவிட்டார்கள். அதனால் இரவில் வயிறானது கஷ்டம் கொடாதிருக்கும் பொருட்டு நான் இரவில் உண்பதை நிறுத்திவிட்டேன். அதன் மேல் தலைமை அதிகாரியிடம் என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். நான் உண்ணாதிருந்தது தண்டிக்க வேண்டிய குற்றமாம். இறுதியில் என்னை வைத்தியசாலைக்குப் போகும்படி உத்தரவிட்டார்கள். சாஸ்திரியாரிடமும் தலைமைக் காவல்காரர் அவமரியாதையாகப் பேசினார். 'நான் வரும்பொழுது ' எழுந்து நிற்க வேண்டும். நான் உயர்ந்த உத்தியோகஸ்தர். நீ ஒரு கைதி' என்றார்'' என்று இவ்வாறாகச் சொன்னார்.





''நாம் வேண்டுமென்றே சிறைக்கு வந்திருக்கிறோம். அதனால் எவ்வளவு கடுமையாக நடத்தினாலும் அதற்கு உட்பட வேண்டியதுதான். நாம் சிறை அதிகாரிகளாய் இருந்தால் நாமும் இந்த விதமாகவே நடப்போமோ என்னவோ? எந்த தாட்சிண்யத்தையும் எதிர்பார்க்கக் கூடாது. ஏனெனில் தாட்சிண்யம் காட்டும்போது அவர்கள் முகம் சுளிப்பது சகஜம். இந்தப் பஞ்சாப் கைதிகளுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்ப்போம். தேசத்திடமும் அதன் கௌரவத்திடமும் உள்ள பக்தியின் காரணமாக அவர்கள் எவ்வளவு சந்தோஷமாகவும் தைரியமாகவும் ஆயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாப்பிள்ளைமார்க் கைதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மதத்தைக் காப்பாற்ற வேண்டி நாலைந்து வருஷ தண்டனையை அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் சாதாரணக் கைதிகள் போல் நடத்தப்பட்டாலும் அவற்றையெல்லாம் பொறுமையையே இயற்கைக் குணமாகக் கொண்டவர்கள் போல் சகித்துக் கொண்டு வருகிறார்கள். இவர்களோடு ஒப்பிட்டால் நம்முடைய கஷ்டங்கள் எவ்வளவு அற்பமானவை? அதனால் நாம் முணுமுணுக்காமல் அவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டுமல்லவா? இது வரையில் சிறை அதிகாரிகள் திருடர்களையும் அயோக்கியர்களையும்தான் கண்டிருக்கிறார்கள். இப்பொழுதுதான் நம்மைப் போன்ற கைதிகளை வைத்துச் சமாளிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதனால் நாம் பொறுமை பூண வேண்டியதாகும். நாம் பொறுமையுடனும் தைரியத்துடனும் நடந்து கொண்டால் அப்பொழுது அவர்கள் புதியதோர் உலக அனுபவம் பெறுவார்கள். நாம் குறைகளை எடுத்துக் காட்டிச் சிறையைத் திருத்த முயல்வோமானால், பரஸ்பரம் துவேஷமும் பகையுமே வளரும். அதனால் எவ்வித நன்மையும் உண்டாகப் போவதில்லை; மேலதிகாரிகள் எல்லோரும் இவர்களையே தாங்கிப் பேசுவார்கள். நீங்கள் எவ்விதக் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டியபோதிலும் நடக்கக்கூடியது அதுதான்'' என்று நான் கூறினேன்.

சின்ன டாக்டர் வந்தார். அவர் ஒரு மாப்பிள்ளை நோயாளியின் காதைப் பிடித்துத் திருகினார். ஏன் அப்படிச் செய்தார் என்று தெரியவில்லை. என் மனத்தில் சுருக்கென்று தைத்தது.





(முருகப்பா தங்கக் கோப்பைப் பந்தயம் இறுதி ஆட்டம் எழும்பூர் நகரசபை மைதானத்தில் நடக்கிறது. மக்கள் சாரி சாரியாகக் கூடியிருக்கிறார்கள்)

ஹாக்கிப் போட்டியில் ஒரு பேபி டாக்ஸி!

முருகப்பா தங்கக் கோப்பை: என்ன! அழையா விருந்தாளியான நீ எப்படித் திடீரென்று விஜயம் செய்தாய்?

ஒலிம்பிக் தங்கப் பதக்கம்: உலகம் முழுதும் என் பேச்சுத்தான். இந்தியர்கள் என்னைக் கோட்டை விட்டதைப் பற்றித்தான் பேசுகிறார்கள். இங்கே என்ன பேசுகிறார்கள் என்று கேட்க வந்தேன். இதோ கேள்!

ஹாக்கி ரஸிகர்: இந்திய கோஷ்டி ஒலிம்பிக்கில் பாகிஸ்தானோடு ஆடுகையில் பதினாறு சான்ஸ்களை இழந்துவிட்டது. அது தோற்கிறதுக்குக் கேட்பானேன்?

மற்றொரு ஹாக்கி ரஸிகர்: நம்ம இந்திய ஹாக்கி முன்னணி ஆட்டக்காரர்களான கோவிந்தா, அசோக்குமார் ஆகியவர்கள் வழக்கமாக ஆடும் இடங்களிலிருந்து மாற்றப் பட்டதுதான் தோல்விக்குக் காரணம்!

முன்னாள் ஒலிம்பிக் சாம்பியன் எரிக் பினாங்க்லி: நம் ஹாக்கி முன்னணி ஆட்டக்காரர்களிலே 'ஷூட்டிங் பிராக்டிஸ்' ரொம்பக் குறைவு. பெனல்டி கார்னர்களைக் கோட்டைவிட்டால் அதோ கதி தானே?

ஹாக்கி ரஸிகர் பாலாஜி: ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியிலே ஒரே பாலிடிக்ஸ் சார்!

ஒலிம்பிக் தங்கப் பதக்கம் (பெருமிதத்துடன்): போதுமா? என் பெருமை எப்படி அடிபடுகிறது பார்!

முருகப்பா தங்கக் கோப்பை: வா, எங்க மாட்ச் இறுதி ஆட்டத்தை வந்து பார். ரயில் வண்டி ஒழுங்காப் போனால் பேச மாட்டாங்க. தடம் புரண்டால்தான் அதைப் பற்றிப் பிரமாதமாப் பேசுவாங்க.

ஒலிம்பிக் தங்கப் பதக்கம்: உங்க இந்தியக் கோஷ்டிக்கு 'பெனல்டி கார்னர்' ஷாட் அடிக்கச் சொல்லிக் கொடுக்கணும்!

முருகப்பா தங்கக் கோப்பை: நேற்று முதல் லெக்கிலே பம்பாய் மகேந்திரா மகேந்திரா ஹாக்கி கோஷ்டி பெனல்டி கார்னரிலேதான் ஒரு கோல் போட்டதாக்கும்!

ஒலிம்பிக் தங்கப் பதக்கம்: இதோ பார்! ஜலந்தர் ஸிக்னல் கோஷ்டி எத்தனை பெனல்டி ஷாட்களை 'மிஸ்' பண்ணுகிறது!

மேஜர் ஜெனரல் கே. ஏ. எஸ். ராஜாவின் மனைவியார், முருகப்பா தங்கக் கோப்பைப் பந்தயத்தில் வெற்றிபெற்ற சிக்னல் கோஷ்டி காப்டன் பல்பீரிடம் தங்கக் கோப்பையை நல்குகிறார்.



முருகப்பா தங்கக் கோப்பை: இதோ 'பெனல்டி கிக்'கை கல்யாண் சந்த் கோலுக்குள் எவ்வளவு லாகவமாப் போட்டுட்டார்!

ஒலிம்பிக் தங்கப் பதக்கம்: ஆளுக்கு ஒரு கோல்! ஆட்டம் இழுபறிதான்! 'பரமபத சோபான'த்தில் பாம்புக்குள் இறங்குகிறமாதிரி ஆட்டத் தரம் இறங்கிக்கிட்டே போறது!

வள்ளியம்மை வெள்ளிக் கோப்பை: என்ன இந்த ஆளு ஒரேயடியா நம்ம ஆட்டக்காரர்களை விளாசித் தள்ளுறுரு? நாலு வருஷங்களுக்கொரு முறை தலைகாட்டற இவருக்கு இத்தனை அகம்பாவம் வேண்டாம்!

ஒலிம்பிக் தங்கப் பதக்கம்: இது என்ன புதுசாக் கேட்குது மிடுக்கான குரல்?

முருகப்பா தங்கக் கோப்பை: பேரன்கள் அழகப்பனும் அண்ணாமலையும் புதுசா இந்த வருஷத்திலிருந்து வள்ளியம்மை பேரிலே 'ரன்னர் அப்'புக்கு வெள்ளிக் கோப்பை வழங்க முன்வந்திருக்காங்க!

வள்ளியம்மை வெள்ளிக் கோப்பை: அவரது கிரிடிஸிஸம் கிடக்கு. இதோ ஜலந்தர் சிக்னல் கோஷ்டியிலே குள்ளமான சுரீந்தர் சிங் எப்படிப் பந்தோடு பாய்கிறார்! அவருக்கு 'பேபி டாக்ஸி'ன்னு பட்டம் கொடுத்துட்டாங்க!

முருகப்பா தங்கக் கோப்பை: அபாரம்! பவர் ஆட்டம் படுஜோர். எதிரி அணியைத் தகர்த்துக் கொண்டு வெற்றிக் கோலைப் போட்டு விட்டாரே! நான் தரமான ஆட்டக்காரர்களைத்தான் சென்றடையப் போகிறேன் என்பதில் திருப்தி.

வள்ளியம்மை வெள்ளிக் கோப்பை: சிக்னல் ஆட்டக்காரர்கள் அடித்த பல கோல்களைப் பிரமாதமாகத் தடுத்தாரே மகேந்திரா கோல்கீப்பர் பெரைரா, அவரது ஆட்டத்துக்காகவே நான் பம்பாய் மகேந்திரா மகேந்திரா குழுவுக்குச் செல்வதில் பெருமைப்படுகிறேன்!

— குண்டுமணி


ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜ்.
6
ஜக்குவை ஆசானாகப் போட்டு ஜூடோ–கராட்டே பள்ளி நடத்தலாம் என்பது கப்பண்ணாவின் கருத்து.
பேஷான ஐடியா! இன்று நாட்டிலே நிலவுகிற கலாட்டா சூழலுக்கு ஏற்ற யோசனை!...
...நிறையப் பேர் வருவாங்க, பயிற்சி பெற. பணம் குவியும்!
அழகுதான்! நிக்ஸனிடம் கூலி வாங்கற ஸி.ஐ.ஏ. ஏஜன்டுங்கன்னு முத்திரை குத்தி உங்க இரண்டு பேரையுமே உள்ளே தள்ளிடுவாங்க!....
...தலைவரங்களைத் தாண்டி ஐந்தாம் படை வேலை செய்யறதாகக் குற்றம் சுமத்துவாங்க!
கப்பண்ணா என்ன பண்ணாரே?
என் ஐடியாவை மூட்டை கட்டி....
...பரண் மேலே வைச்சுட்டேன்.
அப்படின்னா என் ஐடியாவைக் கேளு! ஒரு சினிமா எடுக்கலாம்!...
ஒண்டர்ஃபுல்! கண்ணிருந்தும் காணாதவனே– சினிமா தியேட்டரிருந்தும் பாராதவன்!
...அதிலே நம்ம பொன்மொழி தான் ஹீரோயின்!
தாங்க்யூ பாழ! தாங்க் யூ!


ஆனா ஒண்ணு, யாராவது ஒரு பழம் பெரும் நடிகையை எனக்கு....
....அம்மாவா நடிக்க வைச்சுட்டு அவ பேரைப் பெரிசா போட்டுடாதீங்க!..
...டைட்டில்ஸ்ஸில் என் பேர் தான் பிரதானமா, பெரிசா, எடுத்த எடுப்பிலேயே தெரியணும்! இதை ஒப்பந்தத்திலேயே எழுதணும்.
சரி, ஹீரோ யாரு?
சந்தேகமென்ன ஜக்குதான்! நான் ஒரு ஹீரோங்கறதை அவன் ஏற்கனவே நிரூபிச்சுட்டானே!
அப்பா! என் மனசில் இருப்பதை அப்படியே படம் பிடிச்சுட்டீங்க!
ஆமா, சினிமா முழுவதையுமே இவர் இப்படியே படம் பிடிச்சுடுவார்!
...ஏண்டா பணத்துக்கு எங்கே போவே? ஏற்கனவே நம்ம கம்பெனி திவாலாகிற நிலையில் இருக்கு....
அசடு! இந்த மாதிரி நிலையில் தான் சினிமா எடுக்கணும்!...
...சொந்தப் பணத்தைப் போட்டு இந்தக் காலத்தில் எவன் சினிமா எடுக்கிறான்? தப்பித் தவறி சொத்து இருந்தாலும் அதையெல்லாம் முன் ஜாக்கிரதையா பெண்டாட்டி பிள்ளைகள் பேரிலே எழுதி வைச்சுட்டுத் தான் கோதாவிலே இறங்கணும்!
அது சரி, என்ன சினிமா எடுக்கறது? கதை வேணுமா?
அது எதுக்கு? ஒரு ஜாங்கோ படம் எடுத்தா தீர்ந்தது! எழுத்தாளனுக்குத் தர பணம் மிச்சம்!
நைட் கிளப் டான்ஸு நாலுக்குக் குறையக் கூடாது! ஜின்...! லல்லா! இன்ஜின்...! லல்லா!
பழிக்குப் பழி வாங்கணும்! டிஷூம்! டிஷூம்! டுமீல்! டுமீல்!
லொள் லொள்!
குதிரைகள் ஓடணும்! டகடக், டகடக், டகடக்!
"'டபிள் மீனிங்' முக்கியம், மறந்துடாதீங்க" என்று குட்டி கிருஷ்ணன் நினைவூட்டுகிறார்!

விரலுக்கு மிஞ்சின வீக்கம் உடலுக்கு ஆபத்து என்பது போல, அவருடைய அந்தஸ்துக்கு மீறின சம்பந்தம், அவரை இந்த அலங்கோலத்துக்கு ஆளாக்கிவிட்டிருந்தது.

தம்முடைய ஒரே அருமந்த மகளான விமலாவுக்குத் தம் அந்தஸ்தையும் மீறிப் பெரிய இடத்தில் கடனும் உடனும் பட்டுத் திருமணம் செய்து வைத்தார்.

உற்றாரும் உறவினரும் எவ்வளவோ எச்சரித்தும் கேட்கவில்லை. மனைவி சிவகாமுவும் சொல்லிப் பார்த்தாள், "பெண் எனக்கு மட்டும் அருமை இல்லையா? இருந்தாலும் நாளைக்கு நம் எதிர்காலத்தையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டாமா? நம்மை உட்கார வைத்து ஒரு வேளை சாதம் போட நமக்குப் பிள்ளையா இருக்கிறான்?" என்று.

"அடி பைத்தியமே! என் ஒரு பெண் ஆயிரம் பிள்ளைகளுக்குச் சமம். உன்னையும் என்னையும் கடைசி வரையில் தாங்கப் போகிற பத்தரை மாற்றுத் தங்கம்" என்றார் பெருமை பொங்கும் குரலில்.

அங்குதான் அவர் கணக்குத் தப்பிப் போயிற்று. பத்தரை மாற்றுத் தங்கம் கூட, எதுவும் கலவாமல் இருந்தால்தான் மாற்றுக் குறையாமல் இருக்கிறது. அத்துடன் இதர உலோகங்களைக் கலந்து விட்டால், மாற்றுக் குறைந்துதான் போய்விடுகிறது!

விமலாவின் மன நிலையும் அப்படித்தான் ஆயிற்று. ரங்கையருக்கும் சிவகாமுவுக்கும் மகளாக மட்டும் இருந்தவரையில் பெற்றோர்களிடம் அளவற்ற பாசம் கொண்டிருந்தாள்.

ஆனால் மனைவி என்ற நிலைக்குயா நினைவுடன் கணவனின் கட்டளையை மீறமுடியாத பலவீனமும், கண்மண் தெரியாத காதலின் போதையும் அவள் உள்ளத்தின் அன்பு ஊற்றை அடைத்துப் போட்டு விட்டன.

ரங்கய்யருடைய உத்தியோகத்தில் கிடைத்த ஊதியம் அவர் வாங்கியிருந்த கடனுக்கு வட்டி கட்டவே போதுமானதாக இல்லை. எப்பாடுபட்டோ ஒவ்வொரு நாளையும் ஒரு யுகமாக, மூன்று வருடங்களைக் கழித்துவிட்டவருக்கு இப்போது ஆறு மாதங்களாகத் தாங்கமுடியாத நெருக்கடி; சொல்லில் அடங்காத சிரமங்கள்!

"ஸார்!... ஸார்...!" என்ற குரல் கேட்டுச் சிந்தனை வலையிலிருந்து வெளியே வந்து கண்களைத் திறந்தவரின் விழிகள் வியப்பில் விரிந்தன.

"அட ஆறுமுகம்! நீ இன்னிக்கு வருவேன்னு நான் எதிர்பார்க்கவேயில்லை. போன காரியம்... போன காரியம்..." என்றவர், குரலைத் தாழ்த்திக் கொண்டு, "கு...குழந்தையைப் பார்த்தியா? சௌக்கியமா இருக்கிறாளா?" என்று கேட்டார்.

முகம் மலர அவர் அருகே வந்த ஆறுமுகம், "ஸார்! சின்னம்மாவைப் பார்த்தேன். அவங்கதான் என்னைச் 'சட்டுப் புட்டுன்னு' இதையெல்லாம் கொண்டு போய்க் கொடு'ன்னு விரட்டினாங்க. அதாங்க ஓடி வந்தேன்" என்று சொன்னதும் தலையைத் திருப்பி அவனுக்குப் பக்கத்தில் இருந்தவைகளைப் பார்த்தார் ரங்கையர்.

பத்துப் படி அரிசிக்குக் குறையாத ஒரு கோணி மூட்டை; பழங்கள் இருப்பதை மணத்தின் மூலம் வலியுறுத்திய இரண்டு கூடைகள்; பச்சைக் கறிகாய்கள் நிறைந்த துணிப் பை ஒன்று.

அவன் குரல் கேட்டதுமே அங்கு ஓடிவந்து நின்ற சிவகாமு, "குழந்தையா கொடுத்து அனுப்பினாள்! எப்படி இருக்கிறாள்? என்னவெல்லாம் கூறினாள்?" என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டாள்.



அவன் கேள்விகளுக்கெல்லாம் அமைதியாக விவரமாகப் பதில் சொன்னான் ஆறுமுகம்.

கண்களில் நீர் பெருக, தங்கள் அருமை மகளைக் கண்ணெதிரில் பார்க்கும் பரவசத்துடன் அவன் சொன்னதை யெல்லாம் சித்தம் குளிர, செவி குளிரக் கேட்டுக் கொண்டிருந்தனர் அந்த வயோதிகத் தம்பதியர்.

விமலா பொருள் அனுப்பியதை விட, அவளுக்குத் தங்களிடமிருந்த பாசம் குறையவில்லை என்பதை அறிந்ததும், அந்த விநாடியே அவர்களுக்குப் பத்து யானை பலம் வந்தது போன்ற தெம்பு ஏற்பட்டது.

"ஆறுமுகம்! உன்னை நாங்கள் என்றென்றைக்கும் எங்கள் பிள்ளையாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த எண்ணத்தின் உரிமையில் உன்னிடம் ஓர் உதவி கோரப் போகிறேன். எங்கள் மாப்பிள்ளையின் மனம் மாறுகிற வரையில் நீதான் எங்களுக்கும் விமலாவுக்கும் இடையே பாலமாகப் போய் வந்து கொண்டிருக்க வேண்டும். உனக்குச் சிரமமாக இருந்தாலும் கூட, எங்களுக்காக இதைச் செய்வாயா ஆறுமுகம்?" என்று அவனது கைகளைப் பற்றிக் கொண்டு அவர் கேட்டதும், அந்தக் கைகளை அப்படியே கண்களில் ஒற்றிக் கொண்டான் ஆறுமுகம். "அப்படி யெல்லாம் பேசாதீங்க ஸார். நான் என்றைக்கும்உங்க அடிமை ஆறுமுகம்தான். உங்க வேலையைக் கவனிச்ச பிறகு தான் எனக்கு உத்தியோகம். என்னுடைய இன்றைய அந்தஸ்து நீங்க இட்ட பிச்சை என்பதை மறக்கவே மாட்டேன் ஸார்!" என்று சொல்லி விட்டுப் போனான்.

பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்த பிறகு அதுவும் இரண்டு மூன்று மாதங்களாக ரங்கையர் படும் கஷ்டங்கள் அவன் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தன. அவனாகவே ரங்கையரிடம் வந்து, "ஸார்! நான் ஒன்று சொல்றேன்; கோவிச்சுக்காதீங்க. நம்ம விமலாம்மாவுக்கு உங்க கஷ்டம் தெரிஞ்சிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. தெரிந்தால் சும்மா இருக்க மாட்டாங்க. அதனாலே நான் அந்த ஊருக்குப் போய், இருக்கிற சூழ்நிலையைப் பார்த்து, சந்தர்ப்பம் கிடைத்தால் உங்கள் சிரமத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி வருகிறேன்" என்றான். அரை மனத்துடன்தான் ரங்கையர் சம்மதித்தார். ஆனால் அவனோ முழு வெற்றியுடன் திரும்பி வந்து விட்டான்.

ஒன்று, இரண்டு என்று ஆறு மாதங்கள் ஓடிப் போயின. மழை கண்ட பயிர் போல, மகளின் உதவியில் ரங்கையரும் சிவகாமுவும் தெம்பாக வளைய வந்தனர். தைரியமாக நிலைமையைச் சமாளித்தனர். சிரமங்களும் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தன.

வழக்கம் போல் விமலா கொடுத்து அனுப்பிய அரிசி மூட்டையை ஆறுமுகம் அந்தண்டை போன பிறகு பிரித்து அளந்து கொட்டின சிவகாமு, அருகில் நின்று கொண்டிருந்த கணவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"பார்த்தீர்களா, போன மாதம் நான் சொன்னதும், சரியாக அளந்திருக்க மாட்டாய் என்று சொன்னீர்களே, இப்போது என்ன சொல்கிறீர்கள்? இரண்டு மாதங்களாக எட்டுப் படி அரிசிதான் இருக்கிறது. தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் இருப்பானா? நாம் என்னதான் பிள்ளையாகப் பாவித்தாலும் ஊரில் இருக்கிறவன்களெல்லாம் நம் வயிற்றிலே பிறந்த குழந்தைக்கு ஈடாக ஆகிவிட முடியுமா? அவளுக்கு இருக்கும் பாசமும், பச்சாதாபமும் இவனுக்கு இருக்கிறதா, பாருங்களேன்" என்று பொரிந்து கொட்டினாள் சிவகாமு.

"உண்மைதான்" என்று வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்ட ரங்கையர் "இரு இரு. இந்த மாதம் அவனைக் கையும் களவுமாகப் பிடித்துவிடுகிறேன்" என்றார் ஒரு விதத் தீர்மானத்துடன்.

"வள்ளி! இன்று என்ன நாள் தெரியுமில்லே? ஐயாவுடைய மகள் ஊருக்குப் போய் வரவேண்டிய நாள்!" என்றான் ஆறுமுகம்.

அவன் அருகே வந்து உட்கார்ந்திருந்த அவன் மனைவி, "என்னங்க, நம்மகிட்ட இப்போ இருக்கிறதே பதினைந்து படி அரிசி தானே? இதிலே ஐயாவுக்கு எத்தனை படி அளந்து கட்டி வைக்கட்டும்?" என்று கேட்டாள்.

"ஒருபடி அரிசி மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு, மீதியைக் கட்டிக் கொடு. போன இரண்டு மாதங்களாகவே நான் நினைச்ச படி, பத்துப் படி கொடுக்க முடியாமல் குறைந்து போயிடுத்து. இந்தத் தடவை நமக்கு எத்தனை



அவனே மகன்

கஸ்தூரி பஞ்சு

கஷ்டமாக இருந்தாலும் பரவாயில்லே. ஐயாவுக்குக் கொடுப்பதில் குறைக்காதே.. அவர் என்னைப் பிள்ளை மாதிரி காப்பாற்றினதற்கு நான் இதுகூடச் செய்ய வேண்டாமா? வெளிப்படையாக நான் கொடுக்கிறேன்னு சொன்னு ஐயா வாங்கிக்க மாட்டார். அதற்காகத்தான் இப்படி ஒரு சின்ன நாடகம் போடறேன். இதுலே எங்க ஐயாவுக்கும் அம்மாவுக்கும் எத்தனை மனச் சந்தோஷம் தெரியுமா? பாவம் அவுங்க! என்னை வீட்டு வாசற்படி ஏறுதேன்னு விரட்டியடிச்ச விமலாம்மாதான் கொடுத்தனுப்புவதாக நம்பிக் கொண்டு நிம்மதியா இருக்காங்க!''

இதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ரங்கையருக்கு நெஞ்சையடைத்து நிலை தடுமாறியது. 'ஆறுமுகம் கோபுரம்போல உயர்ந்தவன். நான் கேவலமான குப்பை மேடு. இல்லாவிட்டால் இப்படி வந்து நின்று கொண்டு அவனை உளவு பார்ப்பேனா? ஆனால் இந்த அற்பமான செயலினால்தானே ஓர் அற்புதமான உண்மையைப் புரிந்து கொள்ள முடிந்தது! 'ஊரிலே உள்ளவங்களெல்லாம் பிள்ளையாகிவிட முடியுமா?' என்றுனே, சிவகாமு! 'அடி பைத்தியக்காரி! வயிற்றிலே ஜனித்துவிட்டதினால் மட்டும் பத்து மாதங்கள் சுமந்து பெற்றெடுத்ததினால் மட்டுமே ஒரு குழந்தைக்குப் பாச உணர்வு வந்து விடும் என்று நினைத்து விடாதே! எவனொருவனின் நெஞ்சிலே நன்றி உணர்வு வற்றிப் போகாமல் இருக்கிறதோ அவன்தான் பிள்ளையின் ஸ்தானத்துக்கு உரியவன்!' அந்தத் தடுமாற்றத்திலும் சிவகாமுவிடம் இந்தப் பேருண்மையைக் கூற விரைந்தார் ரங்கையர்.




கனவானே புத்திமான்!

கதிர்வீச்சு அளவுமானி

எக்ஸ்ரே எடுக்கும் டாக்டரின் கோட்டில் ஒரு பாட்ஜ் தொங்குகிறதே. கவனித்திருக்கிறீர்களா? — அதுதான் கதிர் வீச்சு அளவுமானி.

எக்ஸ்ரே இயந்திரத்தை இயக்குகிறார்களே -- அவர்களை எக்ஸ்ரே அலைவட்டம் விட்டு வைப்பதில்லை. அறையில் பரவும் கதிர்வீச்சு (Radiation) சிறிது சிறிதாகச் சிப்பந்திகளையும் பாதிக்கிறது. உடல் தாங்கும் அளவுக்கு மேல் கதிரியக்கம் ஏற்பட்டால் சிப்பந்திகளுக்கு அனிமியா, லூகிமியா போன்ற வியாதிகள் வந்துவிடும். இதனைத் தவிர்ப்பதற்கு ஏற்பட்டதுதான் 'பாட்ஜ்'.

இந்த பாட்ஜினுள் ஒரு போட்டோ பிலிம் இருக்கிறது. எக்ஸ்ரே நிபுணரின் உடலில் எவ்வளவு தூரம் 'ரேடியேஷன்' ஏற்பட்டிருக்கிறது என்பதை



அந்தப் பிலிம் பதிவு செய்கிறது. ஆல்பா, பீட்டா, காமா, புற ஊதா கதிர்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக அளந்து காண்பிக்கிறது.

இந்தப் பிலிமைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அணுச் சக்திக் கேந்திரத்துக்கு அனுப்புகிறார்கள். அங்கு அது டெவலப் செய்யப்பட்டுப் பரிசோதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட அளவைவிடக் கதிர்வீச்சு அதிகமாக இருந்தால் அங்கிருந்து தந்தியோ, எக்ஸ்பிரஸ் கடிதமோ வரும். உடனே அந்த எக்ஸ்ரே சிப்பந்தி எக்ஸ்ரே இலாகாவிலிருந்து மாற்றப்பட வேண்டும். இச்சின்னஞ் சிறு பாட்ஜ் 15000 மருத்துவ நிபுணர்களையும், ஆய்வாளர்களையும் ஆபத்திலிருந்து காக்கிறது. அது மட்டுமல்ல; டிராம்பே அணு உலையில் மூவாயிரம் விஞ்ஞானிகளும் இதனை அணிந்து தற்காத்துக் கொள்கிறார்கள்.

-- எஸ். நீலா


கட்டிடங்கள் உறுதியாக நீடித்து நிலைக்க
செட்டிநாடு
சிமெண்ட்
CHETTINAD
BRAND
கிணறுகள், களஞ்சியங்கள், களங்கள் உறுதியாக அமையவும், நீடித்து நிலைக்கவும் உதவுவது செட்டி நாடு சிமெண்ட்.
விரைவில் படிமானமாகி வலுவாக இறுகும் இதன் தன்மை கட்டுமானங்களை சிக்கனமாக கட்ட உதவுகிறது.
தயாரிப்பாளர்கள்
செட்டி நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்
6,அரண்மனைக்காரத்தெரு,சென்னை–1போன்25356தந்தி :"BESTCEMENT"
தொழிற்சாலை:குமாரராஜாமுத்தையா நகர்,புலியூர் (கரூர்),திருச்சி மாவட்டம்.போன் 144, தந்தி "CEMENT"
செல்ஸ் டிப்போக்கள் : நெ.3,முதல் மெயின் ரோடு,காந்திநகர் போஸ்ட், பெங்களூர்-9 போன்:71715
18-C,சக்கியாஸ் லேன்,கல்கத்தா-1 போன்: 22-4986

குளிர்காலத்திலும் சரி,
கோடைகாலத்திலும் சரி—
மார்கோசோப்
சுத்தம் செய்வதோடு மட்டும்
நிற்பதில்லை—
சருமத்தை பாதுகாக்கிறது.

**ஏனெனில் மார்கோவில்
மட்டுமே வேப்பெண்ணெய்
சேர்ந்துள்ளது.**



மார்கோ சோப்

ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

CCM-4183-A (Rev)

இலக்கிய மலர்கள்

மீ.ப. சோமு



1. நெஞ்சில் நிலைபெற்றாள்!

பாலும் தெளிதேனும்
　　பாகும் பருப்பும், இவை
நாலும் கலந்துனக்கு
　　நான்தருவேன் — கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத்
　　தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும்
　　தா!

கோலம் செய் — அழகு திகழ்கிற.
துங்கக் கரிமுகம் — அகலமான ஆனை முகம்.

தமிழ் மூதாட்டியாகிய அவ்வையார் விநாயகப் பெருமானை இவ்வாறு வேண்டுகிறார். வீட்டுத் தெய்வமாகச் சொந்தம் கொண்டாடி அவருக்கு நான்கு பொருள்களை நிவேதனமாகக் கொடுத்து அவரிடமிருந்து மூன்று பொருள்களைக் கேட்கிறார்! பாலும், தேனும், சர்க்கரைப் பாகும், பருப்பும் கலந்து ஊட்டுகிற அவ்வையார் இத்தனை சுவையும் கலந்து ருசிக்கிற இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க் கலைகளையும் தமக்கு அருளும்படி, பிள்ளையாரை வேண்டுகிறார். இந்தப் புதிய இலக்கியத் தொடரைத் தொடங்கும்போது நாமும் அந்தப் பாடலையே சொல்லி விநாயகப் பெருமானுடைய திருவருளை வேண்டுவோமாக!

தமிழ் இலக்கியம் என்ற பூஞ்சோலை இயல் இசை நாடகம் ஆகிய மூவண்ண மலர்ச் சோலை. இந்தச் சோலையிலே எத்தனையோ பெருங் காவியங்களும், சிறு காவியங்களும் பல நூறு ஆண்டுகளாக இலக்கிய உணர்வு என்ற நறுமணத்தை இதயத்தில் நிரப்பி வந்திருக்கின்றன. இவற்றுக்கு அருகிலே இந்தக் காவியங்களைப் போலவே, சிறு சிறு தனிப் பாடல்களும் பல்லாயிரக் கணக்கில் பூத்து நின்று எழிலும் வண்ணமும் கொண்ட வாடா மலர்களாக இலக்கிய நறுமணத்தைப் பரப்பி வந்திருக்கின்றன. சங்கப் பாடல்களும் அவற்றுக்குப் பிறகு தோன்றிய தனிப் பாடல்களும் இந்த இலக்கிய இனத்தைச் சேர்ந்தவை.

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரும் அவரைப் போன்ற பெரும் புலவர்களும் பல சூழ்நிலைகளில் தமது சொந்த வாழ்வின் நிகழ்ச்சிகளையும், நாடக இயல்போடு கூடிய பல கற்பனைக் காட்சிகளையும் இந்தப் பாடல்களிலே சொல் — ஓவியங்களாக நமக்கு வரைந்து தந்திருக்கிறார்கள். அத்தகைய அழகிய ஒரு சொல் ஓவியத்தை, கம்பருடைய தனிப் பாடல் ஒன்றை, இப்போது பார்ப்போம்.

ஒரு கற்பனைக் கதை. அருமையான காதற் சிறுகதை.

பழமையான நகரம். கோவிலிலே பெரிய திருவிழா நடக்கிறது. அந்தத் திருவிழாவைக் காண்பதற்காக நாட்டுப்புறத்திலிருந்து ஓர் இளைஞன் வந்திருக்கிறான்.

அழகு மிகுந்த பெண் ஒருத்தி, கோவிலிலே நடனம் ஆடுகிற கலை அழகி, மாலை நேரத்தில் தெரு வீதியிலே நடந்து கோவிலை நோக்கிச் செல்கிறாள்.

நாட்டுப்புறத்து இளைஞன் இத்தகைய ஓர் அழகியை இதற்கு முன் கண்டதில்லை.

இளைஞனுடைய மனம் அவன் வசம் இல்லை. அழகியைப் பின்தொடருகிறது அந்த இளம் மனம்.

நிலையைப் புரிந்து கொண்ட அந்தக் கட்டழகி நாட்டுப்புறத்து இளைஞனிடம் ஒரு சிறு நையாண்டி செய்கிறாள்.

"இளைஞரே! இந்தக் கோபுர வாசலிலே நில்லும். நான் உள்ளே போய் வழிபாடுகளை முடித்துக் கொண்டு திரும்பி வருகிறேன்!" என்று சொல்லிச் செல்கிறாள் அவள். கிழக்குக் கோபுர வாசலிலே நுழைந்தவள் அப்படியே மேற்குக் கோபுர வாசல் வழியாக மறைந்து விடுகிறாள்! இளைஞன் நிற்கிறான். நின்று நின்று பார்க்கிறான். சென்ற அழகி சென்றவள்தான். திரும்பி வரவில்லை!



கோவிலுக்குள்ளிருந்து பலர் வெளியே வருகிறார்கள். ''ஐயா, இந்தப் பக்கமாக ஒரு பெண்ணழகி சென்றாளா?'' என்று கேட்கிறான். ''இல்லை'' என்று மறுமொழி வருகிறது. அந்த இளைஞனை ஏற இறங்கப் பார்த்தவாறு! பெயரைச் சொல்லி விசாரிக்கலாம் என்றாலோ அவளுடைய பெயரைக் கேட்க மறந்துவிட்டான், தனது மதி மயக்கத்திலே! பாவம், என்ன செய்வது!

கம்பருடைய பாடல் வருகிறது; இளைஞன் சொல்வதாகவே, அவனுடைய பேச்சாகவே வருகிறது பாட்டு:

இல் என்பார் தாம் அவரை

[இல் — இல்லை. 'அவர்' என்பது பெண்ணைக் குறிக்கிற ஒரு பழைய மரியாதை வழக்கு.]

கோவிலுக்குள் இருந்து வருகிறவர்கள் எல்லாரும் அந்த அம்மாளைக் காணவில்லை, இல்லை, இல்லை என்றே சொல்கிறார்கள்.

இல்லென்பார் தாமவரை
யாம்அவர்தம் பேரறியோம்

விசாரித்துப் பார்க்கலாம் என்றால் நமக்கு அந்தப் பெண்ணின் பெயர் தெரியாது ! அவளிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேனில்லை ! என்றாலும், பெயர் தெரியாதே தவிர, அடையாளம் நன்றாகத் தெரியும். எப்படி?

பல்என்று செவ்ஆம்பல்
முல்லையையும் பாரித்து

செவ்வாம்பல் மலரை எடுத்து இதழ்கள் என்று இருகூறாக வைத்துக் கொண்டான். அவற்றின் நடுவிலே முல்லை மொட்டுக்களை இரண்டு வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறான். அவற்றுக்குப் பெயர் பற்களாம்.

பல்லென்று செவ்வாம்பல்
முல்லையையும் பாரித்துக்
''கொல்'' என்று காமனையும்
கண் காட்டி

[காமன் — மன்மதன்]

இந்தச் செவ்வாம்பல் இதழ்களும் முல்லைப் பற்களுமே போதும், நம்மைப் பாடாய்ப் படுத்துவதற்கு! இவற்றிற்கும் மேலாக, மன்மதனை அழைத்து ''இவனைக் கொல்வாயாக !'' என்று ஒரு கட்டளையும் இட்டாள் அந்தப் பெண்ணழகி ! எப்படி ? கண் சாடையிலேயே அந்தக் கொலை உத்தரவு, மன்மதனிடம் !

கொல்லென்று காமனையும்
கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில் என்று போனார்

மன்மதனை அழைத்து என்னைக் கொன்று தீர்க்கும்படி கண்ணினாலேயே ஓர் உத்தரவும் போட்டுவிட்டு, என்னிடம் என்ன சொன்னாள் ? ''கோபுரத்தின் கீழ் நில், வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிப் போனாள். ஆனால் ?

கொல்லென்று காமனையும்
கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனார், என்
நெஞ்சைவிட்டுப் போகாரே !

அவ்வளவுதான். கீழைக் கோபுர வாசலில் நுழைந்தவள் மேலைக் கோபுர வாசல் வழியாகச் சென்றுவிட்டாள். சென்றவள் அப்படியே சென்று மறைந்து விட்டாளா ? இல்லையே !

நில்லென்று போனாரென்
நெஞ்சைவிட்டுப் போகாரே !

கோபுர வாசல் வழியாகச் சென்றுவிட்டாளே தவிர, நெஞ்சக் கோபுரத்திலே நுழைந்தவள் உள்ளத்தைவிட்டுப் போகாமல் அப்படியே இன்னும் நிற்கிறாளே என்று முடிகிறது பாடல் !

இல்லென்பார் தாமவரை
யாமவர்தம் பேரறியோம்
பல்லென்று செவ்வாம்பல்
முல்லையையும் பாரித்துக்
கொல்லென்று காமனையும்
கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனாரென்
நெஞ்சைவிட்டுப் போகாரே !

நான்கு வரிகளில் ஒரு சிறிய பாடல் இது. சொல்கிற கதையோ, சித்திரிக்கிற இதய தாபமோ, மனித மனத்தின் அகல நீள ஆழங்களுக்கெல்லாம் தக்கபடி விரிந்து பரந்து ஆழ்ந்து பேசுகிறது ! நெஞ்சை விட்டுப் போகாத அந்த அழகியைப் போலவே நெஞ்சைவிட்டு நீங்காது நிற்கிற அழகிய பாடல் இது.

கம்பருடைய இராமாயணம் ஒரு மாபெரும் காவியச் சோலை. அதன் அருகிலே அவர் புனைந்த பல தனிப் பாடல்கள் நந்தவனமாக நிற்கின்றன. அந்த நந்தவனத்திலே ஒரு வாடாத காதல் மலராக மணம் வீசிக் கமழ்கிறது இந்தச் சிறிய இலக்கிய மலர்.

(தொடரும்)





மாத வருவாய் திட்டம்

நீங்கள் ஓய்வு பெற்றாலும் உங்களுக்கு மாதந்தோறும் வருமானம் கிடைக்க கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட் இப்போது மாத வருவாய்த் திட்டத்தை உங்களுக்கென்றே உருவாக்கியிருக்கிறது.

உங்களுடைய பிள்ளைகள் படிப்பை முடித்து வேலைக்கு போய்க் கொண்டிருக்கலாம், அல்லது உங்கள் பெண்களை திருமணம் முடித்து புகுந்த வீடு அனுப்பியிருக்கலாம்; இருந்தாலும் உங்களுக்கென்று மாத வருமானம் கிடைத்தால் கவலையில்லாமல் இருக்கலாம் அல்லவா?

பத்து வருஷங்களுக்கு மாதந்தோறும் ரூ.100/-கட்டிக்கொண்டு வந்தால் அடுத்த 10 வருஷங்களுக்கு மாதம் ரூ. 205/- வருவாய் கிடைக்கும்.

இந்தத் திட்டம் ஓய்வு பெறுபவர்களுக்கு மட்டுமல்ல, சிறுவர், சிறுமியர்களுக்கும் வருங்கால வாழ்க்கைக்கு ஏற்றதொரு திட்டம்.

— சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி

ESTD. 1906

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

(முன்பு கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம்: உடுப்பி. நிர்வாக அலுவலகம்: மங்களூர்.

maa/CB/241-M Tam.

வயிற்றுக் கோளாறு?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை மெல்லுங்கள்...
விரைவிலேயே நிவாரணம் பெற

பெப்பர்மிண்ட்
கலையுள்ள ரென்னியை கைவசம்
வைத்திருங்கள்.

நிக்கோலஸ் (N) தயாரிப்பு

mcm/ni/4 tam

சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

பத்தொன்பதாம் அத்தியாயம்

பஸ் நிலையத்தில் கண்ணுக்கினியாளையும், அவள் தந்தையையும் மதுரைக்கு வழியனுப்பிவிட்டுத் திரும்பிய பாண்டியனை எதிர்பார்த்து அண்ணாச்சி கடையில் கதிரேசன் காத்திருந்தான். அண்ணாச்சியையும், பாண்டியனையும் ஒரு முக்கியமான செய்தியோடு எதிர்கொண்டான் கதிரேசன். மறுநாள் காலையில் பல்கலைக் கழக 'சிண்டிகேட்' சந்திக்கப் போவதாகவும் அந்த சிண்டிகேட் கூட்டத்தில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக் கூட ஒழுங்காக முடிக்காத அமைச்சர் ஒருவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்யப்பட இருக்கிறது என்பதாகவும் கதிரேசன் தெரிவித்த போது அண்ணாச்சியும் பாண்டியனும் முதலில் அதை நம்புவதற்கு முடியாமல் தவித்தார்கள். பாண்டியன் கதிரேசனோடு பந்தயம்கூடக் கட்டினான்.

"நீ சொல்வது உண்மையாயிராது கதிரேசன்! யாராவது புரளியைக் கிளப்பிவிட்டிருப்பார்கள். நம்முடைய மல்லிகைப் பந்தல் பல்கலைக் கழகச் சட்டங்களின்படியும், விதிகளின்படியும் பதினெட்டு சிண்டிகேட் உறுப்பினர்களும் ஒருமனமாக முடிவுசெய்தாலொழிய ஒருவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் தர முடியாது. சிண்டிகேட்டில் அவ்வளவு உறுப்பினர்களுமே 'ஆமாம் சாமி'களாக இருக்கமாட்டார்கள்...."

"இருப்பார்களோ, இருக்கமாட்டார்களோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது! எந்த மந்திரியை லெக்சரர் மதனகோபாலின் அயோக்கியத்தனங்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கிறார் என்பதற்காக நாம் எதிர்த்தோமோ, எந்த மந்திரி காலமெல்லாம் மாணவ சமூகத்தைப் போலீஸ் அடக்குமுறையில் சிக்க வைத்துத் துன்புறுத்தியிருக்கிறாரோ அதே மந்திரிக்கு—ஏதோ சில சுயநல வசதிகளுக்கான ஒரு லஞ்சம் போல் இதைத் தரப் போகிறார்கள். நடக்கிறதா, இல்லையா பார்க்கலாம்? எனக்கு மிகவும் நம்பிக்கையான இடத்திலிருந்து இந்தத் தகவல் கிடைத்திருக்கிறது! பிச்சைமுத்து சார் சொல்லியிருப்பது போல் அறிவாளிகளும், சிந்தனையாளர்களும் சுயநலமிகளாக இருக்கிற சமூகத்தில் எந்தக் கேடும் நடக்க முடியும்....."

"ஒரே நாள் பழக்கத்தில் நிலக்கோட்டை டிரில்மாஸ்டர் உன்னை மயக்கிவிட்டார்! கதிரேசனுக்கே ஒருவரைப் பிடிக்க வேண்டுமானால் அவர் பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும்! இந்தத் 'தகவல்' கூட அவர்மூலம் தான் உனக்குத்தெரிந்ததா, கதிரேசா?"

"இல்லை பாண்டியன்! இது ரிஜிஸ்திரார் ஆபீஸ் மூலம் நான் கேள்விப்பட்டது. இதற்கும் பிச்சைமுத்துசாருக்கும் சம்பந்தமில்லை."

"நீ சொல்கிறபடியே நடப்பதாக இருந்தாலும் நாளை மாலைக்குள் அது தெரிந்து விடுமே? நாளைக்கும் இங்கே தங்கியிருந்துவிட்டுத்தான் அப்புறம் நான் ஊர் போகலாம் என்றிருக்கிறேன்! எதற்கும் நாளை மாலையில் மறுபடியும் சந்தித்துப் பேசலாம். மறந்துவிடாமல் நாளை மாலை இங்கே வா...." என்று சொல்லிக் கதிரேசனுக்கு விடை கொடுத்து அனுப்பினான் பாண்டியன்.

அன்றிரவே அவனும் வேறு சில மாணவர்களும் பூதலிங்கத்தைச் சந்தித்த போது கதிரேசன் கூறியதுபோல் நடப்பதற்குச் சாத்தியம் உண்டு என்றே அவரும் கூறினார். மாணவர்கள் இது பற்றித் தாங்கள் என்ன செய்யலாம் என்று கூடிக் கூடிப் பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள். பாண்டியன் மறு நாள் இரவுக்குள் மதுரையில் வந்து சந்திப்பதாக

ஒரே தந்தியின் பிரதிகளை மணவாளனுக்கும் கண்ணுக்கினியாளுக்கும் அனுப்பினான். அன்றிரவு சக மாணவன் ஒருவனுடைய வீட்டில் அவனும் நண்பர்களும் கலந்து பேசினார்கள். மறு நாள் தெரிய வேண்டிய விவரங்கள் தெரிந்தபின் மேற்கொண்டு செயற்பட முடிவு செய்தார்கள். பாண்டியன் அன்றிரவு அந்த நண்பனின் வீட்டிலேயே தங்கினான்.

* * *


முதல் நாள் இரவிலிருந்தே பல்கலைக் கழக விருந்தினர் மாளிகையில் பல அறைகள் நிரம்பிவிட்டன. வெளியூர்களிலிருந்து வரவேண்டிய சிண்டிகேட் உறுப்பினர்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள். துணைவேந்தரும், சிண்டிகேட்டில் முக்கிய உறுப்பினரான ஓர் எஸ்டேட் அதிபரும் மற்ற உறுப்பினர்களை வசப்படுத்தத் தீவிரமாக முயன்று கொண்டிருந்தார்கள். அந்த எஸ்டேட் அதிபருக்குத் தம்முடைய தேயிலைத் தோட்டத்தை ஒட்டி இருந்த ஒரு முந்நூறு ஏக்கர் மலைப் பகுதி சர்க்காரிடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு ஜாரி செய்து தரப்பட இருந்ததாகவும், அது அவ்வாறு செய்து தரப்பட வேண்டுமானால் இந்த டாக்டர் பட்டத்தை அளிக்க அவர் முயல வேண்டும் என்று அமைச்சரே பேரம் பேசியதாகவும் தெரிந்தது. எவ்வளவுதான் காதும் காதும் வைத்தாற்போல் காரியங்கள் நடந்தாலும் அவை வெளியே பரவிக் கொண்டுதான் இருந்தன. இரகசியங்கள் வெளியே பரவுவதற்கு வேறு தனிக் காரணங்கள் வேண்டியதில்லை. அவை இரகசியங்களாயிருப்பதே போதுமானது என்பதுபோல் அவை வெளிப்பட்டுவிட்டன. ஆளும் கட்சிக்கு மிக மிக வேண்டிய அந்த எஸ்டேட் அதிபர் மக்களிடையே நல்ல பேர் இல்லாமல் வெறுக்கப்பட்டவர். பண பலத்தையும், செல்வாக்கையும் வைத்துத் தமக்கு நன்மை செய்யும் ஒரு மந்திரியை 'டாக்டர்' ஆக்கிவிட முயன்று கொண்டிருந்தார் அவர். பணமாகவும், பொருளாகவும், லஞ்சம் வாங்கி வாங்கி அலுத்துவிட்ட மந்திரிக்கு 'டாக்டர்' பட்டமே லஞ்சமாகக் கிடைக்கும் என்றதும் அதில் ஒரு நைப்பாசை ஏற்பட்டு வளர்ந்திருந்தது.

மறு நாள் காலை நல்ல மழையாக இருந்ததனால் பல்கலைக் கழக செனட் ஹாலில் பத்து மணிக்குக் கூடவேண்டிய 'சிண்டிகேட்' கூட்டம் சிறிது தாமதமாகப் பதினொரு மணிக்குக் கூடியது. துணைவேந்தர் உட்படப் பதினெட்டு உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். பதினெட்டுப் பேரில் பதினாறு பேர் துணைவேந்தருக்கும், எஸ்டேட் அதிபருக்கும் இசைந்துவிட்டார்கள். டாக்டர் ஹரிகோபால் என்ற பிரபல வைத்திய மேதை ஒருவரும், மிஸஸ் செரியன் என்ற பெண்மணி ஒருத்தியும் துணைவேந்தரையோ, எஸ்டேட் அதிபரையோ இலட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. மிகவும் சுதந்திரமாகவும், தன்மானம் உள்ளவர்களாகவும் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்கள் அவர்கள். துணைவேந்தருக்கு அந்த இருவரையும் பார்க்கும் போதே நடுக்கமாக இருந்தது. அவர்கள் தாம் எதிர்பார்க்கிறபடி இசைய மாட்டார்கள் என்பது அவருக்குப் புரிந்தது.

துணைப் பதிவாளர், கூட்டத்துக்கான அஜெண்டா டைப் செய்த பிரதிகளை ஒவ்வொருவர் முன்னும் வைத்தார். விஷயங்கள் எதுவும் வெளியே பரவி விடக் கூடாது என்பதற்காக 'மினிட்ஸ்'க்குக் குறிப்பு எடுக்கும் ஸ்டெனோ தவிர வேறு அலுவலக ஆட்கள் யாரும் அங்கே அனுமதிக்கப்படவில்லை. கூட்டத் தொடக்கத்தில் துணைவேந்தர் எழுந்து பேசப் போது, பல்கலைக் கழக வளர்ச்சிக்கு அப்போது பதவியிலுள்ள அரசு முந்திய அரசுகளைவிட என்னென்ன உதவியிருக்கிறது என்பதையும், பல்கலைக் கழகத்தில் பல புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் மற்றவற்றுக்கும் வணக்கத்துக்குரிய அந்த அமைச்சர் என்னென்ன உதவிகள் செய்துள்ளார் என்பது பற்றியும் பச்சையாகப் புளுகத் தொடங்கினார். 'அஜெண்டா'வில் முதலில் இருந்த விஷயமோ காலியாயிருந்த இரண்டு ரீடர் பதவிக்குத் தகுந்தவர்களை நியமிப்பது பற்றியது. அதைப் பற்றிக் குறிப்பிடவே மறந்து துணைவேந்தர் மந்திரியின் துதி பாடத் தொடங்கியதால் டாக்டர் ஹரிகோபால் ஆத்திரம் அடைந்தார்.

''மிஸ்டர் வி.சி.! ஆன் ஏ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஐ விஷ் டு ஸே, யூ ஆர் கோயிங் அவுட் ஆஃப் தி அஜெண்டா ஆன் தி டேபிள் ஹியர்'' — டாக்டர் ஹரிகோபால் இரைந்ததும் மற்ற உறுப்பினர்கள் நாலைந்து பேர் அவரை உறுத்துப் பார்த்தார்கள். ஹரிகோபால் அதற்கு அஞ்சவில்லை. மிஸஸ் செரியனும் அவரை ஆதரித்தாள். துணைவேந்தர் வழிக்கு வந்தார். ரீடர் நியமனம் பற்றிய விவரங்களை எடுத்து வாசித்தார். அதிலும் வழக்கம் போல் மழுப்பல்கள் இருந்தன.

செர்விஸ், தகுதி, திறமை எல்லாம் இருந்த இரண்டு பேர்களைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு அவை எல்லாவற்றிலும் குறைவான ஆனால் அரசாங்க மேலிடம் விரும்புகிற வேறு இருவரை



நியமிக்க வேண்டும் என்று துணைவேந்தர் கூறியபோது, ஹரிகோபால் மீண்டும் குறுக்கிட்டார். காரசாரமான விவாதம் எழுந்தது. எஸ்டேட் அதிபரும் சிண்டிகேட் உறுப்பினருமான ஆனந்தவேலு குறுக்கிட்டுத் தந்திரமாக ஹரிகோபாலை ஆதரிப்பது போல் கூறினார். இதில் ஹரிகோபாலை ஆதரித்தால் மந்திரிக்கு டாக்டர் பட்டம் வழங்கும் பிரச்னையில் ஹரிகோபால் தம்மை ஆதரிப்பார் என்று எண்ணியே அப்படிச் செய்திருந்தார் அவர். ரீடர் நியமனம் தகுதி உள்ளவர்களுக்குக் கிடைக்க வழி பிறந்தது. அடுத்தபடி தபால் மூலம் பட்டப்படிப்புக்கான 'கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ்' தொடங்குவது பற்றிய பிரச்னை விவாதிக்கப்பட்டது. ஒரு முடிவுக்கு வர இயலாததால் அந்த யோசனை பற்றி அடுத்த சிண்டிகேட் கூட்டத்தில் முடிவு எடுப்பது என்று ஒத்திப் போடப்பட்டது. மூன்றாவதாகப் புதிய கட்டிடங்கள் பற்றியும் வேறு சில முக்கிய நிர்வாக அம்சங்கள் பற்றியும் பேசப்பட்டது.

நான்காவதாகவும், இறுதியானதாகவும் அஜெண்டாவில் இருந்த 'கான்வகேஷனும் கௌரவப் பட்டங்களும்' என்ற அயிட்டத்தைப் பகல் உணவுக்குப் பின் பிற்பகல் கூட்டத்தில் பேசலாம் என்று அறிவித்தார் துணைவேந்தர். பிற்பகலில் நிறையச் சாதகமாக எடுத்துச் சொல்லி அந்தத் தீர்மானத்தை ஒருமித்து நிறைவேற்றிவிடலாம் என்பது அவரது எண்ணமாயிருந்தது. எல்லாரும் பகல் உணவுக்காகக் கலைந்து போகும்போது ''எல்லா வருஷத்தையும் விட இந்த வருஷம் கான்வகேஷன் தள்ளிப் போவதைப் பார்த்தால் ஏதோ விசேஷம் இருக்கும் போலிருக்கிறது'' என்று மிஸஸ் செரியன் உடன் வந்த மற்றோர் உறுப்பினரிடம் வாயளப்பாகப் பேசிப் பார்த்தாள். ''நீங்கள் எல்லாரும் ஒத்துழைத்தால் எல்லாம் விசேஷமாக முடிய வழி உண்டு'' என்று சிரித்துக் கொண்டே மிஸஸ் செரியனுக்கு மறுமொழி கூறினார் அந்த உறுப்பினர். மிஸஸ் செரியன் பிடிகொடுத்துப் பேசாமல் நழுவியதும் அந்த உறுப்பினர் விழித்துக் கொண்டார். மேலே பேசுவதையும் நிறுத்தி விட்டார்.

பகல் உணவுக்குப் பின் சிறிது ஓய்வு நேரம் விட்டு மாலை மூன்று மணிக்கு மீண்டும் சிண்டிகேட் கூடியது. தேநீருடன் கூட்டத்தைத் தொடங்கினார் துணைவேந்தர். டாக்டர் ஹரிகோபால், மிஸஸ் செரியன் இருவரைப் பற்றிய பயம் இருந்தாலும் துணைவேந்தர் மீண்டும் ஒரு நீண்ட புகழுரைச் சொற்பொழிவில் இறங்கினார்.

''எல்லா வருஷங்களையும் விட இந்த வருஷம் நம்முடைய பட்டமளிப்பு விழா மிகவும் தாமதமாவதில் ஒரு விசேஷம் இருக்கிறது. நம்முடைய பல்கலைக் கழகம் இலக்கியமேதையாக விளங்கும் அமைச்சர் கரியமாணிக்கம் அவர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும் என்பதை ஆனந்தவேலு முதலிய பதினைந்து சிண்டிகேட் உறுப்பினர்கள் ஆதரித்து யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சரே வந்து மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடத்த வேண்டும் என்றும் நாம் அவரை வேண்டப் போகிறோம்....'' உடனே ஹரிகோபால் குறுக்கிட்டார்:

''கல்லூரிப் பட்டமே பெறாத ஒருவர் பட்டமளிப்பு விழா 'கவுனை' அணிவதும் மாணவர்களுக்குப் பட்டங்களை அளிக்க அழைக்கப்படுவதும் எப்படி சாத்தியம்?''

''அதனால்தான் பட்டமளிப்பு விழாவில் முதலிலேயே நாம் அமைச்சருக்கு டி. லிட். பட்டம் வழங்கி அவரை மாணவர்களுக்குப் பட்டமளிக்கத் தகுந்தவர் ஆக்கிவிடப் போகிறோம்.''

''ஓகோ! 'கவுனு'க்காகவே ஒரு பட்டமா? பட்டமளிப்பு விழாவுக்காகப் பல மாணவர்கள் 'கவுன்' தைக்கிறபோது தைத்த 'கவுனு'க்காகவும் ஒரு பட்டத்தைக் கொடுக்கப் போகிறீர்களா?''

''மிஸ்டர் ஹரிகோபால்!... பீ.... ஸீரியஸ்....'' என்று துணைவேந்தர் ஏதோ உரத்த குரலில் தொடங்கவே டாக்டர் ஹரிகோபாலுக்கும் கோபம் வந்து விட்டது.

''தி ஹானரரி டிகிரீஸ் வீ கன்ஃபெர் ஷுட் பீ ஸ்டிரிக்ட்லி பேஸ்டு ஆன் மெரிட். அதர் கன்ஸிடரேஷன்ஸ் ஷுட் நாட் கம் இன்.''

'' நீங்கள் அமைச்சரை எதிர்க்கிறீர்கள் போலிருக்கிறது, மிஸ்டர் ஹரிகோபால்!''

''நோ... ஐயாம் நாட் எகெய்ன்ஸ்ட் எனி ஒன். பட் ஐயாம் கன்ஸர்ன்ட் ஒன்லி வித் தி டிக்னிட்டி ஆஃப் திஸ் யூனிவர்ஸிடி... கமான் டெல் மீ ஒன் குட் ரீஸன்... ஒரு 'டி.லிட்' தரவேண்டிய அளவு அவர் என்ன சாதித்திருக்கிறார்?''

''இருபது ஆண்டுகளாக மேடைகளில் பேசி வருகிறார்.''

''எனக்குத் தெரிந்த பலர் நாற்பது ஆண்டுகளாக மேடைகளில் பேசி வருகிறார்கள்.''

''ஓடிப்போன வனிதை, தேடி வந்த செல்வி, பன்னீர்க் குளத்தில் பருவப் பாவை போன்ற கதைகளை எழுதித்

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன் காப்பியின் சுவையை அனுபவிப்பீர் !



காப்பியின் சுவை-க்குச் சுவையூட்டுபவை ருசிமிக்க புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுகள்- ஃபாயில் ஸீல்டு பேக்குகளில்.

க்ளுகோ, மொனாகோ மற்றும் சுவைமிக்க இதர பிஸ்கெட்டுகளின் தயாரிப்பாளர்களான பார்லே உங்களுக்கென பிரத்யேகமாக வழங்குகின்றனர்—

பார்லே மாரி பிஸ்கெட்டுகள்


everest/10851/PP/C tam

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

10-ம் தேதி திருப்பத்தூர் (N. A.): சங்கர் கபே பகல் 1 மணி முதல் 2-30 மணி வரை.

10-ம் தேதி ஆம்பூர் : N. A. B. லாட்ஜ், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை.

11ம் தேதி வேலூர் (N.A.): அஜீஸ் மேன்ஷன்ஸ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

11-ம் தேதி குடியாத்தம் : அலங்கார் லாட்ஜ் பகல் 1 மணி முதல் 3 மணி வரை.

12-ம் தேதி சென்னை : உட்லண்ட்ஸ்-ஹோட்டல், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை.

13-ம் தேதி கிருஷ்ணகிரி : ஸ்ரீ ராம் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

13-ம் தேதி தர்மபுரி: சீனிவாசா லாட்ஜ் காலை 11 மணி முதல் 12 மணி வரை.

13-ம் தேதி சேலம்: லக்ஷ்மி ராஜபவன் லாட்ஜில், பகல் 2 முதல் 5 மணி வரை.

15-ம் தேதி ஈரோடு: நவபவனம் லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

15-ம் தேதி திருப்பூர் : ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

15-ம் தேதி பொள்ளாச்சி: ஹோட்டல் தோஞ்சலி, மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை.

16-ம் தேதி கோவை : விஜயா லாட்ஜ், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

17-ம் தேதி சென்னை : ஹோட்டல் ஸ்ரீலேகா மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

18-ம் தேதி சென்னை : ஹோட்டல் ஸ்ரீலேகா காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை.

19-ம் தேதி பம்பாய்: சாரதா பவன் (மாதுங்கா), காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்



OBM : 2384 TH

டோஷிபா ஆனந்த் பவர் கிங் பேட்டரி ஒன்றே முழுச்சக்திக்கு உத்தரவாதம் அளிப்பது.

காரணம் மின் சக்தியைக் காக்கும் மேலுறையோடு கூடியது இது ஒன்றே.

தமிழ் எழுத்துலகுக்குத் தளராத தொண்டு புரிந்திருக்கிறார்...''

''அவற்றைவிட அருமையான தமிழ்ப் படைப்பிலக்கியங்களைப் படைத்துவிட்டு வறுமையில் வாடும் ஒரு டஜன் உயர்ந்த இலக்கிய கர்த்தாக்களாவது தமிழில் இருப்பார்கள்! ஆனால் பாவம், அவர்களில் யாரும் அமைச்சர்களாக முடியவில்லை.''

''இதைத் தடுப்பதன் மூலம் இந்த யுனிவர்ஸிடிக்கு ஏற்பட இருக்கும் பல நன்மைகளையே நீங்கள் தடுக்கிறீர்கள்'' என்றார் ஆனந்தவேலு. ஹரிகோபாவின் கோபம் அதிகமாயிற்றே ஒழியத் தணியவில்லை. அவர் மேலும் மேலும் ஆத்திரமடைந்து கத்தினார்.

''ஐ திங்க் வீ டோண்ட் கன்ஃபெர் ஸச் டிகிரீஸ் ஃபார் இன்டலக்சுவல் பேங்க்ரப்ட்ஸி. அவர் ஹையஸ்ட் ஹானர்ஸ் ஷுட் நாட் கோ சீப்...''

தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது.

''ஐ ஃபுல்லி எண்டார்ஸ் தி வியூ ஆஃப் டாக்டர் ஹரிகோபால்'' என்று மிஸஸ் செரியனும் உறுதியாகக் கூறினாள். தீர்மானம் ஒருமனமாக இல்லாமல் போனாலும் பெரும்பான்மை ஆதரவு பெற்றிருந்ததால் அந்தத் தீர்மானத்தை சான்ஸலருக்கோ இணைவேந்தருக்கோ அனுப்பி, அவர் சம்மதத்தோடு பட்டமளிக்கலாம் என்று பல்கலைக் கழக விதிகளில் ஒரு மூலையில் இருந்த விதிவிலக்கைப் படித்தார் துணைவேந்தர். டாக்டர் ஹரிகோபால், மிஸிஸ் செரியன் இருவரைத் தவிர மற்றவர்களின் ஆதரவோடு அமைச்சர் கரியமாணிக்கத்துக்குக் கௌரவப்பட்டம் வழங்க முடிவாயிற்று. டாக்டர் ஹரிகோபால் பேசிய சில கடுமையான வாக்கியங்கள் 'மினிட்ஸில்' இடம் பெறலாமா கூடாதா என்று ஒரு சர்ச்சை எழுந்தது. எது விடப்பட்டாலும் தாங்கள் இருவரும் அந்தக் கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கப்படுவதை எதிர்த்தது கண்டிப்பாக 'மினிட்ஸில்' இடம் பெற வேண்டும் என்று டாக்டர் ஹரிகோபாலும், மிஸஸ் செரியனும் வற்புறுத்தி விட்டு வெளியேறினார்கள்.

எஸ்டேட் அதிபர் ஆனந்தவேலு உடனே அமைச்சரை டெலிபோனில் கூப்பிட்டு அந்த நற்செய்தியைத் தெரிவிக்க விரைந்தார். இந்த நற்செய்தியைச் சொல்லித் தமக்கு வேண்டிய காரியத்தை அமைச்சரிடம் முடித்துக் கொள்ள முந்தியது அவர் ஆவல். துணைவேந்தரோ இன்னும் ஒரு மூன்றாண்டோ, ஐந்தாண்டோ பதவி உறுதிக்கு வழி பிறந்தது என்ற நம்பிக்கையை அடைந்திருந்தார். செய்தி மெல்ல மெல்லப் பல்கலைக் கழக வட்டாரத்தில் பரவத் தொடங்கியது.

* * *

சிண்டிகேட் கூட்டத்தில் 'மினிட்ஸுக்'காகக் குறிப்பெடுக்கிற கருக்கெழுத்தாளர் கதிரேசனின் உறவினர். அவர் பல்கலைக்கழக நிர்வாக சூழல்களில் மனம் வெறுத்துப் போனவர். மாலை ஐந்து மணி சுமாருக்கு அந்தச் கருக்கெழுத்தாளரைச் சந்தித்து எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்ட பின் பாண்டியனைக் காண்பதற்காகக் கதிரேசன் அண்ணாச்சி கடைக்கு விரைந்தான். பாண்டியன் அப்போது அண்ணாச்சி கடையில் இல்லை. ஆனால் வேறு சில மாணவர்கள் இருந்தார்கள். பாண்டியன் போயிருக்கும் நண்பன் வீட்டை அண்ணாச்சியிடம் விசாரித்துக் கொண்டு கடையிலிருந்த மற்ற மாணவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு அங்கே போனான் கதிரேசன். நல்ல வேளையாகத் தேடிச் சென்ற இடத்தில் பாண்டியன் இருந்தான்.



சத்திய வெள்ளம்

இரகசியங்கள் வெளியே பரவுவதற்கு வேறு தனியான காரணங்கள் எவையும் வேண்டியதில்லை. அவை இரகசியங்களாக இருப்பதே போதுமானது.

''நேற்று ஏதோ பந்தயம் போட்டாயே, பாண்டியன்; முதலில் அந்தப் பந்தயப் பணத்தை எடு. அப்புறம் மற்ற விவரம் எல்லாம் சொல்கிறேன்'' என்று தொடங்கினான் கதிரேசன்.

''பந்தயம் எங்கே ஓடிப்போகிறது? விஷயத்தை முதலில் சொல்லு'' என்றான் பாண்டியன். கதிரேசன் சிண்டிகேட் கூட்ட முடிவை விவரித்தான். பாண்டியனும் மற்ற மாணவர்களும் அந்த விவரங்களைக் கேட்டுக் கொதிப்படைந்தனர். பாண்டியன் உடனே சொன்னான்:

''ஆண்டுக் கணக்கில் படித்துப் பட்டம் பெற்ற பலர் வேலை கிடைக்கா

மனும், வாழ வழியின்றியும் தெருவில் திண்டாடுகிறார்கள். படித்தவர்களின் வாழ்வுக்கு வழி சொல்ல முடியாத பல்கலைக் கழகம் சொகுசுக்காகச் சிலருக்குப் பட்டம் வழங்கிக் கொண்டிருக்கிறது. வேடிக்கைதான். எப்படியாவது இதை நாம் எதிர்த்தாக வேண்டும்.''

''எப்படியாவது அல்ல! மிகவும் கடுமையாகவே எதிர்க்க வேண்டும். தகுதி உள்ள ஒருவருக்குத் தகுந்த காரணங்களோடு இந்த யூனிவர்ஸிடி கௌரவ டாக்டர் பட்டம் தந்தால் அதை நாம் எதிர்க்கப் போவதில்லை. ஆனால் யாருக்கோ எந்தக் காரியமோ ஆகவேண்டும் என்பதற்காக இந்த டாக்டர் பட்டம் விலையாக்கப்படுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான் கதிரேசன்.

''எப்படியும் நான் இன்று மதுரைக்குப் புறப்பட விருக்கிறேன். மணவாளனையும் கலந்து பேசி இதற்கு ஏதாவது மறுப்புத் தெரிவிக்க ஏற்பாடு செய்யலாம்'' என்று பாண்டியன் கூறியதும் ''நாலைந்து பேராக இப்போதே ஒரு வாடகைக் காரில் மதுரைக்குப் புறப்படலாம்'' என்றான் கதிரேசன்.

இரவு நிலக் கோட்டையில் தங்கி, பிச்சைமுத்து சாரின் உபசரிப்பை ஏற்று, அவரிடமிருந்து திட்டவட்டமான சில யோசனைகளையும் பெற்றுக் கொண்டு மறுநாள் காலை ஐந்து மணிக்கு அவர்கள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

விடியற்காலையில் ஆறு ஆறரை மணிக்கே அவர்கள் மதுரையை அடைந்து விட்டார்கள். உடனே வாடகைக் காருக்குக் கணக்குத் தீர்த்துப் பணம் கொடுத்துத் திருப்பி அனுப்பினான் கதிரேசன். அவர்கள் ஐவரும் மணவாளன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது மணவாளன் காலை தினசரியைப் படித்துக் கொண்டிருந்தார். மாணவர்களைப் பார்த்ததுமே, ''வாருங்கள்! இப்போதுதான் அமைச்சர் கரியமாணிக்கத்துக்குக் கௌரவப் பட்டம் கொடுக்க யூனிவர்ஸிடி சிண்டிகேட் முடிவு செய்திருக்கும் செய்தியைப் படித்துக்கொண்டிருந்தேன். உடனே நீங்களும் வந்து விட்டீர்கள்.... பெறுகிறவருக்கு இது கௌரவமா யிருக்கலாம். ஆனால் டாக்டர் பட்டத்துக்கு இது பெரிய அகௌரவம்...'' என்று குமுறலோடு வரவேற்றார் மணவாளன். எல்லாருக்கும் காப்பி வரவழைத்து அருந்தச் செய்த பின் நகரின் வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர் தலைவர்களையும் தம் வீட்டுக்கு வரவழைத்தார் அவர். பிரச்னையை எல்லோரும் விவாதித்தார்கள். நீராடி உடை மாற்றிக் கொண்ட பின் பகலுணவுக்கு அவர்கள் வெளியே புறப்பட்டபோது மணவாளன் தடுத்து வீட்டிலேயே சாப்பிடச் செய்தார். பிற்பகலிலும் அவர்கள் தொடர்ந்து விவாதித்தார்கள்.

மாலை ஐந்து மணிக்கு மணவாளனையும் தன்னோடு கண்ணுக்கினியாளின் வீட்டுக்கு அழைத்தான். தன்னைச் சுற்றி நிறைய மாணவர்கள் இருந்ததனால், ''நீ மட்டும் போய்விட்டு வந்துவிடு, பாண்டியன்! நான் இவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன்'' என்றார் மணவாளன். மணவாளனின் வீடு இருந்த மேலச் சந்தைப் பேட்டைத் தெருவிலிருந்து நடந்தே சித்திரக்காரத் தெருவுக்குப் போய்ச் சேர்ந்தான் பாண்டியன். நாயுடுவின் வீட்டைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருந்தது. அவன் அந்த வீட்டில் நுழைந்து கூடத்தில் அடி எடுத்து வைத்தபோது பல்கலைக் கழகத் தோற்றத்திலிருந்து மாறிய புது அழகோடு கொலுப் பொம்மை வரிசைகளுக்கு முன் அமர்ந்திருந்தாள் கண்ணுக்கினியாள். கருநாகமாய்ச் சரியும் கூந்தற் பின்னலும் அதன் மேல் சரிந்த மல்லிகைக் கொத்துமாக அவள் முதுகுப்புறமும் இடையின் பொன் வண்ணமும் தெரிந்து அவனை முதற் பார்வையிலேயே மயக்கின. கொலுவின் கீழே இருந்த சிறிய செயற்கைக் குளத்தில் சின்னஞ் சிறு பிளாஸ்டிக் கப்பலை மிதக்க விட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

''கப்பல் கவிழ்ந்துவிடப் போகிறது.. கவனம்...'' — குரலைக் கேட்டுத் திரும்பியவள் அவனைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்.

''வாருங்கள்! புயல் உள்ளே வந்தால் கப்பல் கவிழாமல் பின்னென்ன பிழைக்கவா செய்யும்? நேற்றே வருவதாகச் சொல்லி யிருந்தீர்களே? நாலைந்து நாட்கள் கழிந்து விட்டது என்றாலும் இங்கே வந்ததும் கொலுவை அவசரம் அவசரமாக வைத்து விட்டேன். எப்படி இருக்கிறது கொலு?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

''ம்ம்... சொல்லுங்களேன்''—இந்த 'ம்ம்' ஒரு சங்கீதமாகவே பாண்டியனின் காதில் ஒலித்தது.

''இந்தக் கொலுவிலேயே மிகவும் அழகான பொம்மை—பெரிய பொம்மை, உயிருள்ள பொம்மை — கொலுவுக்கு வெளியே தரையில் நின்று கொண்டிருக்கிறது.''

அவள் முகம் சிவந்தது. அவனை அப்போதுதான் முதல் முறை சந்திப்பது போல் மிகவும் புதிதாக ஓரக் கண்களால் பார்க்கத் தொடங்கினாள் அவள்.

(தொடரும்)

தீபம்

ஆசிரியர் நா.பார்த்தசாரதி

கலைசிறந்த தமிழ் இலக்கிய மாத இதழ்

தீபாவளி

1972

நவம்பர்

மலரிலிருந்து

தனிப்பிரதி

விலை 75 காசு

ஆண்டுசந்தா ரூ.10

அரை ஆண்டு

சந்தா ரூ. 5

* ஜெயகாந்தன்
* அகிலன்
* கண்ணதாசன்
* வல்லிக்கண்ணன்
* சி. சு. செல்லப்பா

முதலிய எழுத்தாளர்கள்


தொடர்ந்து எழுதுகிறார்கள்

ஏஜன்ஸி சந்தா விவரங்களுக்கு

தீபம் காரியாலயம்

தபால் பெட்டி எண் 2766

மவுண்டு ரோடு - சென்னை - 600002



சென்னை எஸ்லோ மலரும், சென்னை, குருசாமி நாயுடு & கோ.வின் (செங்கல் சூளை) மானேஜருமான **ஸ்ரீ வி. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் சஷ்டி அப்த பூர்த்தி விழா** 15-10-72 அன்று தி. நகர் ஸ்ரீ கிருஷ்ண விஹார் கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் சிறந்த முருக பக்தர். அன்று ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. கோமல் ஸ்ரீ சேஷாத்ரி அய்யங்காரும், பால வால்மீகி உடையாளூர் ஸ்ரீ ராமமூர்த்தி சர்மாவும் பிரவசனங்கள் செய்தனர். மாலை திருப்புகழ் பஜனையும் சிறப்பாக நடைபெற்றது.

உன் மனம்

மணி ஐந்து அடித்து விட்டது. அலுவலகத்துக் கூட்டம் கலைந்து விட்டது. வெறுமையான ஹாலே, பின்னுக்குத் தள்ளிய நாற்காலிகளே, 'டைப்' செய்து அடுக்கிய காகிதங்களைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் நீரஜா. பிற்பகல் மணியிடமிருந்து 'போன்' வந்தபோதே, அதை எடுக்க, பேச, பதில் சொல்ல, சுற்றுமுற்றும் பார்வை; பரபரப்பில் விரல்களின் நடுக்கம்; மற்றவர்கள் கேட்கிறார்களோ என்கிற பயத்தில் மெல்லப் பேசிய பேச்சு; இரட்டை அர்த்தம் தொனிக்கும் கொஞ்சல் பேச்சு மணியிடமிருந்து கேட்டபோது நெஞ்சுக் குழியில் வியர்வை.

நாலரை மணிக்கே வந்து அழைத்துப்போவதாகச் சொல்லியிருந்தான் மணி. ஒரு மணி நேரம் முன்னே செல்ல அனுமதி வாங்கிக்கொண்டும் எழுந்து போகமுடியாமல், போகாமல் இருப்பதற்கு மற்றவர்களுக்குப் பதிலும் சொல்ல முடியாமல், தவித்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தாள் நீரு. கையிலிருந்த புத்தக வரிகளில் மனம் பதியவில்லை.

வேலை செய்யாமல் உட்கார்ந்திருந்ததுதான் மிச்சம். இப்போது மணி ஐந்தரை. அவன் வந்தால் பேசக் கூடாது. பேசினால் பதில் சொல்லக் கூடாது. ''நேரே அறைக்குப் போய் விடுகிறேன்'' என்று முரண்ட வேண்டும். அவன் கெஞ்சினாலும் விட்டுக் கொடுக்கக் கூடாது. ஆனால் அவன் அப்படிக் கேட்க மாட்டானே என்று மனம் ஏங்கிற்று. மணியின் சுபாவம் இல்லை அது.

மணி ஐந்தரை.

''என்ன நீரு? தூங்கி விட்டாயா என்ன?''

குரல் கேட்டுத் திரும்பினாள். அவளையறியாமல் புன்முறுவல் கண்டது. இந்தப் புன்னகை அவனுக்குத்தான். வேறு யாருக்கும் அதைக் காணவோ அதன் குளுமையில் நனைந்து புல்லரிக்கவோ உரிமை இல்லை. அத்தனை நேர ஏமாற்றத்தையும் ஒதுக்கி விட்டு நிமிர்ந்தாள்.

டிராயரை உள்ளே தள்ளிப் பூட்டினாள். எழுந்திருக்கத் தயாரானாள். அவன் அசையாமல் நின்று கொண்டிருந்தான். மாலை வெய்யில் ஜன்னலின் கம்பிகள் வழியே அவன் மேல் கட்டமிட்டதுபோல் விழுந்தது. வெள்ளை வெளேரென்ற உடுப்பு. அமைப்பாக அவனுக்கென்று அது பொருந்திய விதம். அவள் ஆசையைக் கவ்வி இழுத்தது அது. ஒரு கிரிக்கெட் மைதானத்தில், டென்னிஸ் அரங்கத்தில் அவன் அந்த உடையில் ஆடுவதாகக் கற்பனை செய்து கொண்டாள். அந்த உருவத்துக்குப் பொருத்தமான கற்பனைதான்.

ஆனாலும் வெறும் கற்பனைதான். மணி அப்படி எந்தப் பொழுதுபோக்கிலும் ஈடுபட மாட்டான். அவனிடம் பழகுவதிலும் பேசுவதிலும் கூடப் பொறுமையைச் சோதிக்கும் ஒரு நிதானம். அளவான, அர்த்தம் மறைந்த சொற்களைப் பேசியே ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் இன்பம்தான். மனத்தைத் திறந்து கொட்டும் துடிப்பும் வேகமும் இல்லை அவனிடம்.

மணி அவள் அருகே உட்கார்ந்து கொண்டான். அன்று போட்ட புதிய கட்டட பிளான் ஒன்றைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். அவளைப் பிரமிக்க வைக்கும் ஆர்வத்தில் மினு மினுக்கும் கண்கள். மேஜை காகிதம் முழுவதும் வட்டமாகவும் கட்டமாகவும் போட்ட கிறுக்கல்கள். அவள் அவனைத் தடுக்கவில்லை. கடைசியாக அவன் எழுந்தபோது மணி ஆறு. அவளுக்குத் தெரியும், அவன் என்ன சொல்லப் போகிறான் என்று.

''நாழிகை ஆகிவிட்டது நீரு. நான் முக்கியமாக இன்னொரு வேலைக்குப் போக வேண்டும். எக்ஸ்கியூஸ் மி. கிளம்பு. உன்னை பஸ் ஸ்டாண்டில் விட்டு விட்டு நான் புறப்படுகிறேன்.'' அவள் முகம் சட்டென்று விழுந்தது. அவன் கவனிக்கக்கூட இல்லை.

மணி கிளம்பி விட்டான். அவள் செருப்பை மாட்டிக் கொண்டு குடையை எடுத்துக்



கொண்டாள். நான்கு மணியிலிருந்து மனத்தில் பூத்திருந்த எதிர்பார்ப்பு, சட்டென்று வெய்யிலில் பூத்த பூவாய் வாடிவிட்டது. வழக்கம்தான் அது அவளுக்கு. படி இறங்கி அவன் பக்கத்தில் நடை பாதையில் நடந்தாள்; மேலே உரசியும் ஒரு கவாதினைத்துடன்.


அப்படி நடப்பதே அவளுக்குக் கொஞ்சம் பெருமையாக இருந்தது. எத்தனை கம்பீரமான உருவம் அவனுக்கு! அந்தச் சிரிப்பிலும் பார்வையிலும்தான் எத்தனை கனிவு? ஆனால் அவள் மனத்தை அவன் ஏன் புரிந்துகொள்ளவில்லை? புரிந்துகொண்டாலும் பழகுதலில் ஏன் அவள் எதிர்பார்த்து ஏங்கும் நயம் இல்லை?

மெதுவில் நகர்ந்து வந்து பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். மணியின் உருவம் பார்வையிலிருந்து மறைந்து விட்டது. மடியின்மீது கிடந்த கைப் பையைப் பார்த்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்தாள். வெளிப்படையாகச் சொல்லி ஆற்றிக் கொள்வதில் ஆறுதல் உண்டு. 'இப்படி வெளிக் காண்பிக்காமலே உள்ளுக்குள் படும் வேதனையைத்தான் சகிக்க முடியவில்லை. அதை யாரிடம் உரிமையோடு பகிர்ந்து கொள்வது?

ஹாஸ்டல் அறைக்குள் நுழைந்தாள். அறையில் யாரும் இல்லாமல் காலியாக இருந்தால் தேவலை. படுக்கையில் படுத்துக் கொண்டு கொஞ்ச நேரம் மனத்தை விட்டுக் கண்ணீர் பெருக்கலாம். ஆனால் அதற்கு வழி இல்லை. அறைக் கதவு பாதி திறந்திருந்தது. உள்ளே மீனு உட்கார்ந்து இருந்தாள். அவள் காலடிச் சத்தம் கேட்டதுமே, மீனுவின் பார்வை துள்ளிற்று.

புரியவில்லை!

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



''என்ன நீரு? இன்றைக்கு எங்கேயோ போவதாகச் சொன்னாயே?''

''போகவில்லை. கொஞ்சம் தலைவலி. நேரே வந்து விட்டேன்.''

குடையை மேஜையின்மீது வைத்து விட்டு, செருப்பைக் கதவோரம் உதறிவிட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். மீனுவின் சிரிப்பு அவளைக் கேலியாகக் குத்திற்று.

''தெரியும். வழக்கம்போல் மணி உன்னை ஏமாற்றி விட்டார்.''

நீரு தலையைக் குனிந்து கொண்டாள். நெஞ்சுள் ஏதோ உருக்கமாக இழைந்தது. கண்ணில் ஈரத்துடன் மீனுவை நிமிர்ந்து பார்க்கத் துணிவு இல்லை.

மீனு பேச ஆரம்பித்தாள். அவளுடைய வேலையைப் பற்றி. தெரியும். பேச்சை மாற்றுவதற்காக, அவள் மனத்தைத் திருப்புவதற்காக மீனு பேசுகிறாள் அப்படி. ஆனால் தெரிந்தும் அந்த மனத் திருப்பம் ஓர் இதமாக இருந்தது. மீனு பெண்களுக்கு அழகு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் வேலையாக இருக்கிறாள். இரண்டு ஆண்டுகளாக அவர்கள் ஒரே அறையில் இருக்கிறார்கள். நீருவுடன் ஒட்டிப் பழகுவாள். அடிக்கடி அவள் கொண்டு வந்து தரும் சாதனங்களின் மென்மையும் மணமும் போல, அவளுடைய பழக்கத்திலும் ஒரு தனியான இன்பம் இருக்கும். சில சமயம் பொழுது இருக்கும்போது, நீருவைக் கட்டிலில் உட்காரவைத்து ஆசையாய் விதம் விதமாகக் கூந்தலைப் பின்னுவாள். மணிக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு மீனுவுக்குத் தெரியும். சொல்லப் போனால் ஓரளவு நீருவின் ஏக்கமும் கூடத் தெரியும்.

ஒரு கிராம்பைச் சுவைத்துக் கொண்டு ஏதோ ஒரு மெட்டை மெல்ல மெல்ல முனகியபடி அவளருகே வந்து தோளைத் தொட்டாள் மீனு. நீரு தலைநிமிரவில்லை.

''வழக்கம்போலத்தானா நீரு? பரவாயில்லை. எழுந்திரு. முகத்தைக் கழுவிக்கொள். நாம் இருவருமாக எங்கேயாவது போய்விட்டு வருவோம்.''

ஒரு பெருமூச்சுடன் நீரு எழுந்திருந்தாள். அறையை ஒட்டி இருந்த குளியல் அறைக்கு, சோப்பையும், துண்டையும் தேடி எடுத்துக் கொண்டு போனாள். கண்களை அகல விரித்து அவளைப் பார்த்தபடி நின்றாள் மீனு. பெண்ணுக்குப் பெண்ணே ஆசைப்படும் அழகு. பூத்துக் குலுங்கும் பவழமல்லிச் செடி நடந்து போவதைப் போலிருந்தது. நல்ல உயரம். உருண்டு திரண்ட தோள்கள். கழுத்திலிருந்து வழிந்த தோளின் செழுமையில், தலைப்பு நழுவி விழும்போலத் தோன்றியது. பார்வையைக் கவ்வி இழுக்கும் பின்னழகு. இவளையா உதாசீனம் செய்கிறான் மணி?

ஒரு பெருமூச்சுடன் நீரு எழுந்திருந்தாள். பளிச்சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு உடையை மாற்றிக் கொண்டு இருவருமாக வெளியே கிளம்பினார்கள். மீனுவையே பார்த்துக்கொண்டு வந்தாள் நீரு. மிடுக்கு நடை, பாகைக் கொடியின் பசுமை. வட்டக் கண்கள். அருகு இமைக் கூட்டம். லட்சியம் செய்யாத நிதானம். வளையல்களைச் சிணுங்கிக்கொண்டாள். பெண்ணானாலும் மீனுவின் துணிச்சலே தனிதான்.

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது நீரு. அவரிடம் போய்க் காத்துக் கொண்டு நின்றது உனக்குச் சலித்துப் போய்விட்டது. அவ்வளவுதானே?''

''ஆமாம்'' என்பதுபோல் நிமிர்ந்து பார்த்தாள் நீரஜா.

''நான் ஒரு திட்டம் போட்டிருக்கிறேன். கவனமாகக் கேட்டுக் கொள். நீ இனிமேல் அவருக்காகக் காத்திருக்கக் கூடாது. கெஞ்சவும் கூடாது.''

''பின்னே?''

''அவர் கேட்பது போல் தோன்றினாலும் நீ முந்திக்கொள். 'நான் இன்றைக்கு மீனுவுடன் வருவதாகச் சொல்லியிருக்கிறேன். சினிமாவுக்குப் போகிறேன். பீச்சுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிடு. நானும் சேகரும் உன்னைக் கொஞ்ச நாட்களுக்குப் போகுமிடத்துக்கெல்லாம் அழைத்துக் கொண்டு போகிறோம்.''

''ஆனால்—''

''ஒரு ஆனாலும் இல்லை. உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறேன்? நாலு இடங்களுக்குப் போக வேண்டும்; பழக வேண்டும்; பொழுதுபோக்குகள் வேண்டும். நீ எதையும் கேட்டுக் கொள்வதில்லை. அப்புறம் இப்படிச் சிணுங்குவது....''

''ஆமாம், மீனு. நீ சொன்னபடி செய்து பார்க்கலாம்.'' கோபம் வரவில்லை அவள் சொன்னபோது. சிரிப்புத்தான் பொத்துக் கொண்டு வந்தது.

மறுநாள்.

மணி அவளை 'போனி'ல் அழைத்தபோது இல்லையென்று சொல்லிவிடும்படி கூறிவிட்டாள். ஆபரேட்டர் மார்க்கரெட்டுக்கு ஓர் ஆச்சரியம். கூச்சமும் துணிவுமாக, சிரிப்பும் மருட்சியுமாகப் பத்து நிமிடங்கள் அருவி கொட்டுவது போல் பேசும் நீருவா? அவளா இல்லையென்று சொல்லச் சொல்லுகிறாள்? இது என்ன பிணக்கு?

மணி ஐந்து. நீரு கிளம்பிக் கொண்டிருந்தாள். மணி வந்து சேர்ந்தான். கையில் ஒரு பெரிய 'பைல்'. அவள் என்னவென்று கேட்கவில்லை. அவனே பிரித்து வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

''நேற்று சொல்லிவிட்டுப் போனேன் இல்லையா? அந்த வேலை என்ன ஆயிற்று என்று கேட்கவில்லையே? ஒரு நவீன பங்களாவின் 'பிளான்' தயார் செய்ய வேண்டியிருந்தது. உனக்குப் பார்க்க ஆவலாக இருக்கும்.''

டைப்ரைட்டரை ஒதுக்கிவிட்டு, மேஜையின் மீது படத்தைப் பிரித்தான் மணி. மேஜை மீது அவளைப் பார்த்தபடி ஏறி உட்கார்ந்து கொண்டான். ஒரு பென்சிலை எடுத்துக் கொண்டு அவளுடைய குறிப்பு எடுக்கும் நோட்டில் எழுதி, படம் போட்டு, விளக்கம் கொடுத்தான். அவள் கண்கள் நிலைத்தன. கருத்தோட்டம் நின்றுவிட்டது. திட்டத்தைக் கேட்கும் ஆவல் இழை அறுந்துவிட்டது. அவன் பேச்சை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான்

''யூ ஆர் லௌவ்லி நீரு! இந்தப் புடவை உனக்கு எடுப்பாக இருக்கிறது.''

அவள் அசந்து போகவில்லை. பார்வை குனியவும் இல்லை. தைரியத்தை நழுவாமல்

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

Bensons-2141 TAM



மயில்ரங்கம் ஸ்ரீ வி. அம்ரவானேஸ்வரன் அவர்கள் குமாரர் செஞ்சிவி எம். ஏ. வெங்கட்ராமனுக்கும், ஸ்ரீ வி. எஸ். ராமன் அவர்கள் குமாரத்தி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திருமணம் சமீபத்தில் வாளாடியில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



தலைவலி • :ப்ளூ • பல்வலி
• உடல்வலி முதலியவற்றை
உடனடியாகக் குணப்படுத்த
ஸலோ:பென்
வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.

ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!



FDSAS-1808 TM

சன் என்ஜினீரிங் கம்பெனியின் மின்சார என்ஜினீயரான திரு விசுவநாதனின் புதல்வியும், நாட்டிய கலைமணி எஸ். கே. காமேஸ்வர னின் சிஷ்யையுமான செல்வி சாந்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் ராஜா அண்ணாமலை மன்றத்தில் திரு எம். ஜி. ஆர். தலைமையில் அண்மை யில் நடைபெற்றது. சாந்தியின் நிகழ்ச்சி அரங்கேற்றம்தான் என்றாலும் இசைக்கலையின் நிருத்த, நிருத்திய, அபிநய அம்சங்களில் எல்லாம் நல்ல தேர்ச்சி பெற்று, எந்தக்குறையுமற முழுமை பெற்ற நடனமணியாகவே அவள் அன்று விளங்கி எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றாள்.



ஐ. நா. அபிவிருத்தித் திட்டத் தில் உயர்பணியாற்றும் திரு கப்ப ராயனின் புதல்வி சுபாகா தனது நாட்டியக் கலைத்திறனால் புது தில்லியில் பிரபலமடைந்து வரு கிறாள். அரங்கத்தில் மட்டுமின்றி டெலிவிஷனிலும் ஸ்ரீமதி லலிதா சாஸ்திரியின் சிஷ்யை யான சுபாகாவின் நடன நிகழ்ச் சிகள் பல இடம் பெற்றுள்ளன. அண்மையில் ஜஸ்டிஸ் ரங்கராஜன் தலைமையில் ஸப்ரு ஹவுஸில் நடந்த இவளது நடன நிகழ்ச்சி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றது.



பிடித்துக் கொண்டாள். மணி சிரித்தபடி சொன்னான்.

"நாளைக்கு லைப்ரெரிக்குப் போகிறேன். சில தகவல்கள் சேகரிக்க வேண்டும். உனக்கு விடுமுறையா நாளைக்கு?"

ஒரு விநாடி கரைந்தது. "ஓ! நானும் வருகிறேன். நீங்கள் பேசாவிட்டாலும் பரவாயில்லே. பக்கத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது போதும்" என்று வழக்கம்போலச் சொல்லி விருப்பாள். ஆனால் சட்டென்று மீனுவை ஞாபகப்படுத்திக் கொண்டு, "எனக்கு லீவுதான். ஆனால் மீனுவும் நானும் ஒரு 'பார்ட்டி'யுடன் மகாபலிபுரம் போகிறோம். காலையில் ஏழு மணிக்கே கிளம்புகிறோம். உங்களிடம் வந்ததுமே சொல்ல வேண்டும் என்றிருந்தேன்" என்றாள்.

அவள் பேச்சில் இருந்த புதிய தெம்பும், கண்ணில் மின்னிய ஆவலும் அவனுக்குப் புரியத்தான் இல்லை. அந்தப் பிரமிப்பு மாறுமலே அவளோடு எழுந்து வெளியே நடந்தான்.

மறுநாள் மகாபலிபுரம் போனதென்னவோ உண்மைதான். கல்லூரி மாணவர்களும் பெண்களுமாக ஏற்பாடு செய்திருந்த ஸ்பெஷல் பஸ் அது. சேகரும் மீனுவும் ஒரு நண்பரின் உதவியோடு அதில் சேர்ந்து கொண்டார்கள். நீருவுக்கும் இடம் கிடைத்தது அதில். வழி நெடுகப் பாட்டு — தாளம் — சிரிப்பு — கிண்டல். இளமை பொங்கித் ததும்பிற்று ஒவ்வொன்றிலும். நீருவுக்கு ஒரு புது உலகத்துக்குள் புகுந்தது போலத் தோன்றியது. அதுவரை அநுபவித்திராத ஒரு விடுதலை உணர்ச்சி; ஏதோ மடை திறந்தது போல.

சேகரும் மீனுவும் விளையாட்டும் சிரிப்புமாக, ஒதுங்கிப் போகும் நேரங்களில் மட்டும் அவள் மனம் ஏங்கும். மணி இங்கே இருந்திருந்தால்? ஆனால் அவனுக்கு இதைப் போன்ற பொழுதுபோக்குகளில் ஏது ஈடுபாடு? இந்த நெஞ்சுத் துடிப்பு?

அடுத்த இரண்டு வாரங்களும் மணி வரும் நேரங்களிலெல்லாம் அவள் எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தாள். பேசினாலும் மீனுவுடன், வேறு சிலருடன் வெளியே போய்வந்த அனுபவங்களையே பேசினாள். ஆங்கிலப் படம், கிரிக்கெட் மாட்ச.... சித்திரக் கண் காட்சி .... பாப் மியூஸிக்.... அவைகளில் உண்மை உண்டு. கொஞ்சம் கற்பனையும் உண்டு.

அன்று நீருவைக் 'கொஞ்சம் முன்னால் கிளம்பி வரும்படி 'போன்' செய்தாள் மீனு.

''முடியவில்லை என்றால் நேரே 'மெரீனா'வுக்கு வந்துவிடு. எங்களை அங்கே பார்க்கலாம்.''

''இன்றைக்கு வேண்டாம் மீனா. ப்ளீஸ்.''

''ஏன்? என்ன விஷயம்? மணி எங்கே யாவது கூப்பிட்டிருக்கிறாரா ?''

'' ஆமாம். அதே 'மெரீனா'வுக்குத்தான். என்னால் மறுக்க முடியவில்லை. பாவம், குழந்தையைப் போலச் சிரித்துக் கொண்டு, நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடு மாறுகிறார்.''

'' நீ ரொம்ப 'வீக்'. விட்டுக் கொடுத்துப் போகிறாய்.''

''இல்லையில்லை மீனா. நாளையிலிருந்து நாம் போட்ட திட்டத்தின்படிதான்.....''

''சரி. சரி. குட் லக்!'' என்று மீனா போனை வைத்துவிட்டாள்.

கடற்கரையில் அன்று மகிழ்ச்சி குமிழி விட்டுப் பொங்கப் பேசிக் கொண்டிருந்தான் மணி. அளவுக்கு மீறிய பரிவு. வரம்பு மீறிய கனிவு. அலையிலும் காற்றிலும் ஒரு தனி உற் சாகம் மிதந்து வந்தது போலத் தோன்றிற்று.

மாலை இருள் முதிர்ந்துவிட்டது. விளக்குகள் கண் சிமிட்டத் தொடங்கிவிட்டன. அவன் எழுந்து நின்றான். அவள் இலேசாய்ச் சிரித் தாள். அவன் ஏதோ சொல்வான் என்று காத்திருந்தாள். மனம் இல்லாமல் பிரியும் பெருமூச்சு. அவனிடம் அதற்கு எதிரொலி இல்லை.

சேகரைப்போல் ஒரு 'ஜோக்', ஒரு சிரிப்பு, யாரும் பாராதபோது மீனாவின் மூக்கில் ஒரு செல்ல நிமிண்டல் — எதுவும் இல்லை மணியி டம். எழுந்து போகும்போது மறுபடியும் எப் போது சந்திக்கப் போகிறோம் என்பது பற்றிய யோசனைகூட இல்லை. சொல்லவும் இல்லை. அறைக்குத் திரும்பும்போது சாலையில் மௌனசாட்சியாக ஒளியைச் சிந்திக்கொண்டு நின்ற விளக்குக் கம்பங்களைப் பார்த்தபடி நடந்து வந்தாள். அவளுக்குள் சுழன்று சுழன்று வந்தது யோசனை. ஒவ்வோர் எல்லை யாக, ஒவ்வொரு படியாக, அவள் தாண்டி வந்தாயிற்று. என்ன முடிவு காத்திருந்தது அவளுக்கென்று ?

மீனா கட்டிலில் படுத்துக் கொண்டிருந் தாள்; கடிதம் எழுதும் சகுந்தலையைப்போல். மார்புக்கு நேரே பத்திரிகை பிரிந்து கிடந்தது. அழகழகான படங்கள். சுவையான கதைகள். ஆண் பெண் படங்கள். அவர்களை இணைக்கும் கதைகள். திரைப்பட ஜோடிகள். அவற்றை ஆவலுடன் கவ்விய இரு கண்கள். அவளைப் பார்த்ததும் மீனாவின் பார்வை தெறித்து நிமிர்ந்தது.

'' என்ன ஆயிற்று நீரு?''

''ஸ்பெஷலாக ஏதும் இல்லை. உன்னுடைய திட்டம் இன்னும் கொஞ்ச நாளைக்குத் தேவை என்று நினைக்கிறேன்.''

'' ஆனால் கொஞ்ச நாளைக்கு உனக்கு யோசனை சொல்லுகிறவர்கள் இல்லை. நான் இரண்டு வாரங்கள் ஊருக்குப் போகிறேன். வரச் சொல்லிக் கடிதம் வந்திருக்கிறது.''

''எப்போது ?''

'' நாளை மறு நாள். நான் திரும்பி வருவ தற்குள் நீ எவ்வளவோ தேறி யிருப்பாய் என்று நினைக்கிறேன்.''

மீனா கிளம்பி விட்டாள்.

அவள் டாக்ஸியில் ஏறிப் போன பிறகும் அந்தப் பிரஞ்சு சென்டின் மணம் கமழ்ந்தது, அவள் பேச்சையும் நினைவையும் போல. கொஞ்ச நேரம் எதுவும் செய்யத் தோன்றாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள் நீரஜா. வேறு யாருடன் அவள் பொழுது போக்குவாள் ? எப்படி ? மணியைச் சந்திக்கும்போது என்ன வென்று சொல்லி அவனைச் சீண்டுவது? மணி யிடம் முன்னைப் போலப் பேசலாம்; பழக லாம்; கேட்கலாம். ஆனால் ஏனோ அந்த யோசனை சலிப்பாக இருந்தது. அவளுக்குப் பிடிக்கவில்லை அது.

இரண்டு நாட்களாக மணி கண்ணில்பட வில்லை. அன்று பிற்பகல் நேரம். சிற்றுண்டிக் காகக் கிளம்பிக் கொண்டிருந்தாள். எதிர் பாராமல் மணி வந்துவிட்டான்.

'' வெளியே ஒன்றாகப் போய்ச் சாப்பிடு வோமே ?''

அவளுக்கு வியப்பாக இருந்தது. ஆனாலும் மறுக்க மனமில்லாமல் அவனுடன் கிளம்பிப் போனாள். டாக்ஸியில் போய்ச் சற்றுத் தள்ளினாற் போல இருந்த ரெஸ்டாரெண்ட் ஒன்றிலே, தனி அறையில் அமர்ந்தார்கள். அவன் சொல்லி வரவழைத்தது அவளுக்குப் பிடித்த 'ஸ்வீட்'.

'' என்னுடைய வேலையைப் பற்றி நீ ஏது வுமே கேட்பதில்லையே நீரு ?''

'' ஓ ! எப்படி இருக்கிறது?''

'' எனக்குச் சொல்ல வேண்டும் என்ற ஆசை இல்லை. கொஞ்ச நாட்களாக நீ என் னுடன் சரியாகப் பேசுவதுகூட இல்லை. உடம்பு சரி இல்லையா ?''

''இல்லையே ?''

குமாரி மாதங்கி பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணி. பாலசரஸ்வதியிடம் பரதம் பயின்று, சாஸ்திரீய நிருத்திய, அபிநயங்களில் ஏராளவுக்குத் தேர்ச்சியடைந் திருக்கிறார். பரத கலையை வளர்த்துக் கொள்ளக்கூடிய உற்சாகமூட்டும் குடும்பச் சூழ்நிலை அமைந்திருக்கிறது. எனவே, குமாரி மாதங்கியின் கலை மேலும் வேக மாக வளரும் என்று எதிர்பார்க்கலாம்.



எழுதியது யாரோ?

22-10-72 கல்கி இதழ் வட்ட மேஜை பகுதியில் திருப்பயிற்றங்குடி திரு எஸ். சொக்கலிங்கம் என்பவர் எழுதியதாக ஒரு கடிதம் இடம் பெற்றுள்ளது. மேற்படி கடிதத்தைத் நாம் எழுதவில்லை என்றும் வேறு யாரோ தம் பெயரில் அக்கடிதத்தை எழுதி விருப்பதாகவும் திரு சொக்கலிங்கம் தெரிவித்துக் கொள்கிறார்.

"பின்னே என்னை ஏன் ஒதுக்குகிறாய்? என்ன மாறுதல் உன் மனத்தில்?"

அவள் மனத்தில் ஒரு மகிழ்ச்சி அலை புரண்டது? இதோ அவளுடைய திட்டத்தின் வெற்றி உருவடைந்து கொண்டிருக்கிறது. அடுத்து மணி என்ன சொல்லப் போகிறான்?

"நான் அப்படிச் செய்யவில்லையே?"

அவன் முன்னால் இருந்த 'ஸ்வீட்'டையும் அவள்புறமாக நகர்த்தினான் மணி. அவன் குரல் பொருமிற்று. "மறுபடியும் நாம் இப்படி உட்கார்ந்து சாப்பிடப் போவதில்லை."

"நான் ஏதும் நினைத்துச் செய்யவில்லை —" நாற்காலியைச் சுழற்றித் திருப்பினாள்.

"நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். உன் வாழ்க்கையில் வேறு யாருக்கோ இடம் கொடுத்திருக்கிறாய் நீரு. ஒவ்வொரு நாளும் மீனுவுடன் நீ போனதாகச் சொன்னதெல்லாம் பொய். யாரது?"

நீரு சிரித்தாள். அவனிடம் அவளுக்கு அளவு கடந்த பரிவு எழுந்தது.

"என்ன இதெல்லாம்? நீங்கள் என்னிடம் இப்படிச் சண்டை போடமாட்டீர்களா என்று தான் ஏங்கிக் கொண்டிருந்தேன். அதற்காகத் தான் உங்களை வம்புக்கு இழுத்தேன். இந்த யோசனையே மீனு சொல்லிக் கொடுத்தது தான். அவளுக்குத் தெரியும். உங்களிடமே சொல்லச் சொல்லுகிறேன், பாருங்கள். இன்னும்கூடக் கோபமா?"

"எனக்குத் தெரியும். கள்ளி!" — சட்டென்று அவன் முகம் சிரிப்பில் மாறிற்று.

"எப்படி?" — அவள் விழிகள் வளையல்களாயின.

"சேகரும் நானும் ஒன்றாகப் படித்தவர்கள். கிளப்பில் அடிக்கடி சந்தித்துக் கொள்பவர்கள்!"

ஒரு குறும்புச் சிரிப்புடன், 'ஸ்வீட்'டை எடுத்து அவள் வாயில் போட வந்தான் மணி. இதழ்களை இறுக மூடிக் கொண்டாள் நீரு. கள்ளிக்கு ஏற்ற கள்ளன்தான்!

அன்று இரவு அறைக்குத் திரும்பியதும் மீனுவுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி முடித்தாள். கடைசியில் "உன்னால் முடிந்தால் உடனே வா" என்று எழுதியிருந்தாள்.

அடுத்த வாரம்.

மீனு திரும்பி விட்டாள். காலையில் அவள் வந்தபோது நீரு வேலைக்குப் போய்விட்டாள். மாலையில்தான் சந்திக்க முடிந்தது. உல்லாசமாக ஒரு மெட்டை முனகியபடி அறைக்குள் நுழைந்த நீருவை வியப்போடு பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் மீனு. அவள் முகத்தில் வழக்கமான களை இல்லை. பார்வை துவண்டது. பெருமூச்சு உதிர்ந்தது.

நீருவினால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

"ஓ, மீனு! இனிமேல் எனக்கு உன் திட்டம் வேண்டாம். ஆனால் நீ இல்லாமல் இப்படி ஒரு மாறுதல் வந்திருக்க முடியாது. ஒரு வாரமாக மணி ரொம்பக் குழைகிறார் என்னிடம். உன்னிடம் நிறையப் பேச வேண்டியிருக்கிறது" என்று அவள் மீது கையைப் போட்டு அணைத்த வண்ணம் அருகே உட்கார்ந்தாள். "இப்போது அவர் ஒரு கட்டடத்துக்கு 'பிளான்' போட்டுக் கொண்டிருக்கிறார். என்ன கட்டடம் தெரியுமா அது? நாங்கள் குடி போக வேண்டிய வீடாம்!"

மீனு பதில் பேசாமல் நிமிர்ந்து பார்த்தாள். அவள் மனத்தில் ஏதோ குழப்பம். அவள் பார்வையில் கேள்வி குமுறிற்று.

"ஏன் என்னவோபோல் இருக்கிறாய் மீனு? உடம்பு சரி இல்லையா?"

கைகளை மாலையாக நீருவின் மேல் போட்டுக் கொண்டாள் மீனு. முகத்தை அருகே இழுத்தபடி, "கன்கிராஜுலேஷன்ஸ் நீரு... ஆனால்..." என்று நிறுத்தினாள்.

"என்ன ஆனால்?"

"உன் உதவி எனக்குத் தேவையாக இருக்கலாம். உனக்குச் சொல்லிக் கொடுத்த திட்டம் எனக்கே தேவைப்படலாம். நீயும் மணியும் எனக்கு உதவி செய்ய வேண்டும்."

"எதற்கு?"

"இன்றைக்கு நானே சேகரைத் தேடிக் கொண்டு போனேன். அவர் என்னிடம் வழக்கம் போலப் பேசவில்லை. பழகியபோது கூட அதில் வழக்கமான தெம்பு இல்லை. வெளியே எங்கேயாவது போகலாம் என்று கூப்பிடக்கூட இல்லை. அதுவும் பத்து நாட்களுக்குப் பிறகு சந்திக்கும்போது!" அவள் மார்புத் துடிப்பு கேட்டது நெஞ்சை ஒற்றிய அணைப்பில்.

ஒரு கணம் யோசனையுடன் தயங்கினாள் நீரு. பிறகு விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள். மீனு அவள் தோளைப் பற்றிக் குலுக்கினாள்.

"என்ன நீரு? எதற்காக இப்படிச் சிரிக்கிறாய்? சொல்லிவிட்டுத்தான் சிரியேன்!"

"உனக்கு நான் வேண்டுமென்றேதான் எழுதவில்லை. நேரில் சொல்லலாம் என்று இருந்தேன். மறந்து விட்டேன்."

"என்ன அது?"


"இவரும் சேகரும் வெகுநாட்களாகப் பழகிய நண்பர்கள். நாம் இருவரும் திட்டம் போட்டது போல், அவர்களும் திட்டம் போட்டிருக்கிறார்கள். நான் மணியைச் சீண்டியதைப் போல, நீயும் அவரை வம்புக்கு இழுக்க வேண்டும் என்று சேகர் ஆசைப்படுகிறாற்போல் இருக்கிறது. பாவம்! இப்போது உன் சாமர்த்தியம்!" என்று அவள் முகத்தைக் கையில் எடுத்துச் செல்லமாகக் குழைந்தாள் நீரஜா.


NEW! SUPER
Surf
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப்,
வேறெந்த சலவைப்
பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது ஸூப்பர் ஸர்ஃப். கணமறைவான அழுக்குகளையும் அகற்றிவிடும். காண்போர் பொறாமைப்படும் கற்பனை கடந்த வெண்மை. கேட்பானேன், இந்தியாவின் தலைசிறந்த ரகம் : ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்

பெண்களுக்குப் புதியதோர் வாய்ப்பு

புதியதொரு சேமிப்புத் திட்டத்தை பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திரா காந்தி ஏப்ரல் முதல் தேதி துவக்கி வைத்தார். மாதர் தலைமையிலான வட்டார சேமிப்புத் திட்டம் என்னும் இத்திட்டம் அளிக்கும் மிகச் சிறப்பான பகுதி நேர வேலை வாய்ப்பைப் பயன்படுத்தினால்

- உங்களது குடும்ப வருவாய் கூடுதலாகும்
- உங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன் படுத்தலாம்
- சமூகத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளலாம்
- நாட்டின் நலனுக்குப் பணியாற்றலாம்



சேமிப்பு மாதர் தலைவராக உங்கள் பணி

நீங்கள் வசிக்கும் வட்டாரத்தில் உள்ள வீட்டுப் பெண்மணிகளுடன் தொடர்பு கொள்வது; முறையாக பணம் சேமிக்குமாறு அவர்களைத் தூண்டுவது; அவர்களுடைய சேமிப்புத் தொகைகளை ஒவ்வொரு மாதமும் திரட்டுவது; அந்தத் தொகைகளை இதற்கென ஒதுக்கிய தபால் நிலையத்தில் கொடுப்பது.

நீங்கள் திரட்டிய பணத்திற்கு $2\frac{1}{4}\%$ கமிஷன் உங்களுக்குக் கிடைக்கும்.

சேமிப்பு மாதர் தலைவர்கள் நாட்டின் எல்லா நகரங்களுக்கும் முக்கியமான ஊர்களுக்கும் தேவைப்படுகிறார்கள்.

விவரங்களுக்கு மனுச் செய்யுங்கள்!

நேஷனல் சேவிங்ஸ் கமிஷனர்
தபால் பெட்டி எண். 96
நாக்பூர்.



davp 72/19

சொல்கிறோம். இந்த ஆறுகள் அடித்துக்கொண்டு வந்த வண்டல் மண் இங்கு படிகிறது. அதனால் நிலம் நல்ல வளம் பெறுகிறது. பயிர்கள் இங்கு நல்ல செழிப்பாக வளர்கின்றன்.....கங்கையை இந்துக்கள் புனிதம் வாய்ந்ததாகப் போற்றுகின்றனர். கங்கைக் கரையிலுள்ள ஹரித்துவாரம், அலகாபாத், வாரணசி (காசி) ஆகிய நகரங்கள் புகழ்பெற்ற புண்ணியத் தலங்களாகும்.''

இவ்வாறு குழந்தைகளுக்குச் சுவையாக இருக்கக் கூடிய பல தகவல்களைக் கூறுவ தோடு கங்கையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான செய்திகள் எல்லாம் இந்தக் கட்டுரையில் இடம் பெற்று விடுகின்றன! இது போலவே நான்காம் தொகுதியும் அமைந்திருக்கிறது. புத்தகத் தைக் கையில் எடுத்ததுமே குயில் கூவுகிறது:

''....பெண் குயிலுக்கு மட்டும் உடலில் வெண் புள்ளிகளும் சிறு வெள்ளைக் கோடுகளும் உண்டு. ஆண் குயில்தான் இனிமையாகக் கூவும். பெண் குயிலுக்கு அவ்வாறு கூவத் தெரியாது. குயிலுக் குக் கூடு கட்டத் தெரியாது. ஆதலால் காக்கை யின் கூட்டில் காக்கைக்குத் தெரியாமல் முட்டை யிடுவது இதன் வழக்கம். ஆண் குயிலைக் கண்டால் காக்கைகள் துரத்திச் செல்லும். அச்சமயம் பார்த்துக் காக்கைக் கூட்டில் பெண் குயில் முட்டை இடும். அதேவேளையில் காக்கையின் முட்டை ஒன்றைத் தூக்கிச் சென்று அழித்து விடும். குயில் முட்டைக்கும் தன் முட்டைக்கும் வேறுபாடு தெரியாத காக்கை, எல்லா முட்டைகளையுமே அடை காத்து வரும். குஞ்சு பொரித்த பிறகும் காக்கை குயில் குஞ்சுக்கு உணவு ஊட்டி வரும். பறப்பதற்குச் சக்தி பெற்றவுடன் குயில் குஞ்சுகள் பறந்தோடி விடும்.''

எத்தனை ரசமாக இருக்கிறது பார்த் தீர்களா? அதோடு இத்தனையும் ஆதார பூர்வமான உண்மைகள். இப்படியேதான் ஒவ்வொரு தலைப்பும் அமைந்திருக்கிறது.

தமிழுக்குச் செய்கிற சேவையாகவே கருதி அரசாங்க உதவியும், ஐக்கிய நாடுகள் நிறுவ னத்தின் உதவியும் பல பெரியோர்களின் ஒத்துழைப்பும், ஆசிரியர் குழுவின் திறனும், தலைவர் அவிநாசிலிங்கம் அவர்கள் காட்டு கிற சடற்ற ஆர்வமும் எல்லாமும் சேர்ந்து இத்தகைய மகத்தான பணியை இயக்கி யுள்ளன. இந்த அரிய பணிக்குத் தமிழ்க் குழந்தைகளோடு சேர்ந்து நாமும் நல்வரவு கூறுவோமாக! — சோழு

கிடைக்குமிடம்: ஓரியண்ட் லாங்மன் லிமிடெட், 36A, அண்ணா சாலை, சென்னை-2. விலை: ஒவ்வொரு தொகுதியும் ரூ. 10.00.

தேன்நிலவு அல்வா!

(இதன் பெயரும் புதிது, ருசியும் இனிது.)

முற்றிய பூசணிப் பத்தை 1, இரண்டு பலம் உள்ள கேரட், உருளைக் கிழங்கு 2 பலம், துருவிய தேங்காய் 1 மூடி, வள்ளிக் கிழங்கு 2 பலம், முந்திரி 50 கிராம் திராட்சை 50 கிராம், நெய் 1 ஆழாக்கு, கனிந்த பூவன் பழம் 3, பால் 1 ஆழாக்கு, ஏலப் பொடி 1 டீஸ்பூன், பச்சைக் கற்பூரம் 1 குன்றிமணி எடை, குங்குமப்பூ 1 குன்றிமணி எடை.

பூசணிப் பத்தையைத் தோல் சீவித்து துருவிக் கொள்ளவும். கேரட்டையும் அதே போல் செய்ய வும். உருளைக் கிழங்கையும், வள்ளிக் கிழங்கையும் வேக வைத்துக் கட்டி இல்லாமல் பொடி செய்து கொள்ளவும். வாழைப் பழத்தைத் துண்டு துண் டாக நறுக்கிக் கரண்டியால் மசித்துக் கொள்ளவும். துருவிய பூசணிக்காயைப் பிழிந்து கொள்ளவும்.

ஒரு சுத்தமான வாணலியில் பாலை ஊற்றிக் காயும் போது, துருவிய கேரட்டையும், பூசணிக் காயையும் போட்டுக் கிளறவும். காய்கள் பாலில் வெந்து வதங்கி யதும், உருளைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு, தேங்காய்ப் பூ, பழம் ஆகியவைகளைப் போட்டுக் கிளறவும். அடுப் பைச் சீராக எரியவிடவும். எல்லாப் பதார்த்தங்களும் நன்றாகக் கலந்து நீர் வற்றிப் பந்துபோல் சுருண்டு வந்ததும், சர்க்கரையைப் போட்டுக் கிளறி, மீண்டும் லேகியம் போலானதும் முந்திரி, திராட்சையை வறுத்துப் போட்டுக் கிளறிக் கீழே இறக்கி, வாசனைச் சாமான்களைக் கலந்து, ஒரு தட்டில் நெய் தடவி அல்வாவைப் பரப்பி இளஞ் சூட்டில் சாப்பிடலாம்.

இதற்குக் கலர் வேண்டியதில்லை. தேவை யுள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளலாம். பொதுவாக, இந்த மாதிரி அல்வாவுக்கு நெய் கொஞ்சம் கூட விட்டதால் குற்றமில்லை. அல்வாவின் அளவு அதிகம் ஆவதோடு பள பளப்பாகவும் இருக்கும். ஆனால் முறுகிப் போகாமல் செய்ய வேண்டும்.

கோதுமை அல்வா, பாதாம் அல்வா இவை களைத் தவிர, மற்ற அல்வாக்களை இரண்டு நாட்களுக்கு மேல் உபயோகிப்பது உசித மில்லை.

இது போன்ற நூதனமான இனிப்பு, கார வகைகளைப் பற்றி மட்டுமின்றி அன்றாடம் நாம் சுவைக்கின்ற பல சாதாரண உணவுப் பொருள்களைச் சமைக்கும் விதத்தையும் ஜெமினி மகாதேவன் ''சமைக்கலாமே?'' என்ற புத்தகத்தில் விளக்குகிறார். தேநீர் தயா ரிப்பது முதல் தேன் நிலவு அல்வாவரை எதையும் விட்டு வைக்கவில்லை. புத்த கத்தைப் புரட்டும் போதே நாக்கில் ஜலம் சொட்டுகிறது!

சமையலறைக்குள் புதிதாக நுழை யும் பெண்ணாயினும் சரி, 'மாறுதலாக என்ன சமைக்கலாம்?' என்று யோசிக் கும் இல்லத்தரசியானாலும் சரி, இந் நூல் அவர்களுக்குப் பயன்படும்.

பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14. விலை ரூ. 4.90.




"நீங்கள் அறிவுச் சுடர்களாக விளங்க வேண்டும் என்பதே எனது ஆசை" என்று குழந்தைகளை நோக்கிக் கூறுகிறார், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரான தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள்! குழந்தைகள் கலைக் களஞ்சியத்தின் முன்னுரையில் இவ்வாறு கூறுகிறார் அவர். அந்த ஆசையைச் சிறந்த முறையிலே நிறைவேற்றும் வகையில் ம. ப. பெரியசாமித் தூரன் அவர்களும் அவருடைய திறமைமிக்க பதிப்பாசிரியர் குழுவினரும் சேர்ந்து, இதுவரை ஐந்து தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே பெரியவர்களுக்கான கலைக் களஞ்சியத்தைச் சீரிய முறையில் வெளியிட்டு நல்லனுபவம் கைவந்த தூரன் அவர்களும் அவருடைய துணையாசிரியர்களும் இப்போது குழந்தைகளுக்கான இந்தத் தொகுதிகளை வெளியிட்டு வருவதன் மூலம், தமிழ் மக்கள் பெருமைப்படக்கூடிய விதத்தில் ஓர் அரும் பெரும் தமிழ்ப் பணியைச் செவ்வனே செய்திருக்கிறார்கள்.

இதுவரை வெளிவந்துள்ள நான்கு தொகுதிகளையும் போலவே இப்போது வந்துள்ள ஐந்தாம் தொகுதியும் கவர்ச்சியாக அமைந்து, குழந்தைகளின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து வழங்குகிறது. ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள தொகுப்புக்களை அப்படியே மொழிபெயர்த்து வெளியிடாமல் தமிழுக்கு என்றே தனியாகக் கட்டுரைகள் எழுதி, தனிப்பட்ட முறையில் வண்ணப் படங்களையும் வரையச் செய்து, ஒவ்வொரு தொகுதியும் ஒரு புதிய இலக்கியப் படைப்பாகத் திகழும்படி இந்தக் கலைக் களஞ்சியம் அமைந்திருக்கிறது. குழந்தைகளுக்காக ஏற்பட்ட நூல்கள் என்பதை மனத்தில் நினைவு வைத்துக் கொண்டு, அளவுக்கு மீறிய செய்திகளைத் திணித்துத் தலைவலி உண்டாக்காமல், வயதான பிறகு மேலும் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய ஆர்வத்தைக் குழந்தைகள் மனத்தில் உண்டாக்கும் விதத்தில் இந்தக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. அதோடு எளிய நடையில் எளிய முறையில் ஒவ்வொரு தலைப்பிலும் அதற்குரிய கவர்ச்சியான செய்திகளை வரிசையாகத் தந்து சுவையோடு அறிவூட்டும் கட்டுரைகளாக இவை திகழ்கின்றன! இது மிகவும் பாராட்ட வேண்டிய ஒரு சிறப்பாகும். கட்டுரைகளைக் கோவைப்படுத்தியுள்ள முறையிலும், கையாண்டுள்ள தமிழ் நடையிலும், சொல்லும் விதத்திலும், தெளிவும் அழகும் ஒளி வீசுகின்றன! ஐந்து தொகுதிகளிலுமே இந்தச் சிறப்புக்களைக் காண்கிறோம். சான்றாக மூன்றாவது பகுதியைப் பாருங்கள். புனிதமான கங்கையில் ஆரம்பித்து, இனிப்பான கரும்பின் சுவையை ஊட்டிச் சென்று, கும்மி கோலாட்டத்தின் இசையோடு முடிகிறது அது! கங்கையைப் பற்றிய கட்டுரை என்றால் வெறும் பூகோளப் பாடமா? இல்லை. இதோ பாருங்கள்:


"கங்கையில் நீர் எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும். மழை காலத்தில் மழை நீர் இதில் வெள்ளமாகப் பெருக்கெடுக்கும். கோடை காலத்தில் இமய மலையில் பனி உருகி இவ்வாற்றில் ஓடும். கங்கை ஆறு கடலில் கலக்குமுன் பல கிளை ஆறுகளாகப் பிரிந்து விடுகிறது. இந்தப் பகுதியைக்-கழிமுகத் தீவு என்று







நவராத்திரி கலைத்திறன்



இவ்வாண்டு நவராத்திரி கொலுவில் நானே செய்த சுமார் நூற்றைம்பது பொம்மைகளை வைத்து நவராத்திரி கொண்டாடினேன். எட்டு கை காளி உள்பட எல்லாத் தெய்வப் பொம்மைகளும், நவநாகரிகப் பொம்மைகளும், மேல்நாட்டுப் பாணி பொம்மைகளும் உருவாக்கி வைத்திருந்தேன். மற்றும் கொலு அழகு பெற மலை, மண்டபம், கல்யாணப் பந்தல் போன்றவைகளை நானே தயார் செய்து பல வண்ணங்களைத் தீட்டி வைத்திருந்தேன்.

--சாந்தா பாஸ்கம்

■

1. திருமலை தெய்வம்.
2. மீனாக்ஷி திருக்கல்யாணம்.
3. சரஸ்வதி, மீனாக்ஷி, லக்ஷ்மி.


புதுமையிலும் புதுமை!
லக்மே
அல்ட்ரா-சில்க்
பேஸ் பவுடர் மற்றும் காம்பாக்ட் மேக்-அப்
இந்தியப் பெண்மணிகளின்
மேனியெழிலைப் பெருக்க
எட்டு எழில் கொஞ்சும்
வண்ணங்கள்
இந்தியப் பெண்மணி
களின் மேனி வண்ணங்
களுக்குப் பொருந்தி மெரு
கூட்டுவதற்காக, லக்மேயின்
புதிய அல்ட்ரா சில்க் முகப் பவுடர்
விசேஷமாகத் தயாரிக்கப் பட்டுள்ளது.
இந்த முகப்பவுடர் உங்களை மணிக்
கணக்கில் எழில் கொஞ்சும்
தோற்றத்துடன் திகழச் செய்யும்.
நாள் முழுவதும் நீங்கள் எழில் வடிவமாக,
அழகுப் பிம்பமாகத் தோற்றமளிப்பீர்கள்.
அதன் இரகசியம்? அழகான புதிய
பெட்டியில் வரும் பரிபூரண ஒப்பனை
சாதனம்—லக்மேயின்
அல்ட்ரா—சில்க் காம்-
பாக்ட். இலேசாக அழுத்தப்
பட்டுள்ள இந்த அருமையான முகப்
பவுடர் உங்கள் மேனியை சீராகத்
தழுவி, ஒப்பனையை சிறப்பாகப்
பாதுகாக்கிறது.
லக்மே அல்ட்ரா-சில்க் பேஸ் பவுடர்
மற்றும் காம்பாக்ட் மேக்-அப் எட்டு
உள்ளங் கவரும் வண்ணங்களில் வருகிறது.
டெண்டர் சில்க், ஸாட்டின் சில்க், பீட் சில்க்,
ரோஸ் சில்க், பீஜ் சில்க், கோல்ட் சில்க்,
ஸம்மர் சில்க், காச்சரேல் சில்க்.





4. வேளாங்கன்னி.
5. மதுரா காளி.
6. திருமண மண்டபம்.
7. கல்யாணக் காட்சி.





'நவராத்திரியின்போது நீங்களாகவே தயாரித்த கலையழகு மிக்க பொருட்களைக் கொலுவில் வைத்திருந்தீர்களா? அப்படியானால் புகைப்படம் எடுத்து அனுப்புங்கள்' என்று கேட்டிருந்தோம். ஏராளமான பெண்மணிகளும் ஆண்களும்கூட மிகுந்த உற்சாகத்துடன் இப்போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அனைவருக்கும் நன்றி. பரிசு பெறுபவர்கள், பெறாதவர்கள் அனைவரது கலைத் திறனும் வளர்க என மனப் பூர்வமாக வாழ்த்துகிறோம்.

முதல் பரிசு: ரூ. 100/- பெறும் ஸ்ரீமதி சாந்தா பாஷ்யத்தின் (C43, ராஜம் சாலை, டி. வி. எஸ். நகர், மதுரை – 3) கலைத் தயாரிப்புக்களில் சில இந்தப் பக்கங்களில் இடம் பெறுகின்றன.

மற்றைய பரிசு விவரங்கள் அடுத்த இதழில். — ஆசிரியர்

விஸிஸாம் புதிய மிர்ராபோ ஃபுல் வாயில் புடவைகள் 2/120x2/120 உயர்தர எகிப்திய பருத்தியால் உருவாக்கப்பட்டவை. 'ஆண்டிகிரஸ்' செய்யப்பட்டதால் என்றும் கசங்காது. மற்றும் பொருத்தமான ஃபுல் வாயில் ரவிக்கைத் துணிகள்.

இதர தயாரிப்புகள்: ஸ்டேலைக்ஸ், ஸ்ட்ரேஞ்சர் ஷர்ட்டிங்குகள் ● எலகன்ஸா சூட்டிங் ● லவ்லின் ஷர்ட்டிங் ● சில்வர்லேன், சில்வர் கிங் வேஷ்டிகள் ● மல் ● காடா.

உள்ளக் கிளர்ச்சி அலைகள்... வண்ணக் கவர்ச்சி சேலைகள்!



உங்கள் குடும்ப நண்பன்...CCM

தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

மார்க்கெட் செய்பவர்கள்: வெங்கடேஷ் வஸ்திராலயா

முறுக்கு

பாமா கோபாலன்

கூடத்தின் ஓரத்தில் தூணில் சாய்ந்து கொண்டு, மகன் சபேசனின் சட்டையில் கழுத்துப் பட்டையில் கிழிந்திருந்த பகுதியைத் தைத்துக் கொண்டிருந்தாள் விசாலாட்சி.

மகன் சட்டையைத் தடவும் பொழுதே, மகனை வருடுவது போலிருந்தது விசாலாட்சிக்கு.

ஐந்து வயதிலேயே தந்தையை இழந்து விட்ட சபேசனை அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்தது எவ்வளவு கெடுதலாக முடிந்து விட்டது ?

தோள் வரையில் முடி ! கவிழ்க்கப்பட்ட கத்தியம் போல் கிருதா; முறுக்கிவிட்ட மீசை....

ஒரே ஒரு நல்ல குணம். எவ்வளவு நேரமானாலும் இரவு வீடு திரும்பி விடுவான்....

தன் மகன் ஒரு பெண்ணைச் சுற்றி வருகிறான் என்பதையும் அவள், கோயிலில் வெளிப் பிராகாரம் சுற்றி வரும்பொழுது அறிய நேரிட்டது ! இரு மாமிகள் வேண்டுமென்றே விசாலாட்சியின் காதுகளில் படும்படி பேசிக் கொண்டு போனார்கள் !

விசாலாட்சிக்குக் கவலை, மகன் சபேசன் அந்தப் பெண்ணைக் கைவிடாமல் கைப் பிடிக்க வேண்டுமே என்று !

இரவு மணி பத்து.


வாசலில் சைக்கிள் மணி கேட்டது.

சபேசன்தான்.


வாசல் கதவைத் திறந்தாள்.

'' ஹாய் அம்மா... ஸாரி.... வெரி ஸாரி..... கொஞ்சம் லேட் ஆயிடுத்து.... '' சைக்கிளை உள்ளே தள்ளியவாறு அவன் நுழைந்தான். காலணிகளை உதறித் தள்ளினான்.

மகன் உதறி எறிந்த காலணிகளை ஒழுங்காக எடுத்து வைத்த விசாலாட்சி, ''டேய்... அதிசயமாயிருக்கே! உன் வாயிலேருந்து சிகரெட் நாத்தம்தானே வரும்.... நெய் வாசனை வர்றதே.....'' என்றாள்.







''.....அம்மா... உன் மூக்கே மூக்கு!.... ஓ! என்ன ருசி தெரியுமா?.... நீயும் பண்றயே, கண்ணராவி....சே! உனக்குத் தெரியுமா அம்மா.... தெற்கு மாட வீதியிலே புதுசா கடை வைச்சிருக்கான். 'டேஸ்ட் லாண்ட்!' அடேயப்பா! என்ன கூட்டம், தெரியுமா? அதுவும் 'அந்த ஸ்பெஷல் முறுக்கு.....'' கண்களை மூடி அனுபவித்தான் மகன்!

'' போதுமே.... நீயும் உன் முறுக்குப் புராணமும்.... சரி, சரி, சாப்பிட வா.''

அம்மா சமையலறையில் நுழையும் சமயம், சமையல் அலமாரியிலிருந்த அஞ்சறைப் பெட்டியைத் திறந்தான். கசங்கிய ஐந்து ஒரு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

அவசரம் அவசரமாக அதை எடுத்துத் தன் பாண்ட் பையில் செருகிக் கொண்டான்!

சாப்பிடும் பொழுது அம்மா கேட்டாள்: ''ஏண்டா, நீ.... அந்த டாக்டர் வீட்டிலே குடியிருக்கிற.... பெண்ணை....''

''.....ஆமாம்மா.... உன்கிட்டே சொல்லணும்னு நினைச்சேன்...வந்தும்மா... நான்.... அவளை...'' அசடு வழிந்தான் மகன்.

''சரி...... வார்த்தையை விழுங்காதே. சாதத்தை முழுங்கு..... நான் அவளோட அம்மாகிட்டே பேசி முடிச்சு வைக்கிறேன்...''

''அம்மான்னா அம்மாதான்!'' என்று எச்சில் கையுடனே அம்மாவின் மோவாயைத் தொட்டான் சபேசன். ''சீ.... கையைத் தூர எடுடா!....''

*　*　*

மறு நாள் இரவு. பதினொரு மணி.

வழக்கமான காட்சிதான். ஆனால் ஒரு மாற்றம்.

சபேசன் சோர்வுடன் வருகிறான். விசாலாட்சியோ தெளிவுடன் இருக்கிறாள்.

'' என்னடா.... பேய் அடிச்ச மாதிரி...''

''போம்மா.... அந்தண்ணடா.... சே!''

'' என்னடா...? என்ன ஆச்சு?....''

'' சே! நண்பர்களாம் நண்பர்கள்!... நான் பணம் செலவழிச்சப்போ பாதாம் அல்வாவும், பாஸந்தியும் சாப்பிட்டவர்கள் இப்ப என்னடான்னா.... கண்டும் காணாமல் போறாங்க.... இடியட்ஸ்....''

'' என்னடா, உனக்கு 'ஞானோதயம்' ஆயிடுச்சா?''

''....வெவ்வவ்வே! ஞானோதயம்..... பெரிய... சே.... கடையிலே அவள் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியல்லியே....'' சட்டென்று உளறிவிட்டான் சபேசன்.

'' டேய்! என்ன ஆசை.... யாருடா அவள்....?''

'' ஓ! அம்மா.... 'டேஸ்ட் லாண்ட்' முறுக்கு பத்தி உங்கிட்டே சொன்ன மாதிரி அவகிட்ட — அதான் வதாவிடம் — சொன்னேன். இன்னிக்குத் திமிர்னு 'எனக்கு அந்த முறுக்குவேணும்'னு அடம் பிடிக்கிறாள்!... சரி, வாங்கிண்டு வரலாம்னு கடையிலே போனா... பர்ஸில் காசில்லே!...'' குமுறினான் சபேசன்.

விசாலாட்சி உள்ளே போனாள். சபேசன் அலமாரியிலிருந்த அஞ்சறைப் பெட்டியில் துழாவிக் கொண்டிருக்கும் பொழுது, விசாலாட்சி வந்து விட்டாள்!

'' பாவி மகனே! இந்தா இரண்டு ரூபாய்! உன் வருமானத்துக்கு மேலேயே ஊதாரித்தனமா செலவு செய்யறியே.... சொந்த வீட்டிலேயே திருடறியே.... சபேசா...! உன்னைச் செல்லமாக வளர்த்ததற்குப் பலன் இதுதாண்டா.... நீ கை வைக்கிறபோதெல்லாம், பணம் இருக்கணும்னுதானேடா, என் கை வலிக்க, முதுகொடிய வீட்டிலே முறுக்குச் சுற்றி, அதை விற்றுப் பணமாக்கி வைக்கிறேன்..... 'டேஸ்ட் லாண்ட்' ஸ்பெஷல் முறுக்கு.... உன்னைப் பெத்தவ செய்யற முறுக்குத்தாண்டா... அந்தக் கடைக்காரன் ஒரு முறுக்குக்குப் பதினைஞ்சு காசு தர்றான்.... தெரியுமா? நீ கூசாமல் அஞ்சு ரூபாயை அள்ளிண்டு போறயே.... அதற்காக நான் உழைக்கிறது எவ்வளவு தெரியுமா? டேய்! போனது போகட்டும். இந்தா.... இரண்டு முறுக்கு டப்பாவில் போட்டு வைச்சிருக்கேன். போய் அந்தப் பெண்கிட்டே கொடுத்துவிட்டு வாடா...'' என்று கண்கள் கலங்க முறுக்கை எடுத்தாள் விசாலாட்சி.

''அம்மா!'' என்றபடியே அவள் கால்களில் விழுந்தான் சபேசன்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

நீங்கள் இன்று எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பது முக்கியம் அல்ல, நாளைக்காக எவ்வளவு சேமிக்கிறீர்கள் என்பது தான் முக்கியம்

கரண்ட், சேவிங்ஸ், ஃபிக்ஸ்ட் மற்றும் ரெக்கரிங் டிப்பாஸிட் ஆகிய கணக்குகளை துவக்கவும், சேமிக்கவும் பல வசதிகளை நாங்கள் அளிக்கிறோம்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை காரியாலயம் :
கல்கத்தா



UCO-2/72

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

நான் சிங்கார் என்று சொன்னால் எனக்கு வேண்டியது



சிங்கார் தான்

Shingar

அவள் பிடிவாதக்காரி, ஆனால் கெட்டிக்காரி. விலைமலிந்த போலியைக் கொடுத்து அவளை ஏமாற்ற முடியாது.

அடுத்த முறை சிங்கார் வாங்கும் போது, சிங்கார் சின்னம் இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள். அட்டைப் பெட்டியில் பேக் செய்த சிங்கார் ஜாடிகளை வேண்டுமென வற்புறுத்தி, தரத்தையும் நம்பகத் தன்மையையும் உறுதி செய்துகொள்ளுங்கள்.



பாரமவுண்ட் ப்ராடக்ட்ஸ்
809, பிரசாத் சேம்பர்ஸ்,
பம்பாய்-4 (B. R.)

PRATIBHA-1811-34-TAM